வெளியீடு 8-2-99

Issued 8-2-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயற்கை வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 21, 1998 – தொகுதி 46– எண் 1

Tuesday the 21st April, 1998 – Volume 46 – No. 1

ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

slative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

ரு. 3.00]

[Price Rs. 3.00

21-4-1998

423/99

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-39 |
| 2. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சருக்குப் பிறந்தநாள் வாழ்த்து--** | 14 |
| 3. **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு நிலைமை குறித்து மத்திய அரசு உள் துறை உயர்மட்டக் குழுவின் அறிவிப்பும், மத்திய உள் துறை அமைச்சரின் கருத்தும் | 40-65 |
| 4. **கவன ஈர்ப்பு--** | |
| (அ) இந்திய முறை மருத்துவர்களை தாலுகா, நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளில் நியமனம் செய்யக் கோருதல் | 65-68 |
| (ஆ) கடலங்குடி கிராமத்தில் (மயிலாடுதுறை வட்டம்) இயற்கை எரிவாயுத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் கடிதம் பெற நடவடிக்கை | 68-71 |

பக்கங்கள்

5. அறிக்கைகள் அளித்தல்--

பொதுக் கணக்குக் குழு 71

6. அறிவிப்பு--

அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் 71

7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை
(ஆ) கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
(இ) கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்
} 71-141

*மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் 72,76,79, 126-136

திரு. டி. அமரமூர்த்தி 81-85

*திரு. ஜி.எல். வெங்கடாசலம் 85-90

*திரு. ஜி. நிஜாமுதீன் 90-93

திரு. அ.ல. தங்கவேல் 94-97

திரு. ப. கோவிந்தன் 98-101

திரு. செ. இராமலிங்கம் 101-104

டாக்டர் க. கிருஷ்ணசாமி 104-108

திரு. ஜி. பழனிசாமி 108-116

திரு. பி. வெங்கடசாமி 117-120

*திரு. என்.ஆர். அழகராஜா 120-126

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- 142-144

218457



D
V211,31'N 98
N98.461

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கோ.சி. மணி: நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி : போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் : நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் : தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு : உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் : பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் : தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி : கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் : பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி : வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி : வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

| | |
|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி : கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு. |
| 20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் : செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம். |
| 21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் | : மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் : கால்நடைப் பராமரிப்பு. |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் : மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம். |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு : ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர். |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் : சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு : கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் : மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம். |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | : **The Hon. Kalaignar M. Karunanidhi :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. **Minister for Education** | : **The Hon. Prof. K. Anbazhagan :** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | : **The Hon. Thiru Arcot N. Veerasamy :** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | : **The Hon. Thiru Nanjil K. Manoharan :** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | : **The Hon. Thiru Ko. Si. Mani :** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

6. **Minister for Agriculture** : **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** : **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** : **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** : **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** : **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** : **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** : **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** : **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** : **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** : **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** : **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Printing** : **The Hon. Thiru Pongaiur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press.

18. **Minister for Housing** : **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** : **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** : **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

| | |
|---|---|
| 21. **Minister for Animal Husbandry** | : **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. **Minister for Social Welfare** | : **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | : **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** | : **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi** | : **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. **Minister for Fisheries** | : **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

17. திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்
18. திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்
19. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
20. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
21. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
24. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
25. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
26. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
27. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
28. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
29. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
30. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
31. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
32. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
33. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
34. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
35. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
36. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என். ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ. அ. .. பவானிசாகர்
18. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்
19. ஆருண் ரஷீத், திரு. ஜே. எம். .. வில்லிவாக்கம்
20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

| | | |
|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | .. திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. தி. ப. | .. திருச்செங்கோடு |
| 24. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 25. | ஆனந்தன், திரு. பால. | .. வந்தவாசி (செ.வ.) |
| 26. | இரகுமான்கான், திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 27. | இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. | .. மேலூர் |
| 28. | இராசமாணிக்கம், திரு. பி. | .. ஒரத்தநாடு |
| 29. | இராசன், திரு. வி. பி. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 30. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. ஆண்டிமடம் |
| 31. | இராமசாமி, டாக்டர் வை. | .. பண்ருட்டி |
| 32. | இராமசாமி, திரு. கே. ஆர். | .. திருவாடனை |
| 33. | இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | .. கம்பம் |
| 34. | இராமச்சந்திரன், திரு. சி. இரா. | .. தொண்டாமுத்தூர் |
| 35. | இராமச்சந்திரன், திரு. மா. | .. திருவோணம் |
| 36. | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 38. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 39. | இராமஜெயம், திரு. ந. பூ. | .. மயிலாப்பூர் |
| 40. | இராஜரெட்டி, திரு. ச. | .. தளி |
| 41. | இராஜேந்தர், திரு. டி. | .. பூங்கா நகர் |
| 42. | இளங்கோ, திரு. கோ. | .. அவினாசி (செ.வ.) |
| 43. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 44. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |
| 45. | உபயதுல்லா, திரு. எஸ். என். எம். | .. தஞ்சாவூர் |
| 46. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 47. | கணேசன், திரு. கே. சி. | .. ஜெயங்கொண்டம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. பாபநாசம் |
| 51. | கருப்புசாமி, திரு. டி. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 52. | கன்னையன், திரு. க. | .. தொட்டியம் |
| 53. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. கிருஷ்ணகிரி |
| 54. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 55. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. நாங்குநேரி |
| 57. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. வேடசந்தூர் |
| 58. | குண்டன், திரு. டி. | .. உதகமண்டலம் |
| 59. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. குத்தாலம் |
| 60. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 61. | குழந்தை தமிழரசன், திரு. | .. விருத்தாசலம் |
| 62. | கோதண்டம், திரு. ஏ. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 63. | கோபால், திரு. பா. | .. மேட்டூர் |
| 64. | கோபு, திரு. சி. | .. அணைக்கட்டு |
| 65. | கோமதி சீனிவாசன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 66. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ. ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு. பெ. .. வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி. பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ். ஆர். .. பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ. ஏ. பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ. ஆர். ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ. ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி. ஆர். .. ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி. சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி. என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ. லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ. ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராயநகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு. ர. கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160 புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என். கே. தே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ். எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்றாம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ. செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ். எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி. ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா. மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ. மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

203. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
204. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
205. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
206. ராமசாமி, திரு. ஏ. எம். .. ஆத்தூர்
207. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
208. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
209. ராஜேந்திரன், திரு. எஸ். கே. .. சத்தியமங்கலம்
210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். .. காங்கேயம்
211. லட்சுமணன், திரு. வி. கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
212. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி
213. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
214. விஜயகுமார், திரு. கே. எம். .. சாத்தூர்
215. விஜயன், திரு. டி. சி. .. திருவொற்றியூர்
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி
217. வீரப்பன், திரு. கே. கே. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச. க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பி. வி. எஸ். .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
224. வேடம்மாள், திருமதி ஏ. ஆர். .. அரூர் (செ.வ.)



225. வேணு, திரு. கி. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ். கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ. அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு. ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு. க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே. வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 8, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 ஏப்ரல் 21, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்*
*செல்வரும் சேர்வது நாடு."*

செழிப்புக் குறையாத விளைபொருள்களும், சிறந்த பெருமக்களும், செல்வத்தைத் தீய வழியில் செலவிடாதவர்களும் அமையப்பெற்றதே நல்ல நாடாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 261, திரு. கு. மனோகரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**261—**

### காவல் நிலையம் அமைத்தல்

***6000—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியம், கிருஷ்ணாபுரத்தில் காவல் நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[1998 ஏப்ரல் 21

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணாபுரம், மதிகோன்பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்டது. கிருஷ்ணாபுரத்தில் நடக்கும் குற்றங்களையும், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளையும் மதிகோன்பாளையம் காவல் நிலையம் கவனிக்க இயலுகிறது. ஆதலால், புதிய காவல் நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வெள்ளாளப்பட்டி, நாயக்கன்குட்டை ஆகிய பகுதிகள் பிரச்சனைக்குரிய பகுதிகளாகும். அங்கிருந்து தருமபுரி செல்ல 13 கிலோமீட்டர் தூரமாகிறது. வளர்ந்துவரும் பிரச்சனைக்குரிய பகுதிகளாக அவை ஏற்கெனவே இருக்கின்றபடியால் தொடர்ந்து அங்கு பதட்டமான சூழ்நிலை எல்லாம் கடந்த காலத்தில் இருந்தது. வருங்காலத்தில் அவை தடுக்கப்படவேண்டுமென்ற எண்ணத்தோடு மக்கள் பிரச்சனையிலே என்றும் நாட்டம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்கள் கிருஷ்ணாபுரத்திற்கு என்று ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி மதிகோன்பாளையம் காவல் நிலையத்திலிருந்து தெற்கே 11 கிலோமீட்டர் தொலைவில் தருமபுரி காவல் நிலையமும், கிழக்கே 13 கிலோமீட்டர் தொலைவில் கடத்தூர் காவல் நிலையமும், வடக்கே 23 கிலோமீட்டர் தொலைவில் காரியமங்கலம் காவல் நிலையமும், மேற்கே 27 கிலோமீட்டர் தொலைவில் பாப்பாரப்பட்டி காவல் நிலையமும் உள்ளன. இக்காவல் நிலையத்தில் முக்கியமான பெரும் குற்றம் மற்றும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை எதுவும் பதிவாகவில்லை என்ற குறிப்பு எனக்குத் தரப்பட்டுள்ளது. கிருஷ்ணாபுரத்தினுடைய மக்கட்தொகையே 7250 பேர்தான். 7 குக்கிராமங்களில் அடங்கிய மக்கட்தொகையே இந்த அளவிற்குத்தான் இருக்கிறது. மதிகோன்பாளையம் காவல் நிலையத்தில் முக்கியமாகப் பெரும் குற்றம் அல்லது முக்கிய சட்டம்-ஒழுங்குப் பிரச்சனைகள் கொண்ட வழக்குகள் எதுவுமே பதிவாகாததால் கிருஷ்ணாபுரத்தில் தனியாக ஒரு காவல் நிலையம் அமைக்கத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.



1998 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் கிருஷ்ணாபுரத்தில் காவல் நிலையம் அமைப்பதற்கு வாய்ப்பில்லாவிட்டாலும்கூட, ஏற்கெனவே காவல் நிலையம் அமைத்து, அங்கு சப்-இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் வீடுகள் இல்லாமல் இருக்கிறார்கள். மேலும் தனியார் வீடுகளில் இந்தப் போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்ற காரணத்தினாலே, சில கேஸ்கள்கூட தடைபடக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா? ஆம் எனில், ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் உள்ள போலீஸ்காரர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள், டிஎஸ்பி. போன்றவர்களுக்கெல்லாம் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் அவர்களுக்குக் குடியிருப்பு கிடையாது (சிரிப்பு). போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்ற ஊர்களிலே போலீஸ்காரர்களுக்கு வசதிகள் செய்து தருவதற்கான முயற்சிகளைப் படிப்படியாக அரசு மேற்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் நிறைய புறக்காவல் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே அத்தியாவசியத் தேவையைக் கருதி, இத்தகையப் புறக்காவல் நிலையங்கள் எல்லாம் முழுநேரக் காவல் நிலையங்களாக மாற்றப்படுமா? அதேநேரத்தில் எந்தத் தகுதியின் அடிப்படையிலே புதிய காவல் நிலையம் துவங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறக்காவல் நிலையங்கள் அனைத்தையும் முழுக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்த வேண்டுமென்ற அந்த முனைப்பான கருத்தில் இந்த அரசு இருக்கிற காரணத்தால் படிப்படியாக அவற்றினுடைய தரங்கள் உயர்த்தப்பட்டு வருகின்றன. பொதுவாக, ஒவ்வொரு காவல் நிலையமும் உருவாவதற்கு அந்த வட்டாரத்தில் உள்ள சட்டம்-ஒழுங்கு போன்ற பிரச்சனைகளை முக்கியமாகக் கருத்திலே கொள்ளவேண்டியிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 21

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. மாரிமுத்து.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பிரசித்திப்பெற்ற ஆலயங்களில் வானூர் தொகுதி, திருவக்கரை வக்கிரகாளியம்மன் ஆலயமும் ஒன்று. அங்கே பக்தர்கள் லட்சக்கணக்கில் வந்து செல்வதால், காவல் துறையால் அவ்வப்போது கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை இருப்பதால் தயவுகூர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—மக்கள் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு, கடந்த ஆண்டு மாவட்டக் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து முன்மொழிவும் வரப்பெற்றிருக்கிற காரணத்தினால்—திருவக்கரையில் ஒரு காவல் நிலையத்தை உருவாக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து தனிக் கேள்வி கேட்டால் முழு விவரமும் அளிக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிற காவல் நிலையங்களுக்குச் சென்ற ஆண்டு கட்டடங்கள் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்று அறிவித்தார்கள். எனது தொகுதி பரவாக்கோட்டையில் காவல் நிலையம் கட்டித் தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா? அத்தோடு சேர்த்து, திருவாரூர் மாவட்டத்தில் துணைக் கண்காணிப்பாளர்களுக்கான பகுதிகளைப் பிரிப்பதிலே மக்களுக்கு சற்று இடையூறு இருப்பதாகக் கருத்துக்கள் வந்திருக்கின்றன. குறிப்பாக, கோட்டூர் ஒன்றியத்தில் உள்ள கோட்டூர், திருக்கலர், களப்பால் காவல் நிலையங்களை திருத்துறைப்பூண்டி துணைக் கண்காணிப்பாளரின் பகுதிக்கு மாற்றியிருக்கிறார்கள். அதிலே சிரமம் இருக்கிறது. எனவே ஏற்கெனவே இருந்த மன்னார்குடி துணைக் கண்காணிப்பாளரின் கண்காணிப்பிலே அவை செயல்படுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணாபுரத்தைப் பற்றிய கேள்வியைப் பயன்படுத்திக்கொண்டு, திருவாரூர் மாவட்டம் வரையிலே சென்றால், எப்படி என்னால் பதில் அளிக்க இயலும் என்று எனக்கே



1998 ஏப்ரல் 21]

தெரியவில்லை. அக்கறை உள்ளவர்கள் அதுபற்றிய தனிக் கேள்விகளை எழுப்பினால் நன்றாக இருக்கும்.

**திரு. கு. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிருஷ்ணாபுரத்தைப் பற்றிய கேள்வியா? இறுதியாக திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி ஒன்றியம் மதிகோன்பாளையத்திலே காவல் நிலையம் இயங்குகிறது. கிருஷ்ணாபுரம் அந்தப் பகுதிக்கு உட்பட்டது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த மதிகோன்பாளையம் காவல் நிலையம் ஒரு தனியார் கட்டடத்திலே செய்யப்படுகிறது. அதுவும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்திலே ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட, அந்தக் கட்டடம் தற்போது நெடுஞ்சாலைத் துறையால் சாலையை அகலப்படுத்துவதற்காக இடிக்கப்பட்டு, பாதி இடிந்த நிலையிலே இன்னும் அந்தக் காவல் நிலையம் செயல்படுகிறது. எனவே, அந்தக் காவல் நிலையத்திற்கு இந்த ஆண்டாவது புதியக் கட்டடம் கட்டித்தர ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிகோன்பாளையம் காவல் நிலையத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரங்களை அளித்ததற்காக நன்றி. அதைப்பற்றி மேலும் விசாரித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி. கிருஷ்ணாபுரத்தைப் பற்றித்தான் கேட்க வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனடா போன்ற வெளிநாடுகளில் எல்லாம் குற்றங்கள் அதிகம் இல்லாத காரணத்தால் காவல் நிலையங்கள் மூடப்பட்டு, பள்ளிக்கூடங்களாக மாற்றப்பட்டுள்ளன. அதே மாதிரி, நம்முடைய தமிழ்நாட்டில் காவல் நிலையங்களுடைய எண்ணிக்கையைக் குறைப்பதற்காக, குற்றங்களைக் குறைப்பதற்காக, அரசாங்கத்திடம் ஏதாவது மாஸ்டர் பிளான்—திட்டம்—உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் ஒத்துழைத்தால் (சிரிப்பு) தமிழ்நாட்டையும் கனடாவாக ஆக்கலாம்.

[1998 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 262, திரு. வீ. தமிழ்மணி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**262—**

**தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவித்தல்**

***6004—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள திருக்கழுக்குன்றம் வட்டத்தைத் தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கழுக்குன்றத்தைத் தொழிலில் பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கழுக்குன்றம் வட்டம் சென்ற ஆண்டுதான் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த காலத்தில் அது செங்கல்பட்டு வட்டத்திலே இருந்தது. செங்கல்பட்டின் மற்ற பகுதியில் பல்வேறு தொழிற்சாலைகள் வந்து கொண்டிருந்தன. ஆனால், திருக்கழுக்குன்றம் பகுதியிலே ஒரு சிறு தொழில்கூட இதுவரை ஆரம்பிக்கப்படாத காரணத்தினால்தான் அதைத் தனி வட்டமாகப் பிரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு தாங்கள் பிரித்திருக்கிறீர்கள். அந்த வட்டத்தில் இதுவரையில் 2 பேர் வேலை செய்யக்கூடிய ஒரு சிறிய தொழில்கூட இல்லாத காரணத்தினால், தாங்கள் அதை தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவித்து, அங்கு தொழில் துவங்குவதற்கு மீண்டும் பரிசீலனை செய்வீர்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியைப் பின்தங்கிய பகுதி என்று அறிவிப்பதற்குப் பல இலக்கணங்கள் இருக்கின்றன. அதிலே ஒன்று, அந்தப் பகுதியில் நடுத்தரப் பெருந் தொழில்களில் செய்யப்பட்டுள்ள முதலீடு 15 கோடி ரூபாய்க்குக் குறைவாக இருக்க வேண்டும் என்பது ஓர் இலக்கணமாகும். அந்த வகையிலே பார்த்தால், திருக்கழுக்குன்றத்தில் 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் முதலீட்டில் பெரிய, நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கான முதலீடு செய்யப்பட்டிருப்பதாக என்னிடத்திலே தரப்பட்டிருக்கிற குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இந்தத் தகுதி இருக்கிற காரணத்தால் அதைப் பின்தங்கிய பகுதியாக அறிவிப்பதற்கு இயலவில்லை.





*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை பின்தங்கிய வட்டங்கள் உள்ளன? பின்தங்கிய வட்டங்களில் தொழில் தொடங்க எந்த வகையான சலுகைகளை அரசு வழங்குகிறது? அதேநேரத்தில், பின்தங்கிய வட்டங்களில் தொழில் தொடங்கியுள்ளவர்கள் தொழில் தொடங்கியவுடனே ஒருசில மாதங்களிலோ, ஒருசில வருஷங்களிலோ அந்தத் தொழிற்சாலையை மூடுகின்ற ஒரு சூழ்நிலையும் ஏற்படுகிறது, இதனால் பின்தங்கிய வட்டங்களில் தொழில் தொடங்கியுள்ளவர்களை உயர்நிலையில் உள்ள அரசு அதிகாரிகள் அழைத்து, அவர்களுடைய பிரச்சினைகளைப் போக்குகின்ற வகையில் அவர்களுக்குப் பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வட்டாரங்கள் 216 இருக்கின்றன. மிகவும் பின்தங்கிய வட்டாரங்கள் 71 இருக்கின்றன. அப்படி அறிவிக்கப்பட்ட அந்தப் பகுதிகளுக்கு அரசின் சார்பாக வழங்கப்படுகின்ற உதவிகள் வருமாறு :

(1) பின்தங்கிய பகுதியில் புதிதாகத் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு முதலீட்டுத் தொகையில் 15% அல்லது உயர்ந்தபட்சமாக ரூ.15 இலட்சம் மாநில முதலீட்டு மானியமாக வழங்கப்படுகிறது.

[1998 ஏப்ரல் 21

(2) மேலும் விற்பனை வரி தள்ளிவைப்புச் சலுகை 9 ஆண்டுகளுக்கு அவர்களுடைய முதலீட்டுத் தொகை முழுமைக்கும் வழங்கப்படுகிறது.

(3) பின்தங்கிய பகுதிகளில் ஏற்கெனவே இயங்கி வரும் தொழிற்சாலைகளுக்கு அவற்றை விரிவுபடுத்துவதற்கும், வேறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கும் முதலீட்டு மானியம் மற்றும் விற்பனை வரித் தள்ளி வைப்புச் சலுகை அவர்களுடைய முதலீட்டுத் தொகையில் 80%, 9 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

மிகவும் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் தூத்துக்குடி, மானாமதுரை, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள சிப்காட் தொழில் வளாகங்களில் அமைக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு அதிகபட்சம் 20 இலட்சம் ரூபாய் என்ற உச்சவரம்புக்குட்பட்டு, நிலையான சொத்துக்கள் மீது 20% மூலதன ஊக்குதவியும் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் ஆர்வத்தோடு கேட்டதைப்போல அங்கெல்லாம் தொழில் நலிந்துவிடாமல், மேலும் வளர்ப்பதற்கு அந்தப் பகுதியில் உள்ள தொழிலதிபர்களை அணுகி அரசின் மூலமாக அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டம் தொழில் துறையிலே பின்தங்கிய வட்டமாக அறிவிப்பதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது சொன்னேன். ஒரு தகுதியைப் பற்றிச் சொன்னேன். மிகவும் பின்தங்கிய பகுதிக்கு. அப்பகுதியிலே உள்ள தொழிற்சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கையின் சதவிகிதம் அந்த வட்டாரத்தின் மொத்த மக்கள் தொகையைக் கணக்கிலே கொள்ளும்போது 0.25% அல்லது அதைவிடக் குறைவாக இருக்கவேண்டும். அந்தப் பகுதியில் நடுத்தர மற்றும் பெருந் தொழில்களில் முதலீடு எதுவும் செய்யப்பட்டிருக்கக்கூடாது. இது மிகவும் பின்தங்கிய பகுதிக்கு உள்ள நிலை. பின்தங்கிய பகுதி என்றால் அப்பகுதியிலே உள்ள தொழிற்சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கையின் சதவிகிதம் அந்த வட்டாரத்தின் மொத்த மக்கள் தொகையில் மாநில சராசரி சதவிகிதமாகிய 2.00-க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். இப்பகுதியிலே நடுத்தரப் பெருந் தொழில்களில் செய்யப்பட்டு உள்ள முதலீடு 15 கோடி ரூபாய்க்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.



1998 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய ஒன்றியமான லத்தூர் ஒன்றியத்தில் தொழிற்சாலைகளே இல்லை. அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைக்க கருணை உள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலே சொல்லப்பட்ட கூற்று உண்மையாக இருக்குமானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய மாவட்டம், பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கும்போது தாலுகா அளவிலே முன்பு இருந்தது. சென்ற ஆட்சிக் காலத்தில் அது பிளாக்வைஸ் ஒன்றியங்களாகப் பிரிக்கப்பட்டு வட்டாரங்கள் அளவிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனாலே ஒரு தொகுதியிலேயே—டிஸ்பாரிட்டி - வேறுபாடு காணப்பட்டு பலதரப்பட்ட மக்கள் எல்லாம் அவதியுறுகிறார்கள். ஆகவே மீண்டும் வட்ட அளவிலே, தாலுகா அளவிலே பின்தங்கிய பகுதி என்று அறிவிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பலமுறை, பல கோணங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிறார்கள். இப்போதும் எழுப்பியிருக்கிறார்கள். ஏற்கெனவே தாலுகா அளவில்தான் பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய பகுதிகள் பிரிக்கப்பட்டன. அதற்குப் பிறகு கடந்த காலத்தில் ஒன்றிய அளவில் பிரிக்கப்பட்ட காரணத்தால் தாலுகா அளவில் பின்தங்கிய பகுதியாக இருந்தது, ஒன்றியமாகப் பிரிக்கப்பட்டதும் ஒரு பகுதி வேறு பக்கத்தில் ஒருசேரச் சேர்ந்து விட்டது. அதனால் தாலுகா அளவில் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்படக்கூடிய சூழ்நிலை இல்லை. இருந்தாலும்கூட, அதற்காக

[1998 ஏப்ரல் 21

மறுபடியும் அதை மாற்றி தாலுகா அளவு என்று உருவாக்குவது அவ்வளவு சாதாரணமான, எளிய காரியமாகத் தெரியவில்லை. இருந்தாலும் அதைப்பற்றி அரசு யோசிக்கும். உறுதியாகச் சொல்ல இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் வட்டம் சுமார் 2 இலட்சம் மக்கள் தொகை கொண்டது. அது சென்னைக்கு அருகில் இருப்பதால் கல்வி அறிவிலும் முன்னேறிய ஒரு வட்டமாக இருக்கிறது. படித்து, வேலையில்லாதவர்கள் அதிகமாக அங்கே இருக்கிறார்கள். அரசு அறிவித்தது போல, அந்த 17 கோடி ரூபாயிலே ஒரு சிறிய தொழிற்சாலைகூட இதுவரையில் இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். படித்து, வேலையில்லாதவர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், அதிகமாகப் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் இருக்கிற காரணத்தாலும், விவசாயத்தையே நம்பியிருக்கிற காரணத்தாலும், அங்கே தொழில் துவங்குவதற்கு, தொழிலில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி என்பதைக் கருத்திற்கொண்டு மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்பதைத் தாங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியினுடைய முற்பகுதிக்கும், பிற்பகுதிக்கும் முரண்பாடு இருக்கிறது. முற்பகுதியில் முன்னேறிய பகுதி என்று அவரே சொன்னார். இப்போது பிற்பகுதியில் அது மிகவும் பின்தங்கிய பகுதி என்று சொல்லுகிறார். இவை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து, எது உண்மையோ அதைப்பற்றி ஆராய்ந்து அரசு முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 263, திரு. கி. வேணு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**263—**

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

***6263—திரு. கி. வேணு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 21]

(அ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரைப்பேட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1997-98 ஆம் ஆண்டில் கவரைப்பேட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. வேணு, இருக்கையில் இல்லை. வினா எண் 264, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**264—**

**இளநிலை கூட்டுறவுப் பட்டப் படிப்பு துவங்குதல்**

***8867—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பார்ா—

அரசுக் கல்லூரிகள், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் ஆகியவற்றில் இளநிலை கூட்டுறவுப் பட்டப் படிப்பு துவக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இன்றைக்கு கலைக் கல்லூரிகளில் படித்தவர்களுக்கு, பி.ஏ. பட்டம் வாங்கியவர்களுக்கு மற்றும் ஆர்ட்ஸ் குரூப் படித்தவர்களுக்கு வேலை கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட அரசுக் கல்லூரிகளில், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளில், சுயநிதிக் கல்லூரிகளில் எல்லாம் வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையிலுள்ள பட்டப்படிப்புகளைக் கண்டிப்பாக கொண்டுவர

வேண்டும்—அதை உருவாக்கவேண்டும்—என்ற உத்தரவை அரசு அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான சுயநிதிக் கல்லூரிகளில் தொடங்கப்படுகின்ற படிப்புகள் உடனடி வேலைவாய்ப்புக்கு ஏற்ற தொழில்முறை சார்ந்த கல்வியாகத்தான் இன்றைக்கு அமைந்து இருக்கின்றன. நிதி உதவி பெறுகிற கல்லூரிகளிலும் அந்த நிர்வாகம் அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்ப இப்படிப்பட்ட படிப்புகளை அவர்களுடைய கல்வி நிலையங்களிலே உருவாக்குவதற்குப் பல்கலைக்கழகத்தினுடைய இசைவை அல்லது ஆமோதிப்பைப் பெற்று நடத்துகிறார்கள். அரசுக் கல்வி நிலையங்களில் அங்கே உள்ள உள்கட்டமைப்புகள் மற்றும் அங்குள்ள ஆசிரியர்களைப் பொறுத்து இப்படிப்பட்ட பாடத்தை நடத்தக்கூடிய வாய்ப்பு இருப்பின் அப்படிப்பட்ட இடங்களில் முதல்வர், இயக்குநருக்குத் தெரிவித்து பல்கலைக்கழகத்தினுடைய இசைவைப் பெற்று இப்படிப்பட்ட வகுப்புகளை நடத்தலாம். இப்போது, அண்மைக்காலங்களில் இதுபோன்ற, இதைவிட விரிவான பல படிப்புகள் சுயநிதிக் கல்லூரிகளிலும் மற்றவைகளிலும் இடம் பெற்றிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 265, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**265—**

### காசநோய்த் தடுப்பு மருத்துவமனையைப் புதுப்பித்தல்

***7215—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகர் விரிவாக்க சாலையிலுள்ள, தற்போது செயல்படாத காசநோய்த் தடுப்பு மருத்துவமனையைப் புதுப்பித்து, நூலகம் அமைத்து நகராட்சிக்கு அர்ப்பணிக்கத் தனியார் முன்வருவதை அரசு அனுமதிக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





சட்டமன்ற வினாவிலே குறிப்பிட்டுள்ள இடம் நகராட்சிப் பொறுப்பில் இல்லை. நகராட்சிச் சட்டப்படி நூலகம் போன்ற நிலையங்களைப் பராமரிப்பு செய்ய இயலாது. எனவே, தனியார் நூலகம் அமைத்துத் தந்தாலும், நகராட்சியில் பராமரிப்பு செய்ய வழிவகை இல்லை.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 266, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்.

**266—**

### அவசர விபத்துப் பிரிவு ஏற்படுத்துதல்

***9550—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்ட அரசு பொது மருத்துவமனையில் அவசர விபத்துப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமங்கலம் அரசு மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலையையொட்டி அமைந்துள்ளதால் அவசர விபத்துப் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட உள்ளது.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலத்திலிருந்து மதுரை இராஜாஜி மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால் 30 கிலோ மீட்டர் தூரம் ஆகிறது. அந்தப் பகுதி தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்ற காரணத்தால், பல விபத்துக்களில் அவசரச் சிகிச்சை இல்லாத காரணத்தால் உயிரிழக்கக்கூடிய சூழ்நிலையெல்லாம் பல நேரங்களில் ஏற்படுகிறது. இந்நிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டே அந்த அவசரப் பிரிவினைத் திருமங்கலம் தாலுகா மருத்துவமனையிலே ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ஏற்கெனவே நிதி ஒதுக்கியது போக—மானியத்திற்கு முந்தையநாள் அவர்களிடத்திலே கலந்து பேசியபோது—வட்டார மருத்துவ மனையினுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லி, கூடுதலாக இப்பொழுது பணத்தை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை இந்த ஆண்டே நிறைவேற்றப்படும்.

### 2. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சருக்குப் பிறந்தநாள் வாழ்த்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சருக்கு இன்று பிறந்த நாள் என்று செய்தி சொல்லப்படுகிறது. எனக்கு வாழ்த்த வயதில்லை என்று சொன்னாலும், மற்றவர்களுடைய வாழ்த்துதலோடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே, அவர்கள் பல்லாண்டுகாலம் வாழ்ந்து, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறைக்குச் சீரிய பணியை, மகத்தான பணியை ஆற்ற வேண்டுமென்று எனது சார்பிலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களெல்லாம் வாழ்த்திய பிறகு, நான் அதிகாரபூர்வமாக வாழ்த்தாமல் இருந்தால் தவறாகிவிடும். காலை ஆறு மணிக்கே அவருக்கு நான் வாழ்த்துத் தெரிவித்திருந்தாலும், பேரவைத் தலைவர் என்ற முறையில் உங்கள் அனைவர் சார்பிலும் அவருக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 1. வினாக்கள்-விடைகள்-தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 267, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 21]

**267—**

### நீர்த்தேக்கத் தொட்டியினைச் சீர் செய்தல்

***4563— திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், அக்ரகாரம் கிராமத்தில் கட்டியுள்ள நீர்த்தேக்கத் தொட்டி இயங்காமல் இருப்பதால் அதைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தக் குடிநீர் திட்டத்திற்காக, ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்த ஆழ்துளைக் கிணற்றினைச் சுத்தப்படுத்தி, சீர்செய்து, அதிக உந்துவிசை கொண்ட மோட்டாரை அதில் பொருத்தி, தற்பொழுது இத்திட்டம் மக்களின் பயனில் உள்ளது.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அக்ரகாரம் ஊராட்சியில் கட்டப்பட்டிருக்கிற அந்த மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து அக்ரகாரம் ஊராட்சியிலே இருக்கிற ஊத்துக்கல்மேடு, பட்டுமில் அருகில் உள்ள பணந்தோப்பு வட்டம், மேல் அக்ரகாரம், கீழ் அக்ரகாரம், மோட்டூர் போன்ற பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கிட ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எந்தத் திட்டத்திற்காக அந்தத் தொட்டி கட்டப்பட்டதோ அந்தத் தொட்டி சரியாகயிருந்தும், அதிலே நீர் கொட்ட முடியாத காரணத்தால், கிணற்றிலே நீர் ஆதாரம் இல்லாமல் போன காரணத்தால், மறுபடியும் ஆழப்படுத்தி, அதிலே வேறு மோட்டார் புதிதாக மாற்றி வைத்து, உந்து சக்தியை உயர்த்தி, தண்ணீர் கொள்ளளவு 60 ஆயிரம் லிட்டர் தேக்கக்கூடிய அளவிற்குத் தற்போது தொட்டி தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அதற்குரிய கிராமங்களுக்கு நீர் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 268, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 21

**268—**

**ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கணினி வழங்குதல்**

***8595—திரு. கே. ரவி அருணன் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பதிவேடுகளைப் பராமரிக்க கணினி வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தற்போது கணினி வழங்க சாத்தியமில்லை.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கணிணி வழங்குவதன் மூலம் உள்ளாட்சி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும், அங்கே உள்ள அலுவலர்களின் பணிச் சுமையைக் குறைக்கவும் ஏதுவாக அமையும். ஆகவே, அரசு அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு அலுவலகத்திற்கும் ஒரு கணினி அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் தேவைப்படுகிறது. இங்கே ஏற்கெனவே 384, புதிதாக ஆரம்பித்திருக்கும் ஒன்று, ஆகக்கூடி 385 ஒன்றியங்களுக்கும் கணினி நிறுவுவது என்றால், தற்பொழுது உள்ள நிதி ஆதாரம் ஒத்துவரவில்லை. ஓரளவிற்கு அந்தந்த ஒன்றிங்களின் நிதி ஆதாரத்திற்கு உட்பட்டு, தகுதி இருந்தால் அவர்கள் தேவை என்று அனுப்பினால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 269, திரு. ஆர். சக்ரபாணி மற்றும் திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 21]

**269—**

**குளிர்பதன மையம் அமைத்தல்**

***2017—திரு. ஆர். சக்ரபாணி :**

**திரு. அ.வ. அப்துல் நாசர் :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரத்தில் காய்கறிகளைப் பதப்படுத்தும் குளிர்பதன மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒட்டன்சத்திரம் உள்ளிட்ட நான்கு இடங்களில் குளிர்பதன மையம் விரைவில் அமைக்க ஊரக வளர்ச்சி நிதியிலிருந்து ஒப்பளிப்பு வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 270, திரு. ஆ. செ. மணிக்கண்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**270—**

**வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தல்**

***9230—திரு. ஆ. செ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதி, திருநாவலூர் ஒன்றிய மையப் பகுதியில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1998 ஏப்ரல் 21

**திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவலூர் ஒன்றிய மையப் பகுதியில் பல ஆண்டுகாலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வேண்டுமென்று கோரி வருகிறார்கள். அதை இந்த ஆண்டு நிறைவேற்றும் வகையில் மறுபரிசீலனை செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவலூரில் பரீட்சார்த்தமாக துணை விற்பனைக் கூடம் அமைக்கலாம் என்று இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. ஆனால், அங்கு சொந்தக் கட்டடம் இல்லை. வாடகைக் கட்டடத்திலேதான் ஆரம்பிக்க வேண்டும். அதற்கு ஆண்டு ஒன்றுக்கு வாடகையாக 20 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்றும் மொத்தம் 2,87,396 ரூபாய் செலவு ஏற்படும் என்றும், எதிர்பார்க்கின்ற வருவாய் 2,37,274 ரூபாய் மட்டுமே கிடைக்கும் என்றும் புள்ளிவிவரம் தரப்படுகிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 271, திரு. டி. மணி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**271—**

**கால்வாய்ச் சீரமைக்க உலக வங்கி நிதியுதவி**

***1076—திரு. டி. மணி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்யாறு இடதுகரைக் கால்வாயைச் சீரமைக்க 1992-93, 1993-94 ஆம் ஆண்டுகளில் உலக வங்கி இரண்டு கோடி ரூபாய் கடன் தர முன்வந்ததா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெய்யாறு இடதுகரைக் கால்வாயைச் சீரமைக்க 1992-93, 1993-94 ஆம் ஆண்டுகளில் உலக வங்கி கடன் தரவில்லை.



1998 ஏப்ரல் 21]

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அல்லாமல், அதற்கு முன்னாலே உலக வங்கி நெய்யாறு இடதுகரைக் கால்வாயைச் சீரமைக்க பணம் வழங்கியுள்ளதா? அதன் அடிப்படையில் வேலைகள் எடுக்கப்பட்டுள்ளனவா? தற்போது வேறு பணம் அந்த நிறுவனத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டு வாக்கில் உலக வங்கி நெய்யாறு இடதுகரைக் கால்வாய் சீரமைப்புக்குப் பணம் வழங்கவில்லை என்று சொன்னேன். அதற்கு முன்னால் வழங்கி இருக்கிறதா என்று கேட்டார்கள். அதற்கு முன்னால் வழங்கவில்லை. ஆனால், 1989 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்த இடதுக்கரைக் கால்வாயைச் சீரமைக்க, அந்தப் பணிக்கு 16 இலட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். காரணம் மடிச்சல் கால்வாய் என்று ஒன்று உள்ளது. இது ஓர் இன்டர்-ஸ்டேட் பிரச்சினை. அதாவது நெய்யாறு என்பது கேரளாவில் இருக்கும். இடதுகால் மட்டும் நம்மிடம் இருக்கும். அதிலே கொல்லங்கோடு ரெகுலேட்டரிலிருந்து வந்தால் 22 கிலோ மீட்டர் நம்முடைய மாநிலத்திலே உண்டு. இந்த 22 கிலோ மீட்டருக்குட்பட்ட பகுதியிலேதான் முல்லையாற்றுக் கால்வாய் வருகிறது. அதிலே, பாகோடு கால்வாய் வருகிறது.; மருதங்கோடு கால்வாய் வருகிறது.; மடிச்சல் கால்வாய் வருகிறது.; மங்காடு கால்வாய் வருகிறது;. மெதுகும்மல் கால்வாய் வருகிறது.; கொல்லங்கோடு கால்வாய் வருகிறது. அதிலேதான் வெங்கஞ்சிக் கால்வாய் வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்த 8 கால்வாய்களும் இந்த 22 கிலோ மீட்டருக்குள்ளே உள்ளடங்கி வருகின்றன. அதனுடைய பாசனம் மொத்தம் 3725 எக்டேர் ஆகும். இதற்காக 16 இலட்சம் ரூபாய் அன்றைக்கு கலைஞர் அவர்கள் செலவு செய்தார்கள். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். நானே மடிச்சல் கால்வாயைப் பார்த்திருக்கிறேன். டீப் கட்டிங், 70 அடி ஆழத்திற்குள்ளே பட்டு தண்ணீர் போகும். எனவே, சில நேரங்களில் மண், புரண்டு புரண்டு விழுகிறது. எனவேதான், 1989-லே கலைஞர் ஆட்சியிலே அதற்குச் செலவு செய்ததற்குப் பிறகு வேறு யாரும் ஒரு நயா பைசா செலவு செய்யவில்லை. மீண்டும் கலைஞர் ஆட்சி இந்த மாநிலத்திலே 1996-லே வந்த பிறகுதான் இப்போது உலக வங்கியின் ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் நிதியை வாங்கி அந்தப் பணிகளை, எல்லாக்

[1998 ஏப்ரல் 21

கால்வாய்களையும் சீரமைக்கின்ற பணிகளைச் செய்வதற்குத் தமிழக அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நீண்ட பதில் சொன்ன பிறகு எதற்கு அடுத்த கேள்வி? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு கோடியே 10 இலட்சம் என்று குறிப்பிட்டிருக்கின்ற உலக வங்கிக் கடன் இந்த மெயின் கால்வாயை, அதாவது இடதுபுறக் கால்வாயை - இதிலே இருக்கக்கூடிய பிரச்சினை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதிலே அடித்தளம் என்பது எந்தப் பகுதியிலேயும் கான்கிரீட்டால் சரி செய்யப்படவில்லை. இதனாலே கேரளாவிலேயிருந்து வருகிற தண்ணீர் 100 கியூசெக்ஸாக இருந்தாலும் சரி, 110 கியூசெக்ஸாக இருந்தாலும் சரி, பாதித் தண்ணீர்கூட நமக்கு வந்து சேர்வதில்லை. அதை நிலம் உறிஞ்சிவிடுகிறது. அந்தத் தண்ணீர் பாழ்பட்டுவிடுகிறது. எனவேதான் இந்தப் பணத்திலே அந்த அடித்தளத்தை கான்கிரீட் மூலம் போட்டு, அந்த மெயின் கால்வாயைச் சீரமைத்து, முக்கியமாகக் கிளைக் கால்வாயையும் சீரமைப்பதன் மூலமாகத்தான் இந்தக் கோடைக் காலத்திலே வரக்கூடிய தண்ணீரால் விவசாயிகள் பயன்பெறமுடியும். இப்போது மூன்று, நான்கு முறை மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. இந்த நேரத்திலே வேலையை ஆரம்பித்தால் வேலை அவ்வளவு திருப்திகரமாக இருக்காது. எனவே, எந்தக் காலத்திலே அந்த வேலையைச் செய்யமுடியுமோ அப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சரியான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த வேலையை துரிதமாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல அந்த இடதுபுறக் கால்வாயிலேயிருந்து, கேரளாவிலேயிருந்து நமக்குக் கிடைக்க வேண்டியது 152 கனஅடித் தண்ணீர். ஆனால் அவ்வளவு வருவதில்லை. 152 கனஅடித் தண்ணீர் தமிழகத்தின் எல்லைக்குள்



1998 ஏப்ரல் 21]

புகுந்து மறுபடியும் 2 கனஅடித் தண்ணீர் கேரளாவிற்காகப் போய்விடும். எனவே, 152 கனஅடித் தண்ணீர் நம்முடைய பாசனத்திற்கு வருகிறபோது, இப்போது கால்வாய் சிதைந்துபோயிருக்கிற காரணத்தால் 70 கன அடி, 80 கன அடித் தண்ணீர்கூட வருவதில்லை என்பதுதான் உண்மை. எனவேதான் இவற்றைக் கணக்கிலேகொண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு ரூபாய் ஒரு கோடியே 10 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது. செப்பனிடுகிறபோது அடித்தளத்தையும் சேர்த்து அமைக்க வேண்டும் என்ற நல்ல யோசனையையும் அவர், தெரிவித்திருக்கிறார். அரசு அதுகுறித்து பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாறு இடதுகரை சேனலைப் பொறுத்தவரைக்கும் அரசு ரூபாய் ஒரு கோடியே 10 இலட்சம் செலவிடுவது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் வருகிற தண்ணீரின் அளவானது - மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னாலும் - விவசாயத்திற்கு நெய்யாறு இடதுகரை சேனலின் கடைவரம்பு வரை வருவதில்லை. இது எல்லா ஆண்டுகளும் நடைபெறுகிறது. எனவே, கிட்டத்தட்ட 3,000, 3,500 ஏக்கர் நிலங்களில் பயிர் செய்கிறபோது தண்ணீர்த் தட்டுப்பாட்டின் காரணமாகவே விவசாயம் தடைபடுகிறது. எனவே, ஒழுங்காகத் தண்ணீரைக் கேரள அரசிடமிருந்து பெற்று எங்களுக்கு விநியோகிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதானே இதற்கான பதிலை மாண்புமிகு அமைச்சர் சொன்னார்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் சொல்வதும் உண்மைதான். அதைத்தான் நான் திருப்பிச் சொன்னேன். நமக்கு 152 கன அடித் தண்ணீர் கொல்லங்கோடு ரெகுலேட்டரிலிருந்து கிடைக்க வேண்டும். கேரள அரசைக் கேட்கிறபோதெல்லாம் - அங்கே அந்த இடத்தை நான் போய்ப் பார்த்தேன், அதுகுறித்து அந்த அமைச்சரிடத்திலே விவாதித்தேன் - அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், உங்களுடைய கால்வாய் இவ்வளவு குவான்டிடியைத் தாங்குவதில்லை. எனவே, முதலிலே கால்வாயைச் சீரமையுங்கள், இல்லாவிட்டால் தண்ணீர் வீணாகப் போகும் என்று சொன்னார்கள்.

[1998 ஏப்ரல் 21

எனவேதான், நாம் இப்போது அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறோம். ஒருகாலத்திலே நாம் அதைச் சீரமையுங்கள் என்று சொன்னபோது அவர்கள் சீரமைக்கவில்லை. இப்போது கொல்லங்கோட்டுக்கு மேற்கே அவர்கள் சீரமைத்துவிட்டார்கள். இப்போதுதான் நம்முடைய அரசு வந்து இதைச் செய்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், நீங்கள் நெய்யாறு பற்றித்தான் கேட்கவேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்வாயினுடைய தண்ணீர் நெய்யாறாக இருந்தாலும், தமிழ்நாட்டில் எந்தப் பகுதியாக இருந்தாலும் அது விவசாயிகளுக்குப் பயனளிக்கக்கூடியது. தமிழ்நாட்டு மக்களின் வயிற்றுப் பிரச்சினை என்பதை மாண்புமிகு தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு, மேட்டூர் கிழக்கு, மேற்குக் கரைக் கால்வாய் ஆகியவற்றில் முட்புதர்களும், மரங்களும் வளர்ந்து சரியாகத் தண்ணீர் வயலுக்கு செல்லாத காரணத்தால் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அந்த முட்புதர்களையும், மரங்களையும் அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய காலத்து சினிமாப் பாட்டுப் புத்தகத்தில் 'மற்றவற்றை வெள்ளித் திரையில் காண்க' என்பார்கள். ஆகவே, இதைப்பற்றியெல்லாம் நாளை என்னுடைய மானியத்திலே காண்க என்று கூறி, அமர்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 272, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**272—**

### சேரன்மகாதேவி தொகுதியில் அணை கட்டுதல்

***9501—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 21]

(அ) சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள எலுமிச்சையாறு, வண்டாள் ஓடை ஆகியவற்றை இணைத்து அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்?.

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 273, திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**273—**

### விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு

***4017—திரு. இரா. ஆவுடையப்பன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காப்பீடு செய்யப்படாத அரசுப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்க இயலாத நிலை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காப்பீடு செய்யப்படாத அரசுப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படாத நிலை இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1998 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 274, திரு. ஜி. பி. வெங்கிடு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**274—**

**பேருந்துகளில் ஒலிநாடா ஒலிபரப்புகளை அகற்றுதல்**

***9246—திரு. ஜி. பி. வெங்கிடு:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள ஒலிநாடா மூலம் ஒலிபரப்பும் இசையால் பயணிகளுக்குப் பெருத்த இடையூறுகள் ஏற்படுவதால், பேருந்துகளில் ஒலிநாடா ஒலிபரப்புகளை முற்றிலும் அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேருந்துகளில் ஒலிநாடா மூலம் ஒலிபரப்பும் இசையைத் தடை செய்யும் வகையில் இவ்வரசு இயற்றிய விதி செல்லாது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது. இருப்பினும், இவற்றினை ஒழுங்குபடுத்த வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

முற்பகல் 10-05

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில், டி.வி. உள்ள பேருந்துகளில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களை, அனுமதிப்பதில்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அது உண்மையா? அப்படியிருந்தால், அதற்குத்தக்க நடவடிக்கை எடுத்து, அனைத்துப் பேருந்துகளிலும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வதற்கு ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து முன்னாள் மற்றும் இந்நாள் சட்டமன்ற



1998 ஏப்ரல் 21]

உறுப்பினர்களும் அனைத்துப் பேருந்துகளிலும் செல்லலாம் என்றுதான் அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடல்களை ஒலிபரப்புவதைப் பற்றிய இந்தக் கேள்வியிலே, இன்னின்ன பாடல்களை, இன்னின்ன முறையிலேதான், பேருந்துகளிலே ஒலிபரப்ப வேண்டுமென்ற ஒரு நடைமுறையை அதிகாரிகள் பின்பற்றுவதற்கு ஏதாவது வழிமுறையை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேள்வியையும், பதிலையும் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். இதுபோன்ற ஒலிநாடாக்களை போடக்கூடாது என்று அரசு தடை விதித்திருக்கிறதா என்பதுதான் கேள்வி. ஆம் என்பதுதான் பதில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. பி. இராசன்.

**திரு. வி. பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வீடியோ கோச் பஸ்களில் சட்டமன்ற உறுப்பினர்களோடு இன்னொருவர் செல்லலாம் என்று இலவச பஸ் பாஸில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த இலவச பஸ் பாஸை முழுவதும் பயன்படுத்துகின்றவர்களில் நானும் ஒருவன். ஆனால் என்னோடு வருகின்றவர் டிக்கெட் எடுக்கவேண்டுமென்று நடத்துனர் என்னிடம் சொல்லி, நான் டிக்கெட் எடுத்திருக்கிறேன். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களோடு செல்கின்றவர்களுக்கு டிக்கெட் எடுக்க வேண்டாமென்று அரசாங்கம் முறையாக, நிர்வாகத்திற்குத் தகவல் தருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளெல்லாம் கொடுக்கப்பட்ட சலுகை அட்டையிலேயே இருக்கின்றன. ஏதாவது ஒருசில இடங்களில் மீறப்படுமானால், அதைக் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டினால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்.

[1998 ஏப்ரல் 21

**டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. இராசன் சொன்னதைப் போல, பல இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், மரபுகளுக்கு உட்பட்டு பல்வேறு பிரச்சினைகளில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குரிய உரிமை நிலை நாட்டப்படுவதில்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குரிய உரிமை குறித்த ஒரு சிறு புத்தகத்தை பேரவைச் செயலகம் மூலம் அச்சடித்துத் தருவார்களா, அதுகுறித்து சட்டமன்றப் பேரவைத் தலைவர் விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது, நீங்கள் என்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டிய கேள்வி. (சிரிப்பு) திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் ஒலிநாடாக்களை ஒலிபரப்புவதைத் தடை செய்வதன் நோக்கம், பயணிகளுக்கு அதனால் இடையூறு ஏற்படுகிறது என்று காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சில பயணிகள் பாடல்களை விரும்பிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். விரும்பியவர்கள் விரும்பும் நேரத்தில் கேட்கும் விதத்தில், Air Phone அமைத்துக் கொடுத்து, குறைந்தபட்சம், சொகுசுப் பேருந்துகளில் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் 10.00 மணிக்கு மேல் ஒலி நாடாக்களைப் போடக்கூடாது என்று அரசு ஆணையிட்டு இருக்கிறது. இதுகுறித்துகூட அரசு மேலும் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. பெ. சாமிநாதன்.

**திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச பஸ் பாஸ் வங்கப்பட்டுள்ளது. அவரோடு பயணம் செய்ய ஒருவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. நாங்கள் பொதுமக்களுடைய கோரிக்கை மனுக்களை பல்வேறு அலுவலகங்களுக்கு அனுப்பும்பொழுது உதவியாளர்களைத் தனியாக அனுப்ப வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. எனவே, உதவியாளர்கள் தனியாகச் செல்லும்போதும், அடையாள அட்டை வழங்கி—அவர்கள் இலவசமாகப் பயணம் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 21]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. அப்படி இருக்குமானால், தினம் ஒருவர் கடிதம் கொடுத்து, தினம் ஒருவர் பயணம் செய்யக்கூடிய சூழ்நிலைகளெல்லாம் ஏற்படும். அது அவருக்கும் தொந்தரவு. ஏனென்றால், 'உனக்கு அனுமதி இருக்கிறதே, எனக்கும் கொடுங்கள்' என்று பலபேர் கேட்க, யாருக்குக் கொடுப்பது என்ற பிரச்சினைகள் வந்துவிடும். ஆகவே, அந்தச் சங்கடங்கள் வரக்கூடாது என்ற எண்ணத்தோடுதான் சட்டமன்ற உறுப்பினரோடு பயணம் செய்யும் ஒருவருக்கு அந்தச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 275, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**275—**

### கொடைக்கானல் ஒன்றியத்தில் பாலம் கட்டுதல்

***8385-அ திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் ஒன்றியம், பூண்டிக்கு அருகாமையில் துவரம்பள்ளம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்படாததால் பேருந்து விட இயலாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பாலம் எப்பொழுது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை இங்கே தெரிவிக்கின்றேன்.

(அ) ஆம். அறியும்.

(ஆ) துவரம்பள்ளம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட நபார்டு திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டு, இப்பாலத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி துவங்கப்பட்டு இருக்கிறது.

[1998 ஏப்ரல் 21

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40 ஆண்டுகளுக்கும் மேலாகத் தங்களுக்கு பஸ் வசதி வேண்டுமென்று போராடிக் கொண்டிருந்த கொடைக்கானல் மேல்மலைப் பகுதி, போளூர் கிராமப் பகுதி மக்களுக்கு நம்முடைய முதல்வர் கலைஞர் ஆட்சியில்தான் பஸ் விடப்பட்டிருக்கிறது. பூண்டிக்குப் பக்கத்தில் துவரம்பள்ளம் ஆற்றின் குறுக்கே பாலம் இல்லாததால் மழை பெய்யும் போதெல்லாம் பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டுவிடுகிறது. எனவே, அரசு, பாலம் கட்டும் பணியைத் துரிதப்படுத்தி, விரைவாகக் கட்டித்தர உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலை ஆரம்பித்துவிட்டது என்று அமைச்சர் தனது மூல விடையிலேயே தெரிவித்துவிட்டாரே.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோஷன்-கிளாவரை சாலையில், பூண்டிக்கு அருகில் துவரம்பள்ளம் ஆறு குறுக்கிடும் இடத்தில் பாலம் ஒன்று கட்டுவதற்கு நபார்டு மூன்றாவது திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ள அரசு ஆணை எண் 67, நாள் 28-2-1998-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதன் மதிப்பீடு ரூபாய் இருபத்திரண்டு இலட்சம். இதற்கு டெண்டர் விடப்பட்டு 25-3-1998-ல் அக்ரிமெண்ட் போடப்பட்டிருக்கிறது. வேலை விரைவில் துவங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 276, திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**276—**

**தொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு**

***10733—திரு. வி. கே. லட்சுமணன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் இராதாகிருஷ்ணா மில் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1998 ஏப்ரல் 21]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை இராதாகிருஷ்ணா மில்ஸ் லிமிடெட் என்ற நிர்வாகம் 10-8-1986 முதல் இயங்கவில்லை. பஞ்சு வியாபாரிகள் தங்கள் பணப் பாக்கிக்காக இவ்வாலை மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் அடிப்படையில், 'அபிசியல் லிக்குவிடேட்டர்' நியமனம் செய்யப்பட்டு, ஆலைக்குச் சீல் வைக்கப்பட்டது. தொழிலாளர்கள் அனுப்பிய மனுக்களைப் பரிசீலித்து, சட்டப்படி ஒவ்வொருவருக்கும் எவ்வளவு இழப்பீட்டுத் தொகை கிடைக்கும் என்பதை 'அபிசியல் லிக்குவிடேட்டர்' தெரிவித்துள்ளார். இதனிடையே சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, தங்களுக்குச் சேரவேண்டிய தொகையைத் திருப்பித் தரவேண்டுமென சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால், தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய தொகை கொடுக்கப்படவில்லை. ஆனால், மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர் புனரமைப்பு நிதித்திட்ட நிதியிலிருந்து 1,095 தொழிலாளர்களுக்கு ரூ. 2,00,81,007/- வழங்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராதாகிருஷ்ணா மில் மூடப்பட்டு கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அதில் பணிபுரிந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய சம்பளம் நிலுவையாக இருக்கிறது. அதுபோல, போனஸ், கிராஜுவிட்டி, போன்று அவர்களுக்குச் சேரவேண்டிய தொகை கோடிக்கணக்கான ரூபாய் அளவில் நிலுவையில் இருக்கிறது. அரசு ஆண்டிற்கு ஒருமுறை, தீபாவளி அன்று கொடுக்கின்ற ரூ. 400-ம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. காரணம், 1990ஆம் ஆண்டிற்கு முன்னாலே மூடப்பட்ட மில் தொழிலாளர்களுக்கு இந்தத் தொகை கொடுக்கப்படுவதில்லை என்று அறிவிக்கப்பட்டதன் காரணமாக, அவர்களுக்கு அந்தத் தொகையும் கிடைப்பதில்லை. இன்றைக்கு அந்த மில்லிலே இருக்கின்ற இயந்திரங்களையெல்லாம் பல பேர் கடத்திக் கொண்டு போகிறார்கள். அதற்குப் பாதுகாப்பு இல்லை. இந்த மில், சவுத் இந்தியா விஸ்கோஸிலே ஏராளமான பங்குகளை எடுத்து வைத்துள்ளது. அந்தப் பங்குகளை விற்றால்கூட தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய தொகைகளைக் கொடுத்துவிட முடியும். இது தவிர, அந்த மில்லைச் சுற்றி ஏராளமான காலியிடம் இருக்கின்றது. அந்தக் காலியிடங்களை விற்றாவது தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய

[1998 ஏப்ரல் 21

தொகையினை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னால் அந்த ஆலை மூடப்படவில்லை. 1986ஆம் ஆண்டே சம்பளப் பாக்கிக்காக வேலைநிறுத்தம் ஏற்பட்டு, பங்குதாரர்களிடையே தகராறு ஏற்பட்டு, நீதிமன்ற வழக்குகள் ஏற்பட்டு, நீண்டகாலமாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருந்தது. இதற்கிடையில், பஞ்சு வியாபாரிகள் தங்கள் பாக்கிக்காக நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தார்கள். சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவிற்கு இந்த மில் நிர்வாகம் கொடுக்க வேண்டிய பாக்கிக்காக அவர்கள் வழக்குத் தொடுத்தார்கள். இந்தச் சூழ்நிலையிலேதான் 'அபிசியல் லிக்குவிடேட்டர்' நியமனம் செய்யப்பட்டார். விஸ்கோஸ் சம்பந்தமாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்த நிறுவனத்தில் 13 கோடி ரூபாய் அளவிற்குப் பங்கு இருக்கிறது. அந்தப் பங்குகளை விற்றாவது கிராஜுவிட்டி போன்றவற்றைக் கொடுக்க வேண்டுமென்று தொழிற்சங்கம் கோரியுள்ளது. ஆனால், இதுகுறித்து நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்ற காரணத்தால் அதையும் செட்டில் செய்ய முடியவில்லை. இருந்தாலும், அரசின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கட்டளைக்கிணங்க நானும், அதிகாரிகளும் கோவைக்குச் சென்று தொழிற்சங்கத் தலைவர்களோடு கலந்து பேசி அதைத் தீர்ப்பதற்கான வழி இருக்கிறதா என்று ஆய்வு செய்தோம். இப்பொழுதும் பங்குதாரர் ஒருவரின் மகன் கோர்ட்டிலே, கோபிச்செட்டி பாளையத்திலே வழக்கு போட்டிருக்கிறார். இருந்தாலும், மத்திய அரசாங்கம் ரூ. 2,00,81,007/- கொடுத்திருக்கிறது. ஆனாலும், 'அபிசியல் லிக்குவிடேட்டர்' முன்னாலே தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய சட்டரீதியான சலுகைகளைக் கேட்டு மனுச் செய்தால், அது பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986ஆம் ஆண்டு, இராதாகிருஷ்ணா மில் மூடப்பட்டதால் ஏற்பட்ட வேலையிழப்பும், பிற பிரச்சினைகளும் ஒரு சுமையாக மாநில அரசின் மீது விழுந்திருக்கிறது. தனிப்பட்ட ஒரு முதலாளி செய்கின்ற, சொந்த இலாப நோக்கத்தின் நடவடிக்கைகள் ஒரு மாநில அரசின் மீது பழியாக விழுந்துவிடுகிறது என்பதைத்தான் நடைமுறை அனுபவம் நமக்கு உணர்த்துகிறது. எனவே, கோவை, இராதாகிருஷ்ணா மில்லைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ இந்த மில்லின் இடம் மட்டும் 100 கோடி ரூபாய்க்குச் சொத்தாக உள்ளது. எனவே, நான் மாநில அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, பஞ்சு பாக்கியையோ மற்றும் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய சட்டரீதியான உரிமைகளையோ, தொகைகளையோ அவர்கள் தொடர்ந்து கொடுக்காமல் இருப்பதைத் தடுப்பதற்கும், எதிர்காலத்தில் முதலாளிகளின் இத்தகைய நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும், 100 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட அந்த சொத்தை, ஒரு விசேஷ சட்டத்தின் கீழ் 'டேக்-ஓவர்' செய்து, மாநில அரசே அவற்றை மற்றவர்களுக்குப் பங்கிட்டுத் தருவதோடு, தொழிலாளர்களுடைய சட்ட ரீதியான உரிமைகளையும் வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 21]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல நோக்கத்தோடு சொல்லப்பட்ட உறுப்பினரின் கருத்தை அரசு கவனத்தில் கொண்டு, முதலமைச்சரோடு இதுகுறித்து கலந்து, உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடப்பட்ட மில்களிலே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிற 400 ரூபாய் தொகையானது, 1990ஆம் ஆண்டுக்கு முன்பு அந்த மில் மூடப்பட்டதால்—தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது. அடுத்த ஆண்டிலாவது, அந்த மில் தொழிலாளர்களுக்கு அந்தத் தொகையை வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேசிய உறுப்பினர்கள் ஒன்றைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். தீபாவளிக்கு மட்டும்தான், தலைக்கு 400 ரூபாய் என்ற வீதத்தில், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பணம் கொடுத்தது என்பது இதுவரைக்கும் இருந்த வரலாறு. இந்தப் பொங்கலுக்கும் சேர்த்து, போன முறை, நம்முடைய மாண்புமிகு

[1998 ஏப்ரல் 21

முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். 19,574 தொழிலாளர்களுக்கு, ஏறத்தாழ 78 இலட்சத்து 29 ஆயிரத்து 600 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் ஒரு கோரிக்கையை வைக்கிறார். இதற்கு முன்பாகவே மூடப்பட்ட மில்லுக்கும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார். இந்த ஆலோசனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 277, திரு. கோ. மோகனதாசன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**277—**

**குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்**

***8384—திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி வட்டத் தலைநகரம், பொறையாரில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தரங்கம்பாடி வட்டத் தலைநகரான பொறையாரில் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, சட்டத் துறை மானியத்தின்போது, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், பொறையாரிலே, குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். இடையில், துணைக்கேள்வி கேட்டபோதும், பரிசீலனையில் உள்ளது என்று



1998 ஏப்ரல் 21]

சொன்னார்கள். ஆனால் இப்போது, இல்லை என்று சொல்கிறார்கள். 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்னர், பொறையாரில், வெள்ளிக்கிழமை, சனிக்கிழமைகளில் கோர்ட் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால், இப்போது அதை நிறுத்தி விட்டார்கள். எனவே, மீண்டும் பரிசீலனை செய்து, அங்கே ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டத்தில், தரங்கம்பாடி, வேதாரண்யம், கீழ்வேளூர் ஆகிய வட்டங்களில் நீதிமன்றங்கள் இல்லை என்பது உண்மை. எனவே, முன்னோடித் திட்டத்தின்கீழ், தரங்கம்பாடியிலே ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கு அரசு விரும்பியதும் உண்மை. ஆனால், முன்னோடித் திட்டத்திலே அனுமதித்த நீதிமன்றங்களை, உயர்நீதிமன்றம் பயன்படுத்தவில்லை. எனவே, நாங்கள் 'ரெகுலர் கோர்ட்' கொடுக்கிறோம் என்று உறுதியளித்தோம். ஆனால், இப்போது உயர்நீதிமன்றம், நீங்கள் தனியாக வேண்டுமானால் கொடுக்கலாமே தவிர, முன்னோடித் திட்டத்தின்கீழ் கொடுக்கக்கூடாது; அதை நாங்கள் பயன்படுத்துவோம் என்று சொல்லி, பயன்படுத்தாமலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலேதான், தரங்கம்பாடி, பொறையாரில், நீதிமன்றம் வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதுகூட கணக்குப் பார்த்தால், நாகை மாவட்டத்தில் 8 உரிமையியல் நீதிமன்றங்கள் இருக்கின்றன; 6 குற்றவியல் நீதிமன்றங்கள் இருக்கின்றன. இவற்றை ஒழுங்காக ஒவ்வொரு வட்டத்திலும் அமைப்பதற்கான வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு, வழக்கறிஞர்களுடைய ஒத்துழைப்பு எல்லாம் தேவைப்படுகிறது. ஏனென்றால், தற்போது தரங்கம்பாடியிலிருந்து மயிலாடுதுறைக்குச் செல்லவேண்டியிருக்கிறது. மயிலாடுதுறையிலுள்ள வழக்கறிஞர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடாது. அங்கே அதை ஓர் அரசியல் பிரச்சினையாகவும் ஆக்கக்கூடாது. மாற்றுவதற்கு அனைவரும் ஒப்புக் கொண்டால், மாண்புமிகு முதலமைச்சருடைய ஒப்புதலோடு, அவற்றையெல்லாம் உடனடியாக அமலாக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

[1998 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 278, திரு. அ. வ. அப்துல் நாசர், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**278—**

**நகரங்களை அபிவிருத்தி செய்தல்**

***6103—திரு. அ. வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி, சேத்தியாதோப்பு மற்றும் பரங்கிப்பேட்டை ஆகிய நகரங்களை, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சிக் கொள்கையின் அடிப்படையில் அபிவிருத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புவனகிரி பேரூராட்சியில், இந்தத் திட்டத்தின்கீழ் பேருந்து நிலையம் கட்டுதல், பேருந்து நிலையத்தில் தார்ச் சாலை அமைத்தல், கடைகள் கட்டுதல் மற்றும் தினசரி அங்காடி கட்டுதல் ஆகிய பணிகளும், பரங்கிப்பேட்டை பேரூராட்சியில், கடைகள் கட்டும் பணியும் நிறைவு பெற்று பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. சேத்தியாதோப்பு பேரூராட்சியிலிருந்து செயற்குறிப்பு பெற்றபின் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேத்தியாதோப்பு மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதி அனைத்துப் போக்குவரத்து வசதிகளும் நிறைந்த பகுதியாக இருந்தாலும் அந்தப் பகுதியிலே ஒரு பேருந்து நிலையம் கிடையாது. மேலும் அங்கே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித்தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேசமயம் பரங்கிப்பேட்டையில் கடைகள் கட்டியிருப்பதாகச் சொல்கிறீர்கள். அங்கே பேருந்து நிலையம் இல்லை. எனவே அங்கே பேருந்து நிலையத்தையும் கட்டித்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 21]

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேத்தியாதோப்பின் தேவை பற்றி இன்னும் எந்தச் செயற்குறிப்பும் வரவில்லை. செயற்குறிப்பு வந்தால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதையும், வீட்டு வசதி வாரியத்திற்கு நிலத்தினைப் பெற்றுத்தந்தால் அங்கே பேருந்து நிலையம் கட்டித்தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 279, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**279—**

**குமரிமுனையில் அருங்காட்சியகம் அமைத்தல்**

***9359—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரிமுனையில், தமிழகத்தின் அனைத்து சுற்றுலா இடங்களையும் சித்தரிக்கும் வகையில் ஓர் அருங்காட்சியகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உங்கள் முன்அனுமதியோடு திருத்திய விடையைத் தெரிவிக்கிறேன்.

(அ) ஆம்.

(ஆ) 1998-99ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தில் கன்னியாகுமரியில் தமிழ்நாட்டின் அனைத்து சுற்றுலா இடங்களையும் சித்தரிக்கும் வகையில் சுற்றுலா மையம் அமைக்க 5 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறை பணிகளை மேற்கொள்ளவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு. நீங்கள் திருத்திய விடையைப் படிப்பதற்கு முன்னால் அதனுடைய நகலை என் அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். திரு. இரா. பெர்னார்டு.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரிமுனையில் சுற்றுலா மையம் அமைக்க இருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கடலும் முத்தமிழும் இந்தியாவின் தென்முனையாம் குமரிமுனை, சூரியன் எழுவதையும், மறைவதையும் எளிதாகக் கண்டு களிக்கும் இடம். தேசப் பிதா அண்ணல் காந்திக்கு நினைவு மண்டபம்; அமெரிக்க ஐக்கிய நாட்டில் இந்தியாவின் பெருமையைச் சொல்லிய விவேகானந்தருக்கு நினைவு மண்டபம் ஆகியவை இருக்கும் குமரியில் 2 தினங்களுக்கு முன்னால் உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவருக்குச் சிலை நிறுவுவதற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் அங்கு வருகை தந்தார்கள். பெருந்தலைவர் காமராஜருக்கு நினைவாலயம் அமைக்க இருக்கிறார்கள். இந்த நிலையில் இது உலக அரங்கில் மிகச் சிறப்பான ஒரு சுற்றுலா மையமாக இருப்பதால், தமிழகத்தின் சுற்றுலாத் துறையினுடைய அனைத்துச் சிறப்புகளையும் சொல்கிற வகையில் அங்கு ஓர் அருங்காட்சியகம் அமைத்தால் சிறப்பாக இருக்கும். உலக நாடுகளிலிருந்து வருகிறவர்கள் இந்தியாவினுடைய பெருமையையும் நம் நாட்டினுடைய தலைவர்களின் சிறப்பையும் தெரிந்துகொள்ள பேருதவியாக இருக்கும். ஆகவே இதை எப்போது முடிப்பீர்கள்? விரைவில் செய்து முடிப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுடைய ஆர்வத்தின் அடிப்படையில் விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் அருங்காட்சியகம் குமரியிலே கட்டப்படும் என்ற நல்ல செய்தியைத் தந்திருக்கிறார்கள்.



1998 ஏப்ரல் 21]

அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அங்கே கட்டடங்களைக் கட்டுகின்றபோது—எந்தக் கட்டடமானாலும் சரி—சூரியன் உதயம், அதுபோல சூரியன் மறைவதையும் கண்டு களிப்பதற்கு இடையூறு வராத வகையில் அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் உள்ள கட்டடங்களைப் பொதுமக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் இடையூறு இல்லாத அளவுக்குக் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய அனுமதியைப் பொறுத்தவரையில் கடலிலிருந்து 500 மீட்டர் தூரம் தாண்டித்தான் எந்தப் புதியக் கட்டடமும் கட்டப்பட வேண்டும் என்று விதி இருக்கிற காரணத்தினால், அதனடிப்படையிலேயே சுற்றுலாத் துறையினுடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஏற்காடு ஏழைகளின் கோடை வீடாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் அங்கே ஏரியின் மத்தியிலே, ஒரு மிருகக் காட்சிச் சாலையும், Ladies Seat பகுதியிலே சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற வகையிலே ஓர் அருங்காட்சியகமும் அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதை அரசு, சுற்றுலாத் துறை மூலம் செய்து கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 280, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**280—**

**பவானிசாகர் தொழிலாளர்களின் முறையீடு**

***7770—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் கதர் சாயச் சலவை, அச்சு அலகுத் தொழிலாளர்கள் ஊதியம் மற்றும் பொதுக் கோரிக்கைகள் குறித்து முறையிட்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பவானிசாகர் சாயச் சலவை, அச்சு அலகின் 52 தொழிலாளர்கள் வாரியத்திடம் செய்து கொண்ட ஒப்பந்தம் காலாவதியானதையடுத்து தங்கள் ஊதியம் மற்றும் இதர படிகளை 1-7-1995 முதல் வழங்கக் கோரியிருந்தார்கள். ஆனால், அரசு ஆணை (நிலை) எண் 637, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 8-3-1983-ன்படி விலைவாசிப் புள்ளி உயர்வைக் கணக்கிட்டு அதன் அடிப்படையில் மாறும் அகவிலைப்படியுடன்கூடிய சம்பளம் வழங்கிவருவதால் இவர்கள் கோரிக்கையை ஏற்க இயலாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத் துறையின்கீழ் மிகச் சிறந்த பெரிய தொழிற்சாலையாக இந்த சாயச், சலவை அச்சு அலகு அங்கே செயல்படுகிறது. 1995ஆம் ஆண்டு முதல் ஊதிய உயர்வுக்காக தொழிலாளர்கள் கோரிக்கை வைத்து வருகிறார்கள். அதுபற்றிய விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அங்கே வந்திருக்கின்ற சிக்கல் என்னவென்றால், அந்த அலகையே மூடிவிடக்கூடிய அளவில், 100 தொழிலாளர்கள் பணியாற்றிய அந்த இடத்தில் 25 தொழிலாளர்கள்தான்



1998 ஏப்ரல் 21]

பணியாற்றுகிறார்கள். எனவே, முழு அளவில் அவர்களுக்கு வேலை கொடுத்து, ஊதிய விகிதத்தில் சீரமைப்பை ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் சாயத் தொழிற்சாலையில் 52 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 4 ஆயிரம் முதல் ரூ. 6 ஆயிரம் வரை ஊதியம் பெற்று வருகிறார்கள். இவர்கள் கோவை தொழிலாளர் இணை ஆணையர் அவர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி அரசு நிலை எண் 637, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 8.3.1983ன்படி விலைவாசிப் புள்ளி உயர்வு கணக்கிடப்பட்டு Consumer Price Index அடிப்படையில் மாறும் அகவிலைப்படியுடன்கூடிய சம்பளம் வழங்கப்பட்டு வருவதால் தொழிலாளர்களின் சம்பளம், பிரதி மாதமும் அதிகரித்துக் கொண்டே வருவதாலும், அங்கே தொழிலாளர்களுக்கு போதிய வேலை வாய்ப்பை அளிக்க இயலாத நிலை உள்ளதாலும், கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களைவிட இவ்வலகு பருத்தி, கதர் ரகங்களைச் சாயமிட்டு, அச்சிட்டு, சலவை செய்திட ஆகும் செலவினம் அதிகமாக உள்ளதாலும், அலகு நஷ்டத்தில் இயங்கி வருகின்றது.

தொழிலாளர்களின் நலன் கருதி, 1996 -97-ஆம் நிதி ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொழிற்சாலைக்கு இயந்திரம் வாங்குவதற்காக 20 லட்சம் ரூபாய்க்கு அனுமதி அளித்தார்கள். அந்த அடிப்படையில் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த இயந்திரம் செயல்பட்டதற்குப் பிறகும், எதிர்காலத்திலே அந்த 52 தொழிலாளர்களுடைய வேலைக்கு எந்தவித குந்தகமும் விளைவிக்காமல் அவர்களுக்கு வேலை வழங்கப்படும் என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு நிலைமை குறித்து மத்திய அரசு உள் துறை உயர்மட்டக் குழுவின் அறிவிப்பும், மத்திய உள் துறை அமைச்சரின் கருத்தும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு நிலைமை திருப்திகரமாக உள்ளது என மத்தியக் குழு தெரிவித்த பின்னரும் மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் மாற்றுக் கருத்து தெரிவித்தது குறித்து திரு. கே. சுப்பராயன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஜி. நிஜாமுதீன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பும், திரு. சி. ஞானசேகரன் ஒத்திவைப்புத் தீர்மானமும் கொடுத்திருக்கிறார்கள். அனைத்தையுமே சிறப்புக் கவன ஈர்ப்பாக அனுமதித்து முதலில் திரு. சி. ஞானசேகரனை மிகச் சுருக்கமாகப் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் மத்திய அரசினுடைய உள் துறை உயர்மட்டக் குழு, அசோக் குமார், சிறப்புச் செயலாளர் (Special Secretary) தலைமையிலே இங்கே வந்து சென்னையை முழுமையாக ஆய்ந்து பார்த்துவிட்டு, அதன்பிறகு அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசிய பின்னர் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்ற ஒரு சான்றையும் அளித்துவிட்டுச் சென்றார்கள். இப்படி அவர்கள் அறிக்கை கொடுத்த பிறகும், பேட்டி கொடுத்த பிறகும், மத்திய உள் துறை அமைச்சர் பத்திரிகைகளுக்குப் பேட்டி அளிக்கிறபோது 'தமிழகத்தில் ஐ.எஸ்.ஐ. தீவிரவாதம் பரவிக்கொண்டிருக்கிறது என்பது அதிர்ச்சி தரக்கூடிய விஷயம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, பாரதிய ஜனதா கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற குஷாபாவ் தாக்கரே அவர்கள் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். குஷாபாவ் தாக்கரே அவர்கள் டெல்லியில் முதன்முதலாக தொலைக்காட்சியினர்களுக்கு பேட்டி அளிக்கிறபோது ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள் 356-வது விதியைப் பயன்படுத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கலைக்க மாட்டோம்; தமிழகத்தில் இருக்கக்கூடிய தி.மு.க அரசைக் கலைக்கின்ற எண்ணம் பாரதிய ஜனதா கட்சிக்குக் கிடையாது; தி.மு.க. அரசைக் கலைக்கமாட்டோம் என்று உறுதிபடச் சொல்லியிருக்கிறார்கள். கருணாநிதி அரசைக் கலைக்க





வேண்டுமென்று அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதா அவர்கள் தனக்குள்ள நிர்பந்தங்களால் அப்படிக் கூறியிருக்கிறார் என்றும் அவர் தெளிவாகச் சொல்லிவிட்டார். தன்னுடைய சொந்த மாநிலமான மத்தியப் பிரதேசத்தில், போபாலில், தேர்தலுக்குப் பின்பு முதன்முறையாக அங்கு சென்று பேட்டி அளிக்கின்றபோது தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை மிகவும் மோசம் என்று அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

முற்பகல் 10-30

ஆக, முன்னுக்குப் பின் முரணாக நம்முடைய உள் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போனபோதுகூட, உள் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது தீவிரவாதிகள் ஊடுருவியிருப்பார்களேயானால் மத்திய-மாநில அரசுகள் இணைந்து தீவிரவாதிகளைக் கண்டுபிடித்து அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க வேண்டும் என்ற கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். அதே உள் துறை அமைச்சர் இப்போது ஐ.எஸ்.ஐ. தீவிரவாதம் தமிழகத்திலே பரவியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். மாநிலத்தின் ஒத்துழைப்புடன் நாட்டில் தீவிரவாதத்தை வேரோடு அறுக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். பஞ்சாப், காஷ்மீர் போன்று தீவிரவாதம் தமிழகம், கேரளா உட்பட தென் மாநிலங்களுக்குப் பரவியிருக்கிறது என்றும் இந்தப் பிரச்சினைக்கு மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படவேண்டுமென்றும் அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

தமிழகத்திலே இருக்கிற சில எதிர்க்கட்சிகள் சூட்டோடு சூடாகத் தேர்தலை வைத்து, நாடாளுமன்றத்தினுடைய அதே ரிசல்ட் தங்களுக்கு மீண்டும் கிடைக்கும் என்று மனப்பால் குடித்துக்கொண்டு உடனடியாக இந்த அரசைக் கலைக்க வேண்டுமென்று குரல் கொடுத்ததன் விளைவாக, அடிக்கடி மத்திய அரசுகூட தன்னுடைய நிலையை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறார். ஒருமுறை சட்டம்-ஒழுங்கு சரியாக இருக்கிறது என்கிறார்கள், ஒருமுறை மிகவும் மோசம் என்கிறார்கள். இப்படி மாற்றி மாற்றிச் சொல்கிற காரணத்தினால், தினந்தோறும் கலைப்பு, கலைப்பு, கலைப்பு என்று சொல்லிக்கொண்டே இருப்பார்களேயானால் அது நாட்டு மக்களினுடையே மத்தியிலேயும் சரி, அதிகாரிகளின் மத்தியிலேயும் சரி ஒரு பெரிய குழப்பத்தை விளைவிக்கும். மத்தியிலே இருக்கக்கூடிய அரசாங்கம் 356-ஐப்

பயன்படுத்தமாட்டோம் என்று சொல்கிறது. அதுபோல அதனுடைய அமைச்சர்களுக்கும் ஒரு வரையறை வைக்க வேண்டும். மத்திய அரசின் அமைச்சர்கள் தமிழகத்திற்கு வருகிறார்கள். வருகிறவர்கள் வேளைக்கு ஒன்றாக இந்த அரசு கலைக்கப்பட்டுவிடும், நள்ளிரவில் கலைக்கப்பட்டுவிடும் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஓர் இடத்தில் உள் துறை அமைச்சரும் பிரதமரும் கலைக்கமாட்டோம் என்று சொல்கிறபோது இங்கு வரும் அமைச்சர்கள் கலைக்கப்படும், கலைக்கப்படும் என்று சொல்வது பிரதமருக்கும் உள் துறை அமைச்சருக்கும் மற்றும் இந்த அமைச்சர்களுக்கும் ஏதாவது ஒற்றுமையிருக்கிறதா? அல்லது ஏதோ இவர்கள் தான்தோன்றித்தனமாக தனித்தனியாகச் செயல்படுகிறார்களா? நான் உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வது எல்லாம் இப்படி அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிற காரணத்தினாலே நாம் ஒரு தீர்மானத்தைப் போட வேண்டும்.

ஆயிஷா கூட நேற்று கைது செய்யப்பட்டதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. உண்மை நிலவரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் விளக்க வேண்டும். இங்கு தீவிரவாதிகள் எல்லோரையும் பிடித்தாகி விட்டது. இப்போது நம்முடைய தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாக மாறிக்கொண்டிருக்கின்றது. வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. சில காலகட்டங்களில் வெடிகுண்டு இருந்தது; இல்லையென்று சொல்லவில்லை. அதுபோல தீவிரவாதமும் இருந்தது. அதையெல்லாம் இரும்புக் கரம் கொண்டு நம்முடைய காவல் துறை மிகவும் அருமையான முறையில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து இன்று தீவிரவாதிகள் எல்லாம் பிடிக்கப்பட்டுவிட்டார்கள். தினமலர் பத்திரிகையில் ஆயிஷா பிடிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

மற்ற பத்திரிகைகளில் அதுபற்றி வரவில்லை. அ.தி.மு.க.வைச் சேர்ந்த, மகளிர் அணியைச் சேர்ந்தவர்கள் கூட தீவிரவாதிகளுக்குப் பாதுகாப்பு அளித்து, வீட்டையே அவர்களுக்குக் கொடுத்திருந்தவரைக்கூட இந்த அரசு பார்த்து அவர்களையும் கைது செய்திருக்கிறது. இதுபோன்ற கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வந்திருக்கின்ற வேளையில் இப்படி ஒரு சலசலப்பை அடிக்கடி நாட்டிலே உருவாக்கி உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்ற அந்த இயக்கங்களுடைய வாய்க்கு பூட்டுப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, இந்த அவையின் மூலமாக நாம் இதற்கு ஒரு தீர்மானம் போட வேண்டும். கலைத்துவிட்டு வேண்டுமானால் போகட்டும், "உடனடியாகத் தேர்தலைச் சந்தித்துவிட்டு நாங்கள் மீண்டும் வரத் தயார். (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிட்டுவிட்டு, தினந்தோறும் கலைப்பு, கலைப்பு என்று சொல்லிக்கொண்டு 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்று இருக்கக்கூடாது. ஆகவே, சபையை ஒத்திவைத்துக்கூட கொஞ்சம் அதிக நேரமானாலும்கூட இதை விவாதிக்க வேண்டும். 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்பது போல பார்க்கின்றவர்கள் எல்லாம் கேட்கின்றார்கள்; இன்னும் எத்தனை நாள் எம்.எல்.ஏ. என்று கேட்கிறார்கள். மிகவும் வேதனையாக இருக்கிறது. இதையெல்லாம் சந்திக்க வேண்டியிருக்கிற காரணத்தினாலே ஒரு தீர்மானத்தைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

*முற்பகல் 10-35*

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டையிலேயிருந்து தமிழ்நாட்டில் உள்ள குடியானவர்களின் குடிசை வரை பேசப்பட்டு வருகிற ஒரு செய்தி, தமிழக அரசு கலைக்கப்பட்டு விடுமா என்பதுதான். நான் இந்த விஷயத்தை ஏதோ ஒரு மாநில அரசு, தனக்கு விருப்பமில்லாத மத்திய அரசால் கலைக்கப்படுகிற ஓர் இயல்பான பிரச்சினையாக அணுக விரும்பவில்லை. இந்த முயற்சிகளுக்குப் பின்னால், இந்தச் செய்திகளுக்குப் பின்னால் ஆழமான அரசியல் உள்நோக்கம் இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

திரும்பத் திரும்பப் பத்திரிகைகளில், ஆட்சி அதிகாரத்தில் அடங்காத பசி கொண்ட ஒரு கும்பலின் அதிகார வேட்கையினாலும் தொடர்ந்து இந்தச் செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. இப்படி இந்தச் செய்தி பரப்பப்பட்டு வருகின்ற காரணத்தினால், தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற நிலைமை என்னவென்றால், அரசியல் ரீதியிலும், சமூக ரீதியிலும், நிர்வாக ரீதியிலும் தமிழக அரசை முடக்குவதற்கான ஓர் உத்தி என்றுதான் இதை நான் பார்க்க விரும்புகிறேன். அதிகாரிகள் மட்டத்தில் இந்த அரசு கலைக்கப்பட்டுவிடும் என்கிற பீதி கிளப்பப்பட்டு வருகிறது.

[திரு. கே. சுப்பராயன்] [1998 ஏப்ரல் 21

பொதுமக்கள் மத்தியிலும் இதே பிரச்சினைகள் கிளப்பப்பட்டு வருகின்றன. நிர்வாகத்தை முறைப்படி நடத்த முடியாமல், நிலை குலைப்பதற்குரிய ஓர் உத்தியாக அவர்கள் இதைச் செய்து வருகிறார்கள். இந்த நிலைமை விரிவாகவும், ஆழமாகவும் விவாதிக்கப்பட வேண்டிய விஷயம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக, முடிவு எடுப்பதிலே இரண்டு வகை உண்டு. ஒன்று, கிடைக்கின்ற விவரங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு, அவற்றைப் பரிசீலித்து முடிவுக்கு வருவது என்பது. பிறிதொரு வகை, முடிவுக்கு வந்துவிட்டு, அதற்குத் தகுந்த மாதிரி விவரங்கள் கொடுப்பது என்பது. இப்போது தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருப்பதும், இந்தியாவில் நடந்து கொண்டிருப்பதும் இரண்டாவது வகைப்பட்டதுதான். கலைத்துவிடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். நான் இந்த விஷயத்தைக் கொஞ்சம் தீவிரமாகக் கவனிக்க வேண்டும் என்பதற்காகக் குறிப்பிடுகிறேன். பாரதிய ஜனதா கட்சி என்ன சொல்கிறது; திரு. வாஜ்பாய் என்ன சொல்கிறார் என்று பார்ப்பது, நாம் அரசியல் கிட்டப்பார்வைக்கு இரையாகிவிட்டோம் என்று அர்த்தமாகிவிடும்.

உண்மையிலேயே இதனுடைய ஆழ்ந்த அர்த்தத்தை கவனிக்க வேண்டுமானால், ஜெயலலிதா என்ன சொல்கிறார் என்பதைப் பார்த்துத்தான், கலைப்பதும், கலைக்காமல் இருப்பதும் தீர்மானிக்கப்படுகின்றது என்பது ஒரு துரதிருஷ்டமான தேசிய விபத்தாகும். அத்தகைய ஒரு விபத்துக்கு பி.ஜே.பி. அரசாங்கம் ஆளாகியிருப்பது வேதனைக்குரியதாகும். நான் இங்கே குறிப்பிட விரும்புவது, எதை வைத்து மாநில அரசைக் கலைக்கலாம், எதை வைத்து கலைப்பதை நியாயப்படுத்தலாம் என்பதுதான் பிரச்சினை. தீவிரவாதம் என்று சொல்லப்படுமானால், அதுகுறித்து நான் விவாதிக்கத் தயார். தீவிரவாதம் என்பது இந்தியாவில், தமிழகத்தில் மட்டுமே நுழைந்துவிட்ட ஒரு சமூகத் தீங்கா? அரசியல் தீங்கா? இல்லை. தமிழகத்தில் வருவதற்கு முன்னரே இந்தியாவின் பல மாநிலங்களைப் பற்றி உலுக்கிய ஒன்றுதான் இந்தத் தீவிரவாதம்.

இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமானால், உலக அளவில் இதை எப்படிச் சந்திப்பது என்று அறிவியல் பூர்வமான கருத்தரங்குகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காலம். இது ஒரு சமூகப் பிரச்சினை; அரசியல் பிரச்சினை. இதை எப்படி அணுகுவது என்று



1998 ஏப்ரல் 21] [திரு. கே. சுப்பராயன்]

ஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறபோது, ஏதோ, தமிழ்நாட்டில் மட்டும் அது நுழைந்து விட்டது என்பது போன்ற தோற்றத்தைக் காட்ட முற்படுபவர்கள், அடக்க முடியாத அதிகாரப் பசி கொண்டவர்களின் ஆணவமே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

ஆனாலும், நான் இங்கே குறிப்பிட விரும்புவது, அவர்களின் ஆணவத்திற்கு மத்திய அரசு பலியாகிவிட்டதா? பி.ஜே.பி. மத்தியிலே அதிகாரத்தில் இருக்கிறது. பி.ஜே.பி.க்கு ஏதாவது அரசியல் கொள்கை உண்டா? அவர்கள் எதிர்த்தரப்பிலே இருந்தபோது, இதே 356-வது பிரிவிற்கு பலியான கட்சிதான் பி.ஜே.பி. இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், முதன்முதலில் இந்தியாவிலே 356 என்ற அந்தக் கத்திக்கு வெட்டுப்பட்ட இயக்கம் கம்யூனிஸ்ட் இயக்கம்தான். கேரள மண்ணிலே வெட்டப்பட்டது. அதேபோன்று பாதிக்கப்பட்ட இதே பி.ஜே.பி. அன்று என்ன சொன்னது, இப்போது என்ன சொல்கிறது என்பதை திரு. வாஜ்பாய் ஒரு பொறுப்புள்ள பிரதமர் என்ற முறையில் தமிழக நிர்வாகத்தை நிலை குலைத்துக் கொண்டிருக்கிற பிரச்சினை குறித்து உடனடியாக, நிச்சயமாக react செய்தாக வேண்டும். இல்லையென்று சொன்னால், பொறுப்புக்குரியவராக நடந்துகொள்ள வில்லை என்று அர்த்தப்பட்டுவிடும். இவர்கள் பாதிக்கப்பட்டபோது, என்ன சொன்னார்கள்? 356-வது பிரிவைப் பயன்படுத்தக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு என்ன சொல்கிறார்கள்? திரு. அத்வானி என்ன சொல்கிறார், திரு. வாஜ்பாய் என்ன சொல்கிறார் என்கிற விவரங்களை எல்லாம் நாம் விரிவாகப் பார்த்தால், உண்மையிலேயே வேதனையாகத்தான் இருக்கிறது.

ஒரு பேட்டியில் உள் துறை அமைச்சர் திரு. அத்வானி சொல்லியிருக்கிறார். வடகிழக்கு எல்லைப்புறத்தின், 7 மாநிலங்களில் தீவிரவாதத்தைச் சந்திப்பதற்காக மத்திய இணை அமைச்சரைக் கொண்ட ஒரு துறையே தோற்றுவிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். பஞ்சாபில் தீவிரவாதம் இல்லையா? காஷ்மீரில் இல்லையா? திரு. எல்.கே. அத்வானி அவர்கள் எதற்காக ஜம்மு போனார்? அங்கே என்ன நிகழ்ந்தது? தொடர்ந்து என்ன நடந்து கொண்டிருக்கிறது? ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் சமூக வாழ்வில் நிகழ்ந்துவிட்ட சமூகப் பிரச்சினையான தீவிரவாதத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கத்தினால்தான் சந்திக்க முடியும், இயலும் என்பதை மறந்துவிடுவோமானால், உண்மையிலேயே தவறிவிடுவோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. கே. சுப்பராயன்] [1998 ஏப்ரல் 21

*முற்பகல் 10-40*

இன்னொரு விஷயத்தை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏன் இந்த அரசைக் கலைப்பதற்குத் தீவிரமாக ஒப்புக் கொண்டிருப்பார்கள் என்று ஐயுறுகிறேன் என்றால் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள்—இது குறித்துச் சொல்ல ரொம்பவும் வேதனைப்படுகிறேன்—மத்திய அமைச்சரவையில் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்கள் எல்லாம் அங்கம் பெறக்கூடாது என்று சொல்கிறார். தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு களங்கமும், கறையும் ஆன ஜெயலலிதா அவர்கள் இன்றைக்கு இதைச் சொல்கிறார்கள்! மத்தியிலே அ.இ.அ.தி.மு.க. தன்னுடைய தூய்மையைக் காப்பாற்றிக்கொள்வதற்கு சேடப்பட்டி முத்தையாவை விடுவித்துக்கொண்டோம் என்று சொன்னார்கள்.

இன்று சென்னை சிறப்பு நீதிமன்றம் என்ன சொல்லியிருக்கிறது.? லஞ்ச ஊழல் குற்றச்சாட்டிலும், அதைப்போல இந்திய குற்றவியல் சட்டத்தின்படியும், அதிகாரத்திலிருந்து அரசையே ஏமாற்றினார் ஜெயலலிதா என்று குற்றஞ்சாட்டியிருக்கிறதே!, இத்தகைய ஊழலுக்கும், குற்றவியல் சட்டத்தின்படி நீதிமன்றத்தால் குற்றச்சாட்டுக்கும் தொடர்ந்து உள்ளாக்கப்பட்டு வருகிற ஒரு நபரின் நிர்பந்தத்திற்காக மத்திய அரசு பணியுமானால் தமிழகம் உண்மையிலேயே கடுமையான எதிர்விளைவைத் தோற்றுவிக்கும் என்பதை இந்தப் பேரவையின் வாயிலாக எச்சரிக்க விரும்புகிறேன்.

கலைக்க அடிப்படை இருக்குமானால், அதற்குரிய நியாயங்கள் இருக்குமானால் செய்யட்டும். அது வேறு விஷயம். ஆனால் இங்கே என்ன நடந்துகொண்டிருக்கிறது? இதே சென்னையில் உள் துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்களால் அனுப்பப்பட்ட இருவர் கொண்ட குழு, சிறப்புச் செயலாளர் தலைமையிலே வந்து ஆய்வு செய்த பிறகு, சென்னையிலே பேட்டி கொடுக்கிறது. சட்டம்-ஒழுங்கு கெட்டுவிடவில்லை; திருப்திகரமாக இருக்கிறது; மக்கள் அமைதியாக வாழ்கிறார்கள்; தீவிரவாதத்தை ஒடுக்குவதில் மாநில அரசு மிகச் சரியாகச் செயல்பட்டிருக்கிறது என்று திரு. அத்வானியினுடைய உள் துறை சிறப்புச் செயலாளர் கூறுகிறார். திரு. அத்வானி பற்றி நான் அக்கறை கொள்ள விரும்பவில்லை; தனிப்பட்ட திரு. அத்வானி பற்றி எனக்குக் கவலையில்லை, அக்கறையுமில்லை. ஆனால்



1998 ஏப்ரல் 21] [திரு. கே. சுப்பராயன்]

திரு. எல்.கே. அத்வானி உள் துறை அமைச்சர். அந்த உள் துறை அமைச்சர் எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு பேச வேண்டும். அந்த உள் துறை அமைச்சரின் கீழ் பணியாற்றுகிற சிறப்புச் செயலாளர் சென்னையிலே ஆய்வு புலன் ஆய்வு செய்துவிட்டு - எப்படிப்பட்ட ஆய்வு, மத்திய புலனாய்வுத் துறையின் மூலம் தனக்குக் கிடைத்த விவரங்களையெல்லாம் வைத்துக் கொண்டு, தமிழகத்தில் உள்ள அதிகாரிகளிடமிருந்து பல்வேறு விவரங்களைக் கேட்டுப் பெற்று, ஒப்பீடு செய்து பார்த்து, ஆய்வு செய்து முடித்த பிறகு ஸ்டேட்மெண்டைக் கொடுத்துவிட்டு டெல்லி சென்றவுடன், ஜெயலலிதா எதிர்ப்புத் தெரிவித்தார் என்பதற்காக உடனடியாக திரு. அத்வானி என்ன சொல்கிறார்? தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்கிறார். நான் கேட்க விரும்புகிறேன். அவர் அனுப்பிய அதிகாரி சென்னையில் சொல்கிறார், தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று. ஆனால் அவர்களை அனுப்பிய திரு. அத்வானி அடுத்தநாள் டெல்லியில் சொல்கிறார், தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு சிறப்பாக இல்லை என்று. அவரைச் சொல்ல வைத்தது எது? நல்லவேளை சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் திரு. அத்வானி மாதிரி, திரு. வாஜ்பாய் மாதிரி யாராவது நீதிபதி இருந்திருந்தால் என்ன ஆகும் என்று யோசித்துப் பாருங்கள். நிலைமை மாறியிருக்குமல்லவா? ஓர் அரசியல் நேர்மை வேண்டாமா? போட்டிருக்கின்ற சட்டையை, வேட்டியை இழந்துவிட்டு தெருவில் நிர்வாண ஓட்டம் நடத்துவதுபோல மிகச் சாதாரணப் பிரதமர் பதவிக்காக, மிகச் சாமான்ய அதிகார நாற்காலிகளுக்காக, எதற்காக இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதாகச் சொல்கிறார்களோ, அந்த இயக்கத்தின் கொள்கைகளை பலியிட்டுவிட்டு மத்தியிலே அரசாங்கத்தின் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, தமிழ்நாட்டில் ஜனநாயகத்தின் கழுத்தைத் திருகிக் கொல்கின்ற கொடுமையை ஒருபோதும் தமிழ்நாடு அனுமதிக்காது என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் குறிப்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நிறைவாக ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புவது, இங்கே ஜெயலலிதா அவர்கள் இன்றைக்கு அல்ல, தொடக்கத்திலிருந்தே நிர்பந்தத்தைக் கொடுத்தார்கள். எப்படிப்பட்ட நிர்பந்தம்.? மத்திய அமைச்சரவையிலே, இரண்டு பேர் அமைச்சர்கள். தயவுசெய்து இந்தத் தமிழ்நாடு தெரிந்துகொள்ள வேண்டும்; அவர்களுக்கு வாக்களித்தவர்களும் தெரிந்துகொள்ள வேண்டும். மத்திய

[திரு. கே. சுப்பராயன்] [1998 ஏப்ரல் 21

அமைச்சரவையிலே என்ன கேட்டார்? ஆர்.கே. குமார் என்ற அ.தி.மு.க. எம்.பி.க்கு எந்தப் பதவி கேட்டார்? நிதித் துறையிலே எது சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கேட்டார்? தன்மீதும், தன் உயிர்த்தோழி சசிகலாமீதும் இருக்கக்கூடிய வழக்குகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு, சுயமுடிவு எடுக்கிற அதிகாரம் உள்ள துறைகளைக் கேட்டு நிறைவேற்றினார்கள் என்றால், அதற்கு என்ன பொருள் என்பதை தயவுசெய்து நாம் பார்க்க வேண்டும்...

**திரு. பி. ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், உட்கார வேண்டும். உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

***திரு. பி. ஆர். சுந்தரம்:** சிறப்புக் கவன ஈர்ப்புப் பிரச்சினை என்று சொல்லிவிட்டு என்ன வேண்டுமானாலும் பேசினால், அதை நாங்கள் அனுமதிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், என்ன செய்வீர்கள்?.

முற்பகல் 10-45

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இது சிறப்புக் கவன ஈர்ப்புப் பிரச்சினை...

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எத்தனை பேர் நிற்கிறீர்கள்? எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** நான் உட்காரத் தயார் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காரத் தயார் இல்லை என்றால், நான் உங்களை உட்கார வைப்பேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** அவர், சபையில் இல்லாதவர்களைப்பற்றி எது வேண்டுமானாலும் பேசினால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அரசியல்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இது அரசியல் என்றால், சபையில் இல்லாதவர்களைப்பற்றிப் பேசுவது சட்டசபை மரபுக்குப் புறம்பானது.



1998 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும் பல தடவை பேசி இருக்கிறீர்கள், உங்களை அனுமதித்து இருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசி இருக்கிறீர்கள்; உங்களை அனுமதித்து இருக்கிறேன். (குறுக்கீடு) நூறு உதாரணம் சொல்ல முடியும், உட்காருங்கள். திரு. சுப்பராயன், நீங்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும். திரு. சுந்தரம் உட்காருங்கள்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** சப்ஜெக்ட் என்ன?

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அவர் உத்தரவு போட்டுக் கொண்டு இருக்கிறார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் எப்படி உத்தரவு போடுவார்? உட்காருங்கள். நான்தான் உத்தரவு போடுவேன், நீங்கள் உட்காருங்கள். திரு. சுந்தரமும் உட்கார வேண்டும்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** ஆர்.கே. குமாருக்கும், சசிகலாவுக்கும் எப்படி சப்ஜெக்ட் பொருத்தம் ஆகும்?.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சப்ஜெக்டுக்கு பொருத்தம் இருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியும். (குறுக்கீடு) அதிகாரம் என்னுடையது, நீங்கள் உட்காருங்கள். திரு. சுப்பராயன் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** சசிகலாவை தமிழ்நாட்டு அரசியலில் சம்பந்தப்படுத்தி இருக்கச் சொன்னது யார்? (குறுக்கீடு)

**திரு. பி. ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உறுப்பினர்தானே? (குறுக்கீடு) நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? திரு. சுந்தரம், நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா?

**திரு. இரா. தாமரைக்கனி:** இது சட்டசபையா அல்லது அரசியல் மேடையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு ஒரு பதிலைச் சொல்லுங்கள். நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? திரு. சுந்தரம் உட்காருங்கள். திரு. தாமரைக்கனி உட்காருங்கள். திரு. சுப்பராயன், உங்களுடைய பேச்சை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. தாமரைக்கனி:** அரசியல் மேடையில் பேச வேண்டியதை எல்லாம் இங்கே பேசினால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்தில் அரசியல் பேசக்கூடாது என்று எந்த விதியும் இல்லை. வரம்பு மீறிப் போனால், நடவடிக்கை எடுப்பதற்கு நான் இருக்கிறேன். ஆகையினால், நீங்கள் உட்கார வேண்டும். திரு. சுப்பராயன், உங்கள் பேச்சை உடனே முடிக்க வேண்டும். நீங்கள் அதிக நேரம் பேசிவிட்டீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். நீதிமன்றம் என்ன சொல்லியது என்பதை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். 1996-லே நீதிமன்றம், ஜெயலலிதா அவர்கள் பெட்டிஷன் போட்டபோது குறிப்பிட்டு இருக்கிறது. 11.10.1996-ல் ஹைகோர்ட் சொல்கிறது. "குற்றங்களின் தன்மையையும், கொடுமையையும் பார்த்தால் இவருக்கு ஒட்டுமொத்த ஜாமீன் அளிக்க முடியாது; ஜெயலலிதாவைக் கைது செய்து முழுமையாக விசாரணை நடத்த வேண்டும்" என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. "ஜெயலலிதாவைக் கைது செய்ததில் எவ்விதத் தவறும் இல்லை. 1996 ஆகஸ்ட் 14 ஆம் தேதி எப்.ஐ.ஆர். தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. இதில் சம்பந்தப்பட்ட செல்வகணபதியும் அதிகாரிகளும் 1996 அக்டோபர் 1 ஆம் தேதியே கைது செய்யப்பட்டுவிட்டனர். நீண்ட கால அவகாசத்திற்குப் பின்னரே ஜெயலலிதா கைது செய்யப்பட்டு உள்ளார்" என்றும் தீர்ப்பளித்தது.

"விசாரணை முறையாக நடப்பதற்கு இன்னும் சிறிது காலம் அவர் சிறையில் இருக்க வேண்டும்" என்றெல்லாம், நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்ட நபர், இந்த அரசைக் கலைப்பதில் பின்னணியாக





இருக்கிறார் என்பதால்தான், இந்த விவரங்களைச் சொல்கிறேன் என்பதைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன், சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு மத்திய உள் துறையின் சிறப்புச் செயலாளர் தலைமையில் தமிழகத்தினுடைய சட்டம்-ஒழுங்கு நிலைமை பற்றி ஆராய்ந்து, சட்டம்-ஒழுங்கு நிலைமை மிகவும் திருப்திகரமாக உள்ளது என்ற முறையிலே அந்தக் குழு அறிக்கை வெளியிட்டு இருக்கின்ற சூழ்நிலையிலே, மத்திய உள் துறை அமைச்சர் அவர்கள் சட்டம்-ஒழுங்கு நிலைமை சென்னையைப் பற்றித்தான் அறிக்கை இருக்குமேயொழிய, தமிழகத்தைப் பற்றியது அல்ல என்ற முறையிலே, உள்நோக்கம் கொண்ட ஒரு பேட்டியை வெளியிட்டு இருக்கிறார்கள். கோவை குண்டு வெடிப்பு பிரச்சினைபற்றி, அதனால் ஏற்பட்ட சட்டம்-ஒழுங்கு பற்றி ஆராய்வதற்கு வந்த குழு அதனுடைய அறிக்கை நிச்சயமாக சென்னையைப் பற்றித்தான் இருக்கும் என்று உள் துறை அமைச்சர் அவர்கள் கூறி இருப்பது சந்தேகத்திற்கு இடமானது; உள்நோக்கம் கொண்டது என்று நான் கருதுகின்றேன். தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு பிரச்சினையல்ல; பாகிஸ்தான் தூண்டுதலின் பேரில் ஐ.எஸ்.ஐ. தீவிரவாதம் பரவி உள்ளது என்றும் அவர் தன்னுடைய பேட்டியிலே கூறி உள்ளார். ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது உளவுத் துறையின் மூலம் விளைவிக்கும் குழப்பங்களுக்கு மாநில அரசுகள் பொறுப்பாக முடியாது. மத்திய அரசுதான் அதற்குள்ள பொறுப்பை ஏற்க வேண்டும். மற்ற நாடுகள் உளவுத் துறையின் மூலம் நடத்தும் செயல் திட்டங்களை முறியடிப்பதற்கு மாநில அரசுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. அதற்கான அதிகாரம், பொறுப்பு அனைத்தும் மத்திய அரசுக்கே உள்ளது. இந்நிலையில் இவர்கள் நேற்று ஒன்று, இன்று ஒன்று, நாளை ஒன்று என்று மாறி மாறி பேட்டி கொடுப்பது, அவர்கள் இருக்கின்ற நாற்காலியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக; அவர்கள் வகிக்கின்ற பதவியை காத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஆட்டுவிக்கும் ஆட்டக்காரிகளின் ஆட்டங்களுக்கு இவர்கள் ஆடிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். இவர்கள் தமிழக அரசைக் கலை, கலை என்பதும், 356-வது சட்டப் பிரிவைத் தவறாகப் பயன்படுத்த மாட்டோம் என்று

அவர்கள் கூறுவதும், அப்படிக் கூறிவிட்டு தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை பற்றி முரண்பாடாக அறிக்கை கொடுப்பதும் கண்டிக்கத்தக்க ஒன்று. இதை நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய லீக் சார்பாக வன்மையாகக் கண்டிக்கிறேன்.

*முற்பகல் 10-50*

மாநிலங்களில், ஐ.எஸ்.ஐ. போன்ற வெளிநாட்டு உளவு நிறுவனங்களால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு, மைய அரசுதான் பொறுப்பேற்க வேண்டுமேயொழிய நிச்சயமாக மாநில அரசுகளைப் பொறுப்பேற்க வைக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நேரத்தில் எனது கண்டனத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற, தமிழகத்தினுடைய நல்லாட்சியைச் சில உள்நோக்கங்களோடு, சொந்த சுயலாபத்திற்காகக் கலைத்துவிடவேண்டுமென்று சிலபேர் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே, மத்தியில் பொறுப்போடு ஆண்டுகொண்டிருக்கின்றவர்கள், பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் சில நேரங்களிலே அந்தப் பொறுப்புகளை மறந்துவிட்டோ அல்லது கவனக் குறைவாகவோ நடந்துகொள்வதன் விளைவாகத்தான் இன்றைக்கு தமிழக அரசின்மீது சிலபல அச்சுறுத்தல்கள் வந்துகொண்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் உணர்ந்திருக்கின்ற காரணத்தாலேதான் இதை ஓர் அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அண்மையிலே, இங்கே வந்த உள் துறைக் குழுவானது சரியானதொரு முறையிலே, இந்தத் தமிழகத்திலே சட்ட ஒழுங்கு நிலைமை சரியாக இருக்கிறது, மக்களிடம் அமைதி நிலவுகிறது என்கின்ற செய்திகளை எல்லாம் தெளிவாகக் கூறியதற்குப் பின்னாலும்கூட தங்களுடைய எண்ணங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக, தங்களிடம் உள்ள செல்வாக்கைத் தமிழகத்தின் நலன்களுக்குப் பயன்படுத்துவதற்கு





பதிலாக, தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவதற்கு பதிலாக அச்சுறுத்தல்களையும், மிரட்டல்களையும் மத்திய ஆட்சிக்குத் தந்து, அதன்மூலமாக அரசியல் ஆதாயம் தேட யார் நினைத்தாலும் இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் மட்டுமல்ல, இந்தத் தமிழகத்திலே உள்ள அத்தனை கோடி மக்களும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதனை மிகக் கடுமையாக எதிர்த்து அதற்காக எந்தவித தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பார்கள் என்பதை நான் இந்தநேரத்திலே எச்சரிக்கையாகக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காரணம் என்னவென்று சொன்னால், 1994-லே உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று வெளிவந்திருக்கிறது. மதிப்பிற்குரிய எஸ்.ஆர். பொம்மை அவர்கள் தலைமையிலே அமைந்த கர்நாடகத்தினுடைய ஆட்சியானது கலைக்கப்பட்ட நேரத்திலே, அது தொடர்பாக உச்ச நீதிமன்றத்திலே அதற்கான தீர்ப்பு ஒன்று வெளிவந்தது. அரசியல் சட்ட விதி 356-ஐ எந்தெந்த நேரங்களிலே பயன்படுத்தக்கூடாது என்பதற்கு 14 விதிமுறைகளை அதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றைக்கு அந்த ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்திலே, அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று தீர்ப்பைப் பெறுகிறார்கள். அந்தத் தீர்ப்பிலே உள்ள சில செய்திகளை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'Sawant. J. (for himself and on behalf of Kuldip Singh. J) - The Examples of the...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை முழுவதும் படிக்க வேண்டாம். அதிலே முக்கியமான ஷரத்தை மட்டும் தமிழிலே சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது என்ன ஒத்திவைப்புத் தீர்மானமா, கவன ஈர்ப்பா, நீண்ட நேரமாக விவாதம் நடக்கிறதே; எந்த விதியின்கீழ் பேசுகிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிமுறைக்குப் புறம்பாகப் பேசுவது யார்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி சபாநாயகரைக் கேட்கக்கூட சில விதிமுறைகள் இருக்கின்றன. எந்த விதியின் அடிப்படையில் இவர் எழுந்து பேசினார் என்பதை உறுப்பினர் தெரிவிப்பாரா?

[1998 ஏப்ரல் 21

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்குப் புறம்பாகப் போகும்போது இதுமாதிரி பேசவேண்டியிருக்கிறது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றிரண்டை மட்டும் குறிப்பாகப் படிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆரம்பத்தில் Appearing for so and so என்று சொன்னீர்களே, அது எல்லாம் தேவையில்லை. Important Clauses என்ன என்பதை மட்டும் ஆங்கிலத்திலோ அல்லது தமிழாக்கம் செய்தோ சொல்லுங்கள். அது போதும்.

**THIRU A. RAJENDRAN ALIAS DHEERAN:** ``A situation of maladministration in a State where a duly constituted Ministry enjoying majority support in the Assembly, is in office..."

முற்பகல் 10-55

முழுப் பெரும்பான்மையோடு இயங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு அமைச்சரவையைக் கலைக்க முடியாது என்பதைத்தான் இந்த வாசகத்திலே உச்ச நீதிமன்றமானது குறிப்பாக வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்தினுடைய ஆட்சியானது அசுர பலம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிகப் பெரும்பான்மையான அளவிற்கு இயங்கிக் கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) நேரத்திலே இந்த ஆட்சிக் கலைப்பானது அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக அமையும் என்ற காரணத்திற்காகத்தான் இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் இதனைப் பற்றி விவாதத்திற்கு எடுத்திருக்கிறோமே தவிர வேறொன்றும் இல்லை. அது மட்டுமல்ல. இன்னொன்றையும் தெளிவாகச் சொல்கிறார்கள்.

'Where a Ministry resigns or is dismissed on losing its majority support in the Assembly and the Governor recommends imposition of President's rule without exploring the possibility of installing an alternative Government enjoying such support or ordering fresh elections.'—

அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையும் இப்போதில்லை. முழு மெஜாரிட்டியோடு அமைதியான முறையிலே, நல்ல பல திட்டங்களைத் தீட்டி ஆண்டு கொண்டிருக்கிற அரசாக இருக்கிறது.



1998 ஏப்ரல் 21] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

இன்னொன்றையும் அவர்கள் 9-வது வரியிலே குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். இந்த மாநிலத்திலே நிதிநிலை நெருக்கடி ஏதேனும் இருக்குமேயானால், உதாரணத்திற்கு உத்திரப் பிரதேசத்தில் சம்பளம்கூடக் கொடுக்க இயலாத சூழ்நிலை இருப்பதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. ஊழியர்களுக்குச் சம்பளம்கூடத் தர முடியாத சூழ்நிலை அந்த மாநிலத்திலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைகூட நம்முடைய மாநிலத்தில் இல்லை. எந்தவிதமான நிதி நெருக்கடி நிலைமையும் இல்லை. கேட்பவருக்கெல்லாம் கேட்பதை வாரி வாரிக் கொடுக்கின்ற வள்ளலாக தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, எந்த வகையிலே பார்த்தாலும், சட்டம்-ஒழுங்கு சீராக இருக்கிறது. மக்கள் அமைதியாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். ஒருசில பேர்களுக்கு வேண்டுமானால் சங்கடங்கள் இருக்கலாமே தவிர, அந்த ஒருசில பேர்களுக்கும் தங்களுடைய சுய இலாபத்திற்காக இதனை வெளிப்படுத்தலாமே தவிர, நாடு அமைதியாக இருக்கிறது; மக்கள் அமைதியாக இருக்கிறார்கள்; சட்டம் இடம் தரவில்லை.

நான் இன்னொன்றையும், இந்தநேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை யாருடைய பிரச்சினை? முழுக்க முழுக்க ஸ்டேட் லிஸ்ட் என்று சொல்லக்கூடிய, மாநிலத்தினுடைய அதிகாரத்திற்குட்பட்டதுதான் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை. இதிலே மத்திய அரசானது தலையிடுவதற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்பது அழுத்தந்திருத்தமான கருத்து (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்தநேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வேண்டுமானால் அவர்கள் அறிவுரை வழங்கலாம்......

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக்கூட்ட மேடையிலே பேசுகிற மாதிரிப் பேசுகிறார்கள். இதை எப்படி அனுமதிக்கிறீர்கள்?

[1998 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் உட்காருங்கள். திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, சட்டம்--ஒழுங்குப் பிரச்சினை என்பது முழுக்க முழுக்க மாநில அரசினுடைய அதிகாரத்திற்குட்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, இன்றைக்குத் தமிழக அரசானது கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குப் பின்னாலே முறையான, ஒழுங்கான நடவடிக்கைகள் எடுத்திருப்பதைப் பற்றி எல்லாம் எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்களெல்லாம் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே, எல்லாம் முறையாக நடக்கிறது. அந்த முறை என்பது என்னவென்றே தெரியாதவர்கள் வேண்டுமானால் (மேசையைத் தட்டும் ஒலி) சிலரை வற்புறுத்தி, அச்சுறுத்தி அவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். அவர்கள் நினைக்கின்ற நினைப்பு—மனப்பால் குடிக்கிறார்கள். அந்த மனப்பால் குடிக்கின்ற நினைப்பிலே மண் விழுமே தவிர நிச்சயமாக—அவர்கள் நினைக்கின்ற கா்ரியம் எடுபடாது, நடக்காது, நடக்கவும் இந்தத் தமிழக மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.....

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Speaker Sir, I have to make a submission.

**Hon. SPEAKER:** No, No. You have not given your name. Your party Member has given the name and he has been permitted to speak.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Speaker Sir, not as a party Member, but as a Member of the House, I have to make a submission.

**Hon. SPEAKER:** You cannot make a submission without giving notice. Unless you say that it is a point of order, I am not permitting it.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Speaker Sir, Yes, it is a point of order.

**Hon. SPEAKER:** What is your point of order?

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Speaker Sir, I am thankful for permitting me to make my submission.



1998 ஏப்ரல் 21]

**Hon. SPEAKER:** No, Not your submission. Call it as point of order.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Speaker Sir, in connection with the point of order....

**Hon. SPEAKER:** No, No. Let us not play with the language. I have made it very clear to you. You are a learned scholar in many languages. So, I am just telling you, I am not allowing you to make any submission. I am only allowing you to raise a point of order. What is the point of order?

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Speaker Sir, the Members who have spoken on this subject have made a specific request that this being a very important issue involving many of the Constitutional issues relating to the very foundation of the Constitution, it is not the question of only the dismissal of the State Government but also ultimately it is a question of the dissolution of the House.

Therefore, I think, you may kindly permit that we will have a full-fledged debate and you must give an opportunity to all other Members to say their opinion. That is my request. I submit this for the consideration of our Honourable Chief Minister also. Let us fix up a date and time so that all other Members may express their opinion. That is my request.

*முற்பகல் 11-00*

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்து விடுகிறேன்.

இங்கே சிறப்புக் கவன ஈர்ப்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் போன்றவர்கள் எல்லாம், பொறுப்புள்ள ஒரு பிரதமரைப் பற்றி அரசியல் மேடையிலே விமர்சிப்பதுபோல, விமர்சிப்பது என்பது மிகுந்த வேதனைக்குரியதாக இருக்கின்றது. இன்றைய பிரதமராக இருக்கின்ற மாண்புமிகு திரு. வாஜ்பாய் அவர்கள் தன்னுடைய பொது வாழ்க்கையிலும் சரி, அல்லது தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, ஒரு நேர்மையான, உத்தமமான, லஞ்சலாவண்யம் இல்லாத மனிதர் என்று இந்திய நாடு மட்டுமல்ல...........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் சரியில்லை. உட்காருங்கள், நான் சொல்கிறேன்.

[1998 ஏப்ரல் 21

**திரு. ஜி. கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இருந்தாலும்கூட ஒரு பிரதமரை விமர்சிக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள், நீங்கள் அவர் பேச்சை கவனிக்கவில்லை என்று தெரிகிறது. (குறுக்கீடுகள்) மற்றவர்கள் யாரும் எழுந்து நிற்கக்கூடாது. அனைவரும் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) ஜி.கே. மணி உட்கார வேண்டும். நான் விளக்கம் சொல்கிறேன்.

அவர் பிரதமரை விமர்சனம் செய்யவில்லை. அவர் என்ன சொன்னார் என்றால், இவ்வளவு உயர்ந்த பதவியில் இருக்கிற பிரதமர், இவ்வளவு மரியாதைக்குரிய பிரதமர் தவறான கருத்துக்களுக்கு அடிமையாகக் கூடாது என்ற கருத்தைச் சொன்னாரே தவிர, பிரதமரை விமர்சனம் செய்யவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அடிக்கடி எழுந்து நிற்கிறீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், திரு. சுப்பராயன் அவர்களும், திரு. நிஜாமுதீன் அவர்களும், திரு. தீரன் அவர்களும், இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில், மத்தியிலே உள்ள அரசு மாநில அரசைப் பற்றி என்ன கருத்து கொண்டிருக்கிறது என்ற உள்ளடக்கத்தை வைத்து, சில செய்திகளை இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். ஆனால் அவற்றைப்பற்றி மிக விரிவாக இங்கே உரையாற்ற விரும்பவில்லை; பதில் அளிக்கவும் விரும்பவில்லை. நம்முடைய நண்பர் திரு. சுப்பராயன் அவர்கள் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களைக் குறைவாகக் குறிப்பிட்டதாக நண்பர் திரு. மணி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டி, திரு. வாஜ்பாய் அவர்கள் நேர்மையானவர், ஒழுக்க சீலர், லஞ்ச லாவண்யங்களுக்கு ஆட்படாதவர் என்றெல்லாம் சொன்னார்கள். அது திரு. வாஜ்பாயைப் பாராட்டுவதாக நான் எண்ணிக்கொள்ளவில்லை. திரு. வாஜ்பாயைப் பாராட்டுகிற நேரத்தில் லஞ்ச லாவண்யத்திற்கு ஆட்பட்டவர்கள் நாட்டிலே சிலபேர் இருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) திரு. மணி அவர்கள் இந்தச் சொற்றொடரின் மூலம் எடுத்துக் காட்டியதற்கு நான் மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



1998 ஏப்ரல் 21] [கலைஞர் மு. கருணாநிதி]

கடந்த 16ஆம் தேதியன்று, டெல்லியிலேயிருந்து உள் துறை சார்பாக இரண்டு பேர் கொண்ட குழு ஒன்று தமிழகத்திற்கு வந்து, தலைமைச் செயலகத்திலே முக்கியமான அதிகாரிகளையெல்லாம் அழைத்துப் பேசி, ஒரு நாள் முழுவதும் அவர்களோடு விவாதித்து, விடைபெற்றுச் செல்கின்ற நேரத்திலே ஒரு மரியாதை சந்திப்பு என்கிற வகையிலே முதலமைச்சராக இருக்கின்ற என்னையும் சந்தித்து விடைபெற்றுச் சென்றார்கள். அவர்கள் இங்கே எதற்காக அனுப்பப்பட்டார்கள் என்ற செய்திகள் எல்லாம் பத்திரிகைகளில் மிகப் பரபரப்பாக வெளியிடப்பட்டன. இதுபோன்ற நேரங்களில் பத்திரிகைகள் பரபரப்பாகச் செய்திகளை வெளியிடுவதைத் தவிர்க்க முடியாது. ஒரு பத்திரிகைக்கு, இன்னொரு பத்திரிகை போட்டி போட்டுக்கொண்டு செய்திகளை வெளியிட்டால்தான் விற்பனையாகும். கருத்துகளுக்கு அளிக்கப்படுகின்ற மதிப்பைவிட, ஜனநாயகத்துக்கு அளிக்கப்படுகின்ற மதிப்பைவிட, ஒரு நாடு நலமாக இருக்க வேண்டும், அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு அளிக்கப்படுகின்ற மதிப்பைவிட, இன்றைக்கு நாட்டில் பரபரப்புக்கு அதிக மதிப்பு தரப்படுகின்ற காரணத்தால், இந்த நிலை தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கிறது.

*முற்பகல் 11-05*

இரண்டு பேர் கொண்ட குழு ஒன்று தமிழகத்திற்கு வருகிறது என்றவுடனேயே ஒவ்வொரு பத்திரிகையிலும் கொட்டை எழுத்துக்களில், தமிழக அரசைக் கலைப்பதற்காக யோசனை சொல்ல வருகிறது என்ற ரீதியிலும், சட்டம்-ஒழுங்கு எந்த அளவிற்குக் கெட்டிருக்கிறது என்பதை ஆராய வருகிறது என்ற வகையிலும், இத்துடன் கருணாநிதி ஆட்சி முடிந்தது என்று ஜாதகம் கணிக்கின்ற வகையிலும் பல்வேறு செய்திகள் பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டன. ஆனால் இங்கே வந்த அந்தக் குழுவினர் பல நுணுக்கமான விஷயங்களை எல்லாம் ஆராய்ந்து, கோவையில் நடைபெற்ற கலவரம், அதன் தொடர்பாக உருவான குண்டு வெடிப்புச் சம்பவங்கள், அரசு எடுத்த நடவடிக்கைகள், காவல் துறை திறம்பட அமைதியைக் காப்பதற்காக அல்லும் பகலும் பாடுபட்டு, மக்களுடைய பாராட்டுதலைப் பெற்ற நிலை, குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவர்கள்கூட பாராட்டக்கூடிய அளவிற்கு, தமிழ்நாட்டிலே உள்ளவர்க்ள் பாராட்டக்கூடிய அளவிற்கு, காவல் துறையினர் பாடுபட்ட அந்த நிலை—இவற்றை எல்லாம் பார்த்துவிட்டு, அவர்கள் டெல்லிக்குத் திரும்பினார்கள். ஆட்சி கலைக்கப்பட்டுவிடும், அதற்காக வந்திருக்கிறார்கள், அப்படிப்பட்ட ஒரு செய்தியைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக, செய்திகள் வெளியிடப்பட்டதற்கு மாறாக, பத்திரிகைகளிலே வேறுவிதமாகச் செய்திகள் வெளிவந்தன.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 21 முற்பகல் 11-05

கல்கத்தாவிலிருந்து வெளிவருகிற 'தி டெலிகிராப்' என்ற ஏடு 'Team gives Law and Order certificate. Centre's clean chit to Karunanidhi' என்று பெரும் தலைப்பிட்டுச் செய்தி வெளியிட்டது. ஹைதராபாத்திலிருந்து வெளிவருகின்ற 'நியூஸ் டைம்' என்கிற பிரபலமான பத்திரிகை 'Set back for Jayalalitha's campaign. Central Team's clean chit to Tamil Nadu' என்ற தலைப்பிலே அது ஒரு நீண்ட செய்தியை வெளியிட்டது. டெல்லியிலேயிருந்து வெளிவருகின்ற புகழ்பெற்ற, 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' என்ற அந்தப் பத்திரிகை 'Central Team gives clean chit to D.M.K. Government' என்ற தலைப்பிட்டு ஒரு செய்தியை வெளியிட்டு இருக்கின்றது. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை 'Central Team gives clean chit on law and order' என்ற தலைப்பில் ஒரு நீண்ட செய்தியை வெளியிட்டது மாத்திரமல்ல, தலையங்கமும் தீட்டியிருக்கின்றது.

அதுமாத்திரமல்ல. 'தினமணி' ஏட்டில், 'சட்டம் - ஒழுங்கில் திருப்தி, பயங்கரவாத மாநிலம் என்பது நியாயமற்றது' என்று அந்தக் குழுவினர் வெளியிட்ட கருத்தைத் தலைப்பிட்டு, செய்தியாக வெளியிட்டது மாத்திரம் அல்ல, தினமணி எழுதிய தலையங்கத்திலேகூட, 'தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலை மிகவும் மேம்பட்டிருக்கிறது, கோவை குண்டு வெடிப்பு குறித்து, சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை, அரசியல் சாசன 365-வது பிரிவைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இவை எல்லாம், தமிழக சட்டம்-ஒழுங்கு நிலை குறித்து ஆராய்ந்த இரண்டு உறுப்பினர் கொண்ட மத்திய அதிகாரிகள் குழு, சென்னையில் தெரிவித்த கருத்துக்கள்' என்று தொடங்கி, இடையிலே முத்தாய்ப்பாக, 'வெடிகுண்டுகளைக் கைப்பற்றுவதிலும், தீவிரவாதிகளைக் கைது செய்வதிலும், முனைப்போடு செயல்படும் தமிழகக் காவல் துறையினருக்கு, உதவ வேண்டிய கடமை மத்திய அரசுக்கு உள்ளது' என்று தலையங்கத்திலே குறிப்பிட்டு இருக்கிறது.

நம்முடைய நண்பர் திரு. சுப்பராயன் அவர்களும், நண்பர் திரு. ஞானசேகரன் அவர்களும் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். தீவிரவாதத்தை அல்லது சில வன்முறைச் செயல்களை மாத்திரம் வைத்துக் கொண்டு, ஒரேயடியாக இந்த மாநிலத்திலே சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்ற காரணத்தைக் கூறி, ஆட்சியைக் கலைப்பதற்கு முன்வருவதிலே என்ன நியாயம் இருக்க முடியும் என்றெல்லாம் கேட்டார்கள்.

இந்தியாவிலே வேறு பகுதிகளிலே இந்த நிலைமை இல்லையா என்றுகூட அவர்கள் இங்கே கேட்டார்கள். இரண்டு நாட்களாக வந்து



1998 ஏப்ரல் 21] [கலைஞர் மு. கருணாநிதி]

கொண்டிருக்கின்ற செய்திகளைப் பார்த்தால், 'இந்து' பத்திரிகையிலேயே 21-4-1998-ல் 'Udhampur massacre toll rises to 26'. 26 பேர், ஜம்மு-காஷ்மீரில் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த 26 பேர் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். ஏதோ அங்கே போய் அடைக்கலம் தேடி அல்லது தங்குவதற்காக வந்திருக்கிறோம் என்று சொல்லி, உள்ளே நுழைந்த தீவிரவாதிகள் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த 26 பேரை, கொன்று குவித்து இருக்கின்றார்கள். இதற்கு 'உதம்பூர் படுகொலை' என்றே தலைப்பிட்டு 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டு இருக்கின்றது.

முற்பகல் 11-10

அதைப்போலவே 'எக்ஸ்பிரஸிலும்' மற்ற பத்திரிகைகளிலும் இந்தச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இன்று காலையிலேகூட டெல்லியிலே வெளிவந்த ஒரு செய்தி எனக்குக் கிடைத்தது. 20-4-1998 அன்று நாகாலாந்திலே உள்ள Mokokchung மாவட்டத்தில் தலைமறைவு தீவிரவாதிகள் கண்ணிவெடிகள் மூலம் தாக்கியதில் இராணுவ மேஜர் ஒருவரும், இரண்டு சிப்பாய்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மேலும் 6 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். இவையெல்லாம் இந்தியாவில்தான் நடக்கின்றன. மேகாலயாவோ, நாகாலாந்தோ இவை இந்தியாவில்தான் இருக்கின்றன. காஷ்மீர் இந்தியாவிற்குச் சொந்தம் என்று நாம் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அங்கேயும் நடைபெற்றிருக்கின்றது. இதற்கு முன்பும் இப்படிப் பல காரியங்கள் நடைபெற்று இருக்கின்றன. இவைகளையெல்லாம் வைத்து, சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்று ஓர் ஆட்சியைக் கலைப்பதாக இருந்தால், அது மிகச் சுலபம்.

ஒரு தேர்தலிலே ஒரு கட்சியோ, அல்லது ஓர் அணியோ வெற்றி பெற்று ஓர் ஆட்சி பொறுப்புக்கு வந்தவுடன், வெற்றி பெறமுடியாத அணி, சட்டம்-ஒழுங்கு இவைகளுக்கு மாறாகச் சில காரியங்களைச் செய்து, அதன் மூலமாக சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று காட்டி, ஆட்சியைக் கலைத்துவிட முன்வரமுடியும். எனவே சட்டம்-ஒழுங்கு நிலைமையை மாத்திரம் காட்டி ஆட்சியைக் கலைத்துவிட முடியாது. அது மாத்திரமல்ல. இன்றைக்கு இங்கே நம்முடைய நண்பர்கள் எடுத்துக்காட்டியதைப்போல, கிராமப்புறத்திலே இருக்கின்ற சிறு குழந்தைகளுடைய வாயிலேகூட புழங்கக்கூடிய சொல்லாக '356' என்ற சொல் மாறியிருக்கிறது. அதுவரையிலே எனக்கு மகிழ்ச்சிதான். ஏனென்றால் '356' அரசியல் சட்டத்திலே இருக்கக்கூடாது என்று ஆரம்ப காலத்திலேயிருந்து வாதாடி வருகின்ற இயக்கங்களிலே ஒன்று திராவிட முன்னேற்றக் கழகம். அந்த 356-ஐப் பற்றி இன்றைக்கு நாடு முழுவதும் பேசப்படுகின்ற ஒரு சூழ்நிலை வருகின்றபோது விமர்சிக்கின்ற

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 21

மற்ற இடதுசாரி கட்சிகளைப்போல திராவிட முன்னேற்றக் கழகமும் மகிழ்ச்சியடைகிறது. பெருமையடைகிறது, இந்த 356-ஐ ஏன் பயன்படுத்துகிறோம்? மாநில அரசு சரியாக இல்லாவிட்டால் பயன்படுத்த வேண்டுமென்று ஒரு காலத்திலே சொல்லப்பட்டது. ஆனால், இந்த '356' கேள்விக்குறியாக ஆன பல நிகழ்வுகளைப்பற்றி நண்பர் திரு. தீரன் எடுத்துக்காட்டியதைப்போல நாம் மிக நன்றாக அறிவோம். '356' உச்சநீதிமன்றம் வரையில் எடுத்துச்செல்லப்பட்டு, அதனுடைய முடிவு என்னவாயிற்று என்பதை அவையிலே உள்ள உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். நாட்டு மக்களும் மிக நன்றாக அறிவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எப்படியாவது கலைத்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு, அதற்காக இன்றைக்குப் பல்வேறு பிரயத்தனங்களிலே ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள், டெல்லியிலே இருப்பவர்களை அச்சுறுத்தி, நிர்பந்தப்படுத்தி, பல்வேறு வகையான காரணங்களைச் சொல்லி அவர்களுடைய முயற்சிக்கு வெற்றி கிட்ட வேண்டுமென்று இன்றைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் அன்றைக்கே இந்த அவையிலே சொல்லியிருக்கின்றேன்.

ஓர் ஆட்சி இருப்பது அல்லது இல்லாமல் போவது, இந்த ஆட்சியிலே இருப்பவர்களுக்கு அதனால் எந்தவிதமான பெரிய விளைவுகளும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. என்னைப் பொறுத்தவரையில் இந்த முறை ஆட்சி கலைக்கப்பட்டால் அது ஒரு 'ரெக்கார்டு', மூன்றாவது முறையாக கருணாநிதி ஆட்சி கலைக்கப்பட்டது என்று. ஏற்கெனவே இரண்டு முறை கலைக்கப்பட்டிருக்கிறது. ஓர் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களோடு சேர்ந்து ஜனநாயகத்தைக் காப்பாற்ற கொடி தூக்கினோம் என்பதற்காக ஒரு முறை கலைக்கப்பட்டது. இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுக்காக அனுதாபம் காட்டியதற்கு மாறாக விடுதலைப் புலிகளை ஆதரித்தார்கள் என்கின்ற வகையில் அவர்களுடைய வன்முறைகளை எல்லாம் ஆதரித்தோம் என்பது போன்ற சில குற்றச்சாட்டுக்களைச் சொல்லி இரண்டாவது முறையாகக் கலைக்கப்பட்டது.

இப்போது மூன்றாவது முறையாக பதவியிலே எப்படியும் இருந்துதான் தீர வேண்டும் என்பதற்காக யாரோ சிலரைத் திருப்திப்படுத்துவதற்காக இந்த ஆட்சி கலைக்கப்படுகிறது என்றால் நான் உள்ளபடியே பெருமைப்படுகின்றேன். எங்களுடைய ஆட்சி கலைக்கப்பட்டாவது திரு. வாஜ்பாயினுடைய ஆட்சி காப்பாற்றப்பட்டதே என்பதற்காக நான் மகிழ்ச்சியடைவேன். அதற்கு நான்தான் பலியாக வேண்டுமென்றால், என்னுடைய ஆட்சிதான் பலியாக வேண்டுமென்றால்



1998 ஏப்ரல் 21] [கலைஞர் மு கருணாநிதி]

நான் அதிலே மகிழ்ச்சியடைவேன். ஆனால் திரு. வாஜ்பாய் அவர்கள் ராஜ்யசபாவிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை 356-ஐப் பயன்படுத்திக் கலைக்கமாட்டோம் என்று. அதைச் சிலர் இங்கே எடுத்து வைத்துக்கொண்டு வார்த்தை விளையாட்டு விளையாடுகிறார்கள். அவர் 356-ஐப் பயன்படுத்திக் கலைக்கமாட்டோம் என்றுதான் சொன்னார். நாங்கள் வேறு முறைகளிலே இந்த ஆட்சியைக் கலைப்போம் என்றெல்லாம் இன்றைக்கு மேடைகளிலே பேசிக்கொண்டிருக்கிறார்கள். திரு. ஞானசேகரன் குறிப்பிட்டதைப்போல சிலபேர் திடீரென நள்ளிரவிலே இந்த ஆட்சி கலைக்கப்படும் என்றெல்லாம் கூடச் சொல்கிறார்கள். கலைக்கப்படுவது, எப்போது கலைக்கப்பட்டால் என்ன? நடுப்பகலிலே கலைக்கப்பட்டால் என்ன? நள்ளிரவிலே கலைக்கப்பட்டால் என்ன? அது இருளிலே கலைக்கப்பட்டாலும், வெளிச்சத்திலே கலைக்கப்பட்டாலும், கலைப்பு கலைப்புதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அந்தக் கலைப்பைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. கவலைப்படுகிற அரசும் திராவிட முன்னேற்றக் கழக அரசு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி).

*முற்பகல் 11-15*

எனக்கு இன்றைக்குள்ள மகிழ்ச்சி எல்லாம், நம்முடைய கட்சிகள் நேற்றையதினம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இவர்கள் எல்லாம் மத்தியிலிருந்து வருகிற அ.தி.மு.க அமைச்சர்கள் - நான் எல்லா அமைச்சர்களையும் சொல்லமாட்டேன்—அ.தி.மு.க. அமைச்சர்கள் இந்த ஆட்சியைப்பற்றிப் பேசுகின்ற பேச்சுக்களுக்கு எல்லாம் கண்டனம் தெரிவித்து, இப்படிக் குழுக்களை அனுப்புவது சரியல்ல என்பதையும் வற்புறுத்தி தர்ணா போராட்டம் நடத்தியிருக்கின்றார்கள்.

இன்றைக்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் 'இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே திரு. ஞானசேகரன் அவர்கள் 'இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நம்முடைய சுப்பராயன் அவர்கள், இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பிலே திரு. நிஜாமுதீன் அவர்கள், பட்டாளி மக்கள் கட்சி 2-ன் சார்பில் நம்முடைய தீரன் அவர்கள், இவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு ஆதரவாகத் தந்துள்ள இந்த வார்த்தைகள் எனக்குத் தேனாக இனிக்கின்றன. எனக்குத் தெம்பூட்டுகின்றன. ஆட்சி கலைக்கப்படுவதைப்பற்றி நான் கவலைப்பட மாட்டேன். இவ்வளவுபேர் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குச் சாதகமாக இருக்கின்றார்கள் என்கின்ற இந்த ஒரு நிலையே எனக்குப் போதுமானது. இது தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளத்தைப் பிரதிபலிக்கின்ற ஒன்று என்பதை நான் மிக மிக நன்றாக அறிவேன். தெளிவாகவே அறிவேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 21

திரு. வாஜ்பாயைப் பொறுத்தவரையில் அவர் சொன்ன சொல்லிலிருந்து மாறுவாரா, மாட்டாரா என்பது அவரைப் பொறுத்த விஷயம். அவரிடத்திலே எனக்கு மதிப்புண்டு. ஏதோ, இன்றைக்கு இந்த ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கின்ற வார்த்தை அல்ல இது. அவரைத் தீவிரமாக நான் எதிர்த்த அந்தக் காலகட்டத்திலேயே, அவருடைய கொள்கைகளுக்கு முரண்பாடாகப் பல சம்பவங்கள் நடைபெற்றபோது அதைக் கண்டித்த அந்தக் காலகட்டத்திலேயே, பாபர் மசூதிப் பிரச்சினை எல்லாம் உருவான அந்தக் காலத்திலேயே திரு. வாஜ்பாயைக் கண்டித்தபோதெல்லாம்கூட நான் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். ஒரு நல்ல மனிதர், 'Honest man' ஆனால் Wrong Party-யிலே இருக்கிறார், என்று நான் அன்றைக்கே சொல்லியிருக்கின்றேன். அதைத்தான் இன்றைக்கும் சொல்கின்றேன். அவர் ஒரு நிதானமான, நேர்மையான மனிதர் என்பதிலே இன்றைக்கும் எனக்குச் சந்தேகம் இல்லை. நாளைக்கு இந்த ஆட்சியைக் கலைத்துவிட்டால்கூட நான் அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ளப் போவதில்லை. நேர்மையான மனிதர்தான், என்ன செய்வது? ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற நிர்பந்தத்திற்காகப் பணிந்து விட்டார் என்றுதான் சொல்வேனே தவிர, அவர் நேர்மையற்றவர் என்று நான் நிச்சயமாகச் சொல்லமாட்டேன். அவருக்கு ஒரு சங்கடத்தை இன்றைக்கு உண்டாக்குகின்றனர்.

நான் கடைசியாக, நீங்கள் எல்லாம் எடுத்து வைத்த இந்த விவாதங்களின் அடிப்படையிலே ஒன்றை மாத்திரம் சொல்கின்றேன். திரு. வாஜ்பாய் அவர்கள் நல்ல கவிஞரும்கூட. பாரதியாருடைய பாடல்களைக்கூட ஒருமுறை நாடாளுமன்றத்திலே அவர் பாடிக்காட்டினார். நான் கேட்டிருக்கின்றேன். அதற்கு நான் சொல்கின்றேன். 'கண்களை விற்று சித்திரம் வாங்குவாரோ' என்று பாரதி பாடியிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல திரு. வாஜ்பாய் அவர்களே, ஜனநாயகத்தைப் பலிகொடுத்து ஆட்சியைக் காப்பற்றிக் கொள்வீர்களா என்று கேட்டால் நிச்சயமாக நீங்கள் கண்களை விற்றுச் சித்திரம் வாங்கமாட்டீர்கள் என்று எனக்கு மிக நன்றாகத் தெரியும். ஆனால் ஒன்று, மத்திய அரசுக்கு நான் சொல்லிக் கொள்வேன். மாநில அரசுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள். 'தினமணியிலே' எழுதப்பட்ட தலையங்கத்தைப்போல மாநில அரசுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள். நான் உள் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அத்வானி அவர்களைச் சந்தித்தபோது, அந்த ஒத்துழைப்பைத்தான் அவரிடத்திலே கேட்டிருக்கிறேன்.



1998 ஏப்ரல் 21] [கலைஞர் மு. கருணாநிதி]

தீவிரவாதம் எந்த வடிவத்திலே வந்தாலும், எந்த மதத்தினுடைய உருக்கொண்டு வந்தாலும், அந்தத் தீவிரவாதத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு இங்கிருக்கின்ற அத்தனை பேருடைய துணையோடு வீழ்த்துவதிலே பின்வாங்காது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்கு ஒத்துழைப்பாக நான் கேட்டுள்ள போலீஸ் படையை நவீனப்படுத்த, மேலும் தீவிரப்படுத்த ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் கேட்டிருக்கிறேன். அதைத் தர வேண்டும். கோயம்புத்தூரிலே ஒரு பட்டாலியன் நிறுவுவதற்கு நான் அனுமதி கேட்டிருக்கிறேன். அதைத் தர வேண்டும். இப்படிக் காவல் துறையைப் பலப்படுத்துவதற்கு, தீவிரப்படுத்துவதற்கு, தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு மாநில அரசுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அத்தனை உதவிகளையும் மத்திய அரசு செய்ய வேண்டுமென்று இங்கே எடுத்து வைக்கப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு மத்திய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசு இன்னும் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறது என்றால், கோரிக்கை வைக்கிறது என்றால் மத்திய அரசும் இருக்க வேண்டும், மாநில அரசும் இருக்க வேண்டும் என்ற அந்த எண்ணத்தோடுதான் இதைச் சொல்கின்றேன் என்பதைக் குறிப்பிட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

## 4. கவன ஈர்ப்பு

### (அ) இந்திய முறை மருத்துவர்களை தாலுகா, நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளில் நியமனம் செய்யக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, விதி 55-ன்கீழ் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்பைக் கொண்டு வருவார்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு தாலுகா, நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளில் இந்திய முறை மருத்துவர்களை நியமிக்க வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1998 ஏப்ரல் 21

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

அரசு ஒவ்வொரு வருடமும் பகுதி-2 திட்டத்தின்கீழ் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், தாலுகா மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவற்றில் அவ்வப்போது சித்தா, ஆயுர்வேதா, யுனானி போன்ற இந்திய மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டு வருகின்றன. இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் தாலுகா மருத்துவமனைகளிலும் சித்தா பிரிவுகள் இயங்கி வருகின்றன. மொத்தமுள்ள 65 தாலுகா அல்லாத மருத்துவமனைகளில் 13 இடங்களில் சித்தா பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 1420 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 283 இடங்களில் சித்தா பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது 466 சித்தா உதவி மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஆயுர் வேதாவில் 15 உதவி மருத்துவர்களும் யுனானியில் 17 உதவி மருத்துவர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழுவினால் நேரடி நியமனம் செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சித்த மருத்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட பதவிகளான முதல்வர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பதவிகள் போன்றவை ஏற்கெனவே நிரப்பப்பட்டு உள்ளன.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், மொத்தமுள்ள 65 தாலுகா அல்லாத மருத்துவமனைகளில் 13 இடங்களில் சித்தா பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன என்றும் மொத்தமுள்ள 1420 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 283 இடங்களில் சித்தா பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன என்றும் ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார். மொத்தத்தில் 466 சித்தா உதவி மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் என்றும் ஆயுர் வேதாவில் 15 என்றும் யுனானியில் 17 என்றும் புள்ளிவிவரத்தைச் சொல்லியிருக்கிறார். நான் கேட்டிருந்த கேள்வியிலே நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் பணியில் அமர்த்தப்படாமல் உள்ள காலியிடங்கள் எத்தனை என்ற விவரம் தெரியப்படுத்தப்படவில்லை. இருந்தாலும் கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரத்தின் அடிப்படையிலேகூட இன்னும் ஆயிரத்திற்கும் அதிகமான இடங்களில்





இந்திய முறை, சித்தா, ஆயுர் வேதா, யுனானி மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டும். அதிலும் ஆயிரத்திற்கும் அதிகமாக சித்தா மருத்துவத்திலே பட்டம் பெற்ற மருத்துவர்கள் பணியிலே அமர்த்தப்படாமல் இருக்கின்ற சூழ்நிலையையும் கருத்திலே கொண்டு மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்தில் ஒரே நேரத்தில் 200 ஆரம்ப சுகாதார நிலையங்களிலே சித்த மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்தினார்கள். அதேபோல தமிழுக்காக வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த அரசு இன்னும் நியமிக்கப்படாமல் இருக்கின்ற ஆயிரத்திற்கும் அதிகமான மருத்துவமனைகளில் குறைந்தபட்சம் இந்த ஆண்டு 250 பேரையாவது நியமிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள எல்லா தாலுகா மருத்துவமனைகளிலேயும் நாம் சித்த மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்று முடிவு எடுத்து ஆணை பிறப்பித்திருக்கிறோம். அடுத்த கட்டமாக ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயும் சித்த மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் முடிவு எடுத்து இந்த ஆண்டு 10 ஆரம்ப சுகாதார நிலையங்களிலே முதல் கட்டமாக நியமிக்க இருக்கிறோம். நான் மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தியபோது இந்தியா முழுவதும் இந்திய மருத்துவத்திற்காக அதிகமான நிதியைப் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள், எனவே தமிழகத்திற்கு நீங்கள் அந்த நிதித் தொகுப்பிலிருந்து பணம் கேட்டால் நான் தாராளமாக வழங்குகிறேன் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதைப் பயன்படுத்திக்கொண்டு நம் மாநிலத்திலே உள்ள எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் சித்த மருத்துவர்களை நியமிப்பதற்கு உதவி கேட்க இருக்கிறோம். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிச்சயமாக இந்த அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 2 கேள்விகள் என்று கட்டாயமா என்ன ? எல்லாவற்றையும் ஒரே தடவையிலி பேச வேண்டியதுதானே. அதிலே ஒன்றும் விதி கிடையாது. சீக்கிரம் முடியுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** தலைவர் அவர்களே, நான் விதியைப் பற்றிப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருக்கும் நினைவூட்டுவதற்காகச் சொல்கிறேன். இரண்டுக்கு மேற்படாமல் என்றுதான் விதி இருக்கிறது.

அதனால் 2 கேள்விகள் கேட்க வேண்டும் என்று விதி கிடையாது. நான் இப்போது உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஓர் உறுப்பினர் மாண்புமிகு முதலமைச்சரைப் பார்த்து எங்கள் ஊரிலே காவல் நிலையம் திறக்கவில்லை, எப்போது திறக்கப்போகிறீர்கள் என்று கேட்கும்போது முதலமைச்சர் அவர்கள் எழுந்து நின்று 6 மாதத்திற்கு முன்னாலேயே திறந்தாகிவிட்டது என்று சொன்னால் அடுத்தாற்போல் நான் கேள்வியை அனுமதிக்க வேண்டியதில்லை. அதனால் அது என்னுடைய உரிமை. நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாரம்பரிய சித்த மருத்துவர்கள் ஆயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். இந்த பாரம்பரிய சித்த மருத்துவர்களுக்கு நம்முடைய அரசு 250 ரூபாய் உதவித்தொகை வழங்குகிறது. ஆகவே உதவித் தொகையை குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் அளவிற்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தொகையை வாங்குவதற்குள்ளே அவர்களுக்குப் போதும் போதும் என்று ஆகிவிடுகிறது. மிகவும் சிரமப்படுத்துகிறார்கள். எனவே அந்த விதிகளைத் தளர்த்தி சித்த மருத்துவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகையை குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாயாவது உயர்த்தித்தர அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு முதலில் சித்த மருத்துவத்திற்கு உயிர் கொடுக்க முயற்சிக்கிறது. அதற்கு அடுத்து சித்த மருத்துவர்களுக்கும் உயிர் கொடுக்க முயற்சிக்கும்.

**(ஆ) கடலங்குடி கிராமத்தில் (மயிலாடுதுறை வட்டம்) இயற்கை எரிவாயுத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் கடிதம் பெற நடவடிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, விதி 55-ன் கீழ் திரு. குத்தலாம் பி. கல்யாணம் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்பைக் கொண்டு வருவார்.

***திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம் மயிலாடுதுறை வட்டம், கடலங்குடி கிராமத்தில் இயற்கை எரிவாயுத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் கடிதம் பெற நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம்' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு





மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

குத்தாலத்தில் கிடைக்கும் எரிவாயு முழுவதையும் (நாள் ஒன்றுக்கு 80,000 கன மீட்டர் அளவு), தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே ஒதுக்கீடு செய்யுமாறு வேண்டி மத்திய அரசின் பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயுவின் அமைச்சரகச் செயலருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதுகுறித்து மத்திய அரசின் பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயுவின் இயக்குநர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:

"குத்தாலத்தில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவின் அளவு மிகவும் குறைவாக இருப்பதால் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நோக்கமான உயர் அளவு மின் நிலையத்தினை நிறுவ இயலாது. ஆகையால், தனியார் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்து, அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை தமிழ்நாடு மின்வாரிய மின் கட்டமைப்பு மூலமாக மின்விசை எடுத்துச் செல்லப்படும்", இயற்கை எரிவாயு கிடைக்கும் இடம் குத்தாலம்; மின் நிலையம் அமைக்க உத்தேசம் செய்த இடம் கடலங்குடி.

*முற்பகல் 11-25*

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். இந்தத் திட்டத்தை பொறுத்த அளவில் குத்தாலம் பகுதியில் 2 எரிவாயுக் கிணறுகளில் மொத்தமாக 80,000 கன மீட்டர் என்றும் 1 இலட்சம் கன மீட்டர் என்றும் 2 கிணறுகளில் சக்ஸஸான முடிவுகள் கிடைத்திருக்கின்றன.

ஆனால் அவர்கள் இங்கே சொல்லியிருப்பது 80 ஆயிரம் கன மீட்டர் அளவுக்குக் குறைவாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எனக்குக் கிடைத்த தகவலின்படி 80 ஆயிரம் கன மீட்டருக்குக் குறைவாக இருந்தால் ஓ.என்.ஜி.சி. முடிவு எடுக்கவேண்டும் என்றும், ஒரு லட்சத்திற்கு மேல் இருந்தால் GAIL - Gas Authority of India limited முடிவு எடுக்கவேண்டும் என்றும் தெரிகிறது. எனவே, 80 ஆயிரம் கன மீட்டருக்குமேல் அவர்கள் காட்டாமல் குறைவாகக்

[திரு. குத்தாலம் பி. கல்யாணம்] [1998 ஏப்ரல் 21

காட்டியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேலும் நம்முடைய Chairman, Tamil Nadu Electricity Board, Mr. Om Kumar, IAS அவர்களால் மத்திய அரசில் இருக்கிற Dr. Vijay Kalkar, Secretary, Ministry for Petroleum and Natural Gas அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் அவர்களே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அதைக் கொடுத்திருக்கிறேன். ``In Kuttalam area alove 1,80,000 Cubic metre per day of gas is available for marketing to TNEB which will be capable of generating about 35 M.W." என்று அவர்களே கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது நம்முடைய அரசாங்கமே Letter of Commitment மூலமாகப் பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அந்தப் பகுதியில் இருக்கிற மின் குறைபாடுகளை நீக்க முடியும். அதோடு தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற உணவு உற்பத்தித் தன்னிறைவுக்கு இந்தத் திட்டம் அவசியமாகப் பயன்படும். இன்னும் மின் தடங்கல் ஏற்படுவது குறையும் என்பதோடு ஏற்கெனவே சென்ற ஆண்டு நீங்கள் வழங்கியிருக்கிற 230 கே.வி. துணை மின் நிலையம் பக்கத்தில் இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால் Adjoining-ஆக இருக்கிறது. இந்த கேஸ் டர்பனை 120 கோடி ரூபாயில் செயலாக்க Project Profile எல்லாம் முடிந்து விட்டது. அதிகாரிகள் எல்லாம் வந்து பார்த்து எல்லாவற்றையும் Feasible என்று சொல்லிவிட்டுச் சென்று இருக்கிறார்கள். நான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்வது, இது என்னுடைய சொந்த ஊரில் அமைய இருக்கிற மிகப்பெரிய திட்டம், இதை முயற்சித்து மத்திய அரசிடமிருந்து பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுடைய பிறந்த நாள் அவர்களுக்கு என்னுடைய இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்து ஓர் இனிய செய்தியை அவர்களிடமிருந்து எதிர்பார்த்து அந்த செய்தியைத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துதான் இந்த அரசினுடைய கருத்து. குத்தாலம் பகுதியில் எரிவாயு 80 ஆயிரம் கன மீட்டர் கிடைக்கிறதா; ஒரு லட்சத்து 80 ஆயிரம் கன மீட்டர் கிடைக்கிறதா என்பது அல்ல. எவ்வளவு



1998 ஏப்ரல் 21] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

எரிவாயு கிடைத்தாலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அதை ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றுதான் பெட்ரோலியத் துறையை இந்த அரசு வற்புறுத்திக்கொண்டிருக்கிறது. அனேகமாக பெட்ரோலியத் துறையும் இதற்கு ஒப்புதலை விரைவில் தரும் என்று இந்த அரசு எதிர்பார்க்கிறது.

## 5. அறிக்கைகள் அளித்தல்
## பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. ஆர். இராமசாமி.

**திரு. கே. ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தாறு முதல் தொண்ணூறு வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அறிவிப்பு

### அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நான் நேற்றையதினம் அறிவித்ததைப்போல 11.45 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு என்னுடைய அறையில் கூடும்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை
### (ஆ) கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
### (இ) கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

### (அ) கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண்-1 நில வருவாய்த் துறை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.16,24,52,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2641, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலத்தை அரசு கையகப்படுத்தும்போது மார்க்கெட் ரேட்டை இழப்பீடாகத் தரவேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,52,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 104, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதியில் சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,52,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2443, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,52,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1355, திரு. ஆர்.ஆர். சேகரன்.



**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சி, ராமன் நகர் மற்றும் வ.உ.சி. நகர்ப் பகுதிகளில் வசிக்கும் வீடில்லாத ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,24,52,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1401, திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சன அள்ளி ஊராட்சிக்குட்பட்ட கெட்டு அள்ளி ராமர்கூடல், ஆகிய ஊர்களில் சுமார் 200 ஏக்கர் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தில் வாழும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,24,52,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1784, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker, Sir, "To discuss the need to give pattas to the poor people who have already constructed houses in Hosur Municipal area", I move—

``That the allocation of Rs. 16,24,52,000/- under Demand No.1 Land Revenue Department be reduced by Rs. 100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2177, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாங்கோடு, களியல், திற்பரப்பு, பொன்மனை ஆகிய வருவாய்க் கிராமங்களில் வாழும் நிலமற்ற ஏழைகளுக்கு இலவசப் பட்டா வழங்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,24,52,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3199, திரு. அ. வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, தீர்த்தாம்பாளையம் கிராம காலனி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,24,52,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3577, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிர்வாகத்தில் பின்பற்றப்படும் டாட்டன் ஹாம் சிஸ்டத்தை மாற்றி சிங்கிள் பைல் சிஸ்டத்தைக் கொண்டுவருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,24,52,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3361, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தானிப்பாடி, வேப்பஞ்செக்கடி, மலமஞ்சனூர், புதூர், திருவடத்தனூர், எடத்தனூர், புத்தூர் செக்கடி, ராயண்டபுரம் ஆகிய கிராமங்களில் அரசு நிலத்தில் வீடுகட்டி வாழுகின்ற ஏழை மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,24,52,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2566, திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, கிளையல் பிர்க்காவை தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகாவுடன் இணைக்கும் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,24,52,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3032, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் தொகுதி, ஆதனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,24,52,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2633, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கூடுதல் கட்டடம் கட்டவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,24,52,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3579, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள தொட்டிய நாயக்கர் இன மக்களுக்கு எளிதில் சாதிச் சான்று வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,24,52,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**(ஆ) கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.70,02,08,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2647, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வெள்ளம், தீயினால் வீடுகள் பகுதியாக பாதிக்கப்படும்போது வீடொன்றுக்கு ரூ. 1,000 ஈட்டுத்தொகையாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 70,02,08,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1705, திரு. ஜி. பழனிசாமி.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 70,02,08,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1844, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker, Sir, "To discuss policy", I move—

"That the allocation of Rs. 70,02,08,000/- under Demand No. 40 - Relief on account of natural calamities, be reduced by Rs. 100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2825, திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 70,02,08,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2536, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்டம், திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலவரியினைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 70,02,08,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 388, திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இயற்கைச் சீற்றத்தினால் வாழை, வெற்றிலை கொடிக்கால் பயிர்களுக்கு ஏற்படும் இழப்பினை ஈடுகட்ட பயிர் இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 70,02,08,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3307, திரு. அ. வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 70,02,08,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2583, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொடர்ந்து ஏற்படும் இயற்கைச் சீற்றங்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, மாநிலத்தில் நிரந்தர நிதியம் ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 70,02,08,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**(இ) கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45-இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 119,75,10,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1710,' திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,75,10,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2530, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,75,10,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3312, திரு. அ. வ. அப்துல் நாசர்.

[1998 ஏப்ரல் 21

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அண்மையில் கோவை வெடிகுண்டு மற்றும் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களுக்கும் பொருளாதார உதவிகளை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,75,10,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3872, திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீடுகள் தீப்பற்றி எரிந்து போனால் அரசு நிவாரணமாக வழங்கும் ரூ. 500/-க்கு பதிலாக வீட்டின் மதிப்பையே நிவாரணமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,75,10,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3949, திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தீ விபத்தால் பாதிக்கப்பட்டு குடிசைகளை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு கொடுக்கப்படும் உதவித் தொகையை உயர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,75,10,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



1998 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவையிலே நில வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகளெல்லாம் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதில் தமிழில் உள்ள குறிப்புகளை @நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவையின் நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் தெரிவிக்கின்ற மேலான யோசனைகளையும், கருத்துக்களையும் கேட்டு, பின்னர் அரசின் சார்பிலே அளிக்க வேண்டிய விளக்கங்களையும், முடிவுகளையும் இறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் இந்த விவாதத்திலே பங்கெடுப்பதாக இருக்கின்றார்கள். 12-45 மணி அளவிலே மாண்புமிகு அமைச்சரவர்களுக்குப் பதில் சொல்வதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். ஆகவே, பேசுகின்ற உறுப்பினர்கள் அனைவரும் 7 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். முதலிலே திரு. டி. அமரமூர்த்தி.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ *145 முதல் 183 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பபெற்றுள்ளது.*

[திரு. டி. அமரமூர்த்தி] [1998 ஏப்ரல் 21

ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்கும், தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சி. ஞானசேகரன் தலைமை)**

காலையிலேகூட இந்த அரசு கலைக்கப்படுமா, கலைக்கப்பட்டுவிடுமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கேள்வி எழுப்பினார்கள். அவ்வாறு இந்த நல்லாட்சியைக் கலைப்பதற்கு மத்திய அரசு முன்வருமானால் மாண்புமிகு உறுப்பினர்களுடன், நான் சார்ந்திருக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து மக்களை ஒன்று திரட்டி மிகப்பெரிய போராட்டத்தை நடத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை என்பது மிகப் பழமையான துறை. நாட்டிலேயுள்ள கிராமங்களிலே வாழ்கின்ற பெரும்பான்மையான மக்களுக்கு இந்த வருவாய்த் துறைதான் மூல ஆதாரமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நில வரியை இரத்து செய்ததற்கு என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகம் பூராவிலும் நில வரி இரத்து செய்யப்படும் என்று இந்த அவையிலே சொன்னார்கள். ஆனால், நேற்றைக்கு முன்தினம்கூட கிராமங்களிலே டாம் டாம் போட்டு உடனடியாக நில வரியைச் செலுத்த வேண்டும், இல்லாவிட்டால் ஜப்தி செய்வோம் என்று ஒரு சில கிராம நிர்வாக அலுவலர்கள் அறிவித்ததாக கிராமங்களிலேயிருந்து தொலைபேசி மூலமாக நண்பர்கள் எனக்குச் சொன்னார்கள். ஆகவே, உடனடியாக அனைத்துக் கிராம மக்களுக்கும் அனைத்து நாட்டு மக்களுக்கும் நில வரி இரத்து செய்தது பொருந்தும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை அதிகாரிகள், குறிப்பாக ஆர்.டி.ஓ., தாசில்தார். ஆர்.ஐ., வி.ஏ.ஓ., போன்றவர்கள் எல்லாம் இன்னும் பிரிட்டிஷ் அதிகாரிகளைப் போன்றே நடந்துகொள்கிறார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

சாதாரணமாக, மாணவர்களோ அல்லது வேறு நபரோ சாதிச் சான்றிதழோ, கல்விச் சான்றிதழோ வாங்க வேண்டும் என்று



1998 ஏப்ரல் 21] [திரு. டி. அமரமூர்த்தி]

சொன்னால், கிட்டத்தட்ட 15, 20 நாட்கள் நடக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய குறையைப் போக்குவதற்கு, கல்விச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் ஆகியவற்றையெல்லாம் விரைவிலேயே வழங்குவதற்கு இந்த அரசு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே பட்டா. பட்டாவைப் பொறுத்தவரை ஒரு வருடம் அல்லது இரண்டு வருடம் என்று இழுத்துக் கொண்டே போகிறார்கள். கிராம மக்கள் பட்டா கேட்டுப் போனால், அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் போனால் கிட்டத்தட்ட இரண்டு வருடம்கூட அலைக்கழிக்கின்றார்கள். இன்னும் எனது தொகுதியிலே பட்டா கொடுக்காமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் விரைவாகப் பட்டா வழங்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சொந்தக் குடியிருப்பு இல்லாத மனிதன் அரை மனிதன் ஆவான். அவனை முழு மனிதனாக ஆக்க வேண்டியது நமது ஜனநாயகக் கடமையாகும். ஆகவே, பட்டா கேட்டு விண்ணப்பித்திருக்கின்ற அத்துணை மக்களுக்கும் உடனடியாக பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப்போலவே தீ விபத்தோ வெள்ளமோ ஏற்பட்டுவிட்டது என்றால் அரசு அவர்களுக்கு 1,000 ரூபாயும், 5 கிலோ அரிசியும் கொடுக்கிறது. அதிலும், குறிப்பாக தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக அரசாங்கம் தனது செலவில் வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள் அந்த 1,000 ரூபாயை வைத்து 5 நாட்களுக்கு சாப்பிட்டுவிட்டு பிறகு அவர்கள் அந்த வீட்டைப் புதுப்பித்துக்கொள்வதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த, வீட்டைப் புதுப்பித்துக்கொள்வதற்கு அவர்கள் பல வட்டிக் கடைக்காரர்களிடம் சென்று பணம் வாங்கி, அதன்மூலமாக பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, தீயினால் பாதிக்கப்பட்ட மக்களுககு உடனடியாக அரசே சொந்தச் செலவில் வீடு கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

கிராம நிருவாக அலுவலரோ, ஆர்.ஐ.யோ அந்தந்த ஊர்களில் இருப்பது இல்லை. வசதியாக நகர்ப்புறங்களில் இருக்கிறார்கள். சாதாரணமாக கிராம மக்களெல்லாம் அவர்களிடம் போய் ஏதாவது உதவி பெறவேண்டுமென்றால், கிட்டத்தட்ட 25 அல்லது 50 கி.மீ.

தூரம் சென்றுதான் அவர்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, கிராம நிருவாக அலுவலரோ அல்லது ஆர்.ஐ.-யோ அவர்கள் பணிக்கென ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே தங்கியிருக்க வேண்டுமென்று கடுமையான கட்டளையை இந்த அரசு இடவேண்டும்.

அதேபோல, இந்தத் துறையில்தான் தாலுகா ஆபீஸில் உள்ள கல்கூட லஞ்சம் கேட்கின்றது. அரசாங்கம் யோக்கியமாக இருக்கிறது, அமைச்சரும் யோக்கியமாக இருக்கிறார். ஆனால் அதிகாரிகள் இன்னமும் திருந்தவில்லை. எந்த அதிகாரிகளானாலும் சரி, எம்.எல்.ஏ., சிபாரிசு செய்தாலும், அந்தப் பேப்பரை எறிந்துவிடுகிறார்கள். "எனக்கு வெட்ட வேண்டியதை வெட்டினால்தான், பட்டா கொடுப்பேன், சர்டிபிகேட் கொடுப்பேன்" என்று சொல்கிறார்கள். இந்த நிலைமை மாறவேண்டும். இந்தத் துறையில் கடுமையான அளவுக்கு ஊழல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு உடனடியாக இந்தக் குறைபாடுகளைப் போக்கவேண்டும். கடந்த வருடம் அரியலூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில், கிராம நிருவாக அலுவலர் மாறுதல் உத்தரவை ஏலம் மூலம் செய்தார்கள். ஏலம் போட்டு யார் அதிகமாகத் தொகையை ஏலத்தில் கேட்கிறார்களோ அவர்களுக்கு வேண்டிய ஊருக்கு டிரான்ஸ்பர் போட்டார்கள். இந்த நிலைமை எல்லாம் மாறவேண்டும். இத்தகைய நிலையை மாற்றி, கிராம மக்களுக்கு நல்லமுறையில், நேர்மையான முறையில் சேவை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று எனது தொகுதியைச் சேர்ந்த திருமானூர் ஒன்றியத்தில் 3 பிர்க்காக்கள் இணைந்திருக்கின்றன. ஒரு பிர்க்காவில் இருந்த இடத்தை இன்றைக்குத் தனி வட்டமாக ஆக்கிவிட்டீர்கள். ஆகவே, திருமானூரில் 3 பிர்க்காக்கள் இணைந்து செயல்படுகின்றன. அந்தத் திருமானூரை தனி வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருமானூர் கிட்டத்தட்ட 10 வருவாய் கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. சுழல்வாடி, பொய்யானூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு தனி பிர்க்காவாக அதனை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 20 வருடங்களாக அரசு நிலங்களில் வீடு கட்டி வாழும் ஏழைகளுக்கு அந்த இடத்தை பட்டா செய்து கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும். அதேபோன்று சாதிப் பிள்ளைகள் இன்னும் கிராமங்களில் ஈயம் பூசிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமமாகச் சென்று இன்னும் ஈயம்



பூசி, அதன் மூலம் பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை உடனடியாக மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்து, அவர்களுக்கு தாலுகா ஆபீஸில் சாதிச் சான்றிதழ் கொடுக்க வேண்டும். ஏனென்றால், அவர்களுக்கு தாலுகா ஆபீஸில் அதைக்கொடுக்க மறுக்கிறார்கள். எந்தச் சாதி என்றே அவர்களுக்குத் தெரியவில்லை. சாதிச் சான்றிதழ் வேண்டி நிறைய பேர் மனுச் செய்திருக்கிறார்கள். எனவே, அவர்களை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் நில அளவைப் பயிற்சி நிலையத்தை உடனடியாக அமைக்க வேண்டும். பெரம்பலூர் மாவட்டம் புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டம். இதுவரை அங்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் இல்லை. அந்த அளவுக்கு நிலைமை மோசமாக இருக்கின்றது. உடனடியாக பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை அமைத்து, பின்தங்கிய மாவட்டமாகிய இந்த மாவட்டம் வளர்கின்ற விதத்தில் இந்த அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.எல். வெங்கடாசலம்.

*** திரு. ஜி. எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாத் துறைகளுக்கும் தாய்த் துறையான இந்த வருவாய்த் துறையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வருவாய்த் துறையானது, மக்களின் அன்றாட வாழ்க்கையில் மட்டுமின்றி, பிறப்பு இறப்பு ஆகிய கட்டங்களிலும் மற்றும் பிறப்பு இறப்பு ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்ட காலங்களிலும், இறந்த பிறகும் இறந்தவர்களின் குடும்பத்திற்கு அரசு வழங்குகின்ற சலுகைகளைப் பாதுகாக்கின்ற வகையிலும், அவைகளை அளிக்கின்ற வகையிலும் ஒரு பாதுகாப்பு அரணாக விளங்குகின்ற துறையாகும். அதோடு மட்டுமல்ல. ஜனநாயக ரீதியில், ஜனநாயக அடிப்படையில் தேர்தலை நடத்துகின்றபொழுது, முறையாகத் தேர்தலை நடத்துவதற்கும், அதேபோன்று தேர்தல் காலங்களில் நடக்கின்ற வன்முறைகளைக் கட்டுப்படுத்தி பாதுகாப்பதற்கும் சட்டம் ஒழுங்கு கெடுகின்ற நாட்களிலே சட்டத்தைப் பயன்படுத்தி அமைதி காண்பதற்கும் துணையாக இருக்கின்ற துறை இந்த வருவாய்த் துறை என்பதை இந்த நல்லநேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. ஜி. எல். வெங்கடாசலம்] [1998 ஏப்ரல் 21

அதேபோன்று, இந்த வருவாய்த் துறையானது, விவசாயிகளோடு, பின்னிப் பிணைந்து, இணைந்து இருக்கின்ற ஒரு துறையாக இருக்கின்றபடியால், விவசாயத்தை மட்டுமே நம்பி இருக்கின்ற விவசாயிகளுக்கு வேண்டிய நலன்கள் சிலவற்றைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த ஆண்டு நில வரியை இரத்து செய்திருக்கிறார்கள். அதற்காக, விவசாயிகளின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, இந்த நில வரிமூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 43 கோடி ரூபாய் மட்டும்தான் வருகிறது. எனவே, ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிப்பதைப்போல, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த நில வரியை அடியோடு இரத்து செய்வதன் மூலமாக, ஒரு நல்ல திட்டத்தை அறிவிப்பதாக இருக்கும் என்ற எனது கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோன்று, ஒரு நிலத்தை விற்கின்றபோது, நில மாற்றம் செய்வதற்காக மனு கொடுக்கிறோம். நில மாற்றம் செய்வதற்கு மனு கொடுத்துப் பல ஆண்டுகள் ஆனாலும், அது வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருகின்றபோது, நில மாற்றம் செய்யப்படாமல், பல ஆண்டுகள் தூங்கிக் கொண்டிருக்கின்ற நிலை இருக்கிறது. இந்த நிலையினைத் தங்கள் காலத்திலாவது மாற்றி, அதாவது, உரியவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சென்று அணுகாமலேயே, நில மாற்றத்திற்கான மனுவைப் பெற்றவுடன் அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, இன்றைக்கு கிராமப்புறங்களிலே பார்த்தோமானால், மந்தைவெளிப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு, காட்டுப் புறம்போக்கு என்று வைத்திருக்கிறார்கள். அந்தப் புறம்போக்கு நிலங்களிலே நம்முடைய ஏழை விவசாயிகள் பல ஆண்டுகாலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். கிணறு வெட்டி, ஆயில் என்ஜின் போட்டு விவசாயம் செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால், அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. காரணம், மேய்ச்சல் புறம்போக்கு என்ற ஒரு காரணத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.



1998 ஏப்ரல் 21] [திரு. ஜி. எல். வெங்கடாசலம்]

கலைஞர் ஆட்சியிலே 'ஆட்சேபணை இல்லாத குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்கப்படும்' என்று ஆணை பிறப்பித்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த ஆண்டு புதிய பல குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்கினார்கள். அதன் மூலமாக பல ஏழை விவசாயிகள், தாங்கள் குடியிருக்கும் இடங்களுக்குப் பட்டா பெற்றிருக்கின்ற ஒரு நிலையைப் பார்க்கின்றோம். அதேபோன்ற ஒரு நிலையை உருவாக்கி, விவசாயம் செய்கின்ற ஏழை விவசாயிகளுடைய நிலங்களுக்குப் பட்டா வழங்கிடுமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எங்கள் பகுதியிலே திருமுல்லைவாடி என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே சுமார் 44 குடும்பத்தினர் பல ஆண்டுகாலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 1984ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும், மாவட்ட வன அலுவலரிடத்திலும் அங்கே இருக்கின்ற 44 குடும்பங்களும் முறையிட்டதன் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட வன அலுவலரும் நேரடியாக வந்து, தணிக்கை செய்து, அவர்களுக்குப் பட்டா வழங்கலாம் என்று ஓர் உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். அந்த உத்தரவு வழங்கப்பட்டது 1984ஆம் ஆண்டு. ஆனால், 1991 வரையிலே அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. இதுபற்றி மக்கள் குறை கேட்கும் நாளில் அவர்கள் மீண்டும் முறையிட்டதன் அடிப்படையில் அவர்களுக்குப் பட்டா வழங்கிட இயலாது என்ற ஒரு மறு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஏழை விவசாயிகளுக்கு, குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டா வழங்கிடுமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், அடையாளம் தெரியாத வாகனங்களால் விபத்துக்குள்ளாகின்றபோது, அந்த விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை கோட்டாட்சியர் மூலமாகத்தான் வழங்க வேண்டும் என்று இருக்கிறது. அப்படி விபத்துக்குள்ளானவர்களுடைய குடும்பங்களுக்கு, பல ஆண்டுகள் ஆகியும், 'பிரையாரிட்டி' முறையில்தான் நிவாரணம் கொடுக்கப்படும் என்ற நிலையில், நிவாரணம் கொடுக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அப்படி பாதிப்பிற்குள்ளான குடும்பங்களுக்கு அந்த விபத்து நிவாரணத் தொகையினை உடனடியாக வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜி. எல். வெங்கடாசலம்] [1998 ஏப்ரல் 21 முற்பகல் 11-50

மேலும், முதியோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோருக்கு, உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவர்களுடைய மனுக்களை, வீடுகள் இருக்கின்றன என்று காரணம்காட்டி . . . .

**திரு. ப. ரங்கநாதன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியம், ஒரு முக்கியமான மானியம். ஆனால், அரசு அலுவலர்கள் மாடத்திலே பார்த்தால், ஒரு அதிகாரிகூட வரவில்லை. அதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: இரண்டு பேர்கள் இருக்கிறார்கள், மேலேயும் இருக்கிறார்கள்.

**திரு. ஜி. எல். வெங்கடாசலம்:** துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு உதவித் தொகை வழங்குகிறபோது வீடுகள் இருக்கின்றன என்ற காரணத்தைக் காட்டி, முதியோர் உதவித் தொகையை வழங்காமல், அதிகாரிகள் மனுக்களைத் தள்ளுபடி செய்கிறார்கள். ஆகையினால், வீடுகள் இருக்கின்ற ஏழை விவசாயிகளுக்கு, அந்த நிபந்தனையைத் தளர்த்தி, ஒரு ஏக்கர், 2 ஏக்கர் நிலம் அல்லது வீடு இருந்தாலும், அனைவருக்கும் முதியோர் உதவித் தொகையை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர் முதியோருக்கு ஓய்வூதியம் வழங்குவதைப்போல, ஏழை விவசாயிகளுக்கும் ஓய்வூதியம் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எங்கள் பகுதியில், இருளர் மற்றும் பன்னியாண்டி என்ற சாதியினர் பல கிராமங்களில், நிலையாக பல ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு இதுவரையில் சாதிச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. அவர்களில் பெரும்பாலானவர்கள், பள்ளிக் கல்வியை, ஆரம்பப் பள்ளிக் கல்வியைக்கூட பெறமுடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், நாளைய தினத்தைப் பற்றிக் கவலைப்படாமல், கல்வியையும், அரசு சலுகைகளையும் பெறமுடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த அவல நிலையைப் போக்கிட, நம் அரசானது, அவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இதுவரையிலும் ஒரு தொகுப்பு வீடோ, வேறு அரசின் சலுகையோ



1998 ஏப்ரல் 21] [திரு. ஜி. எல். வெங்கடாசலம்]

பெறமுடியாமல் இருப்பதை கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கிட வேண்டுமென்று மீண்டும் உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியிலே, கடந்த காலத்திலே 1986-87ஆம் ஆண்டு, மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், பல விவசாய நிலங்கள் எல்லாம், அவர்களுடைய விருப்பம் இன்றியும், சில இடங்களில் விருப்பத்தோடும், இலவசமாக வரப்புகள் அமைக்கிறோம் என்று சொல்லி, வரப்புகள் அமைக்கப்பட்டு, இப்போது, வருவாய்த் துறை அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டு, கிராம நிருவாக அலுவலர்கள், அதற்கான தொகையை வசூலிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால், 1986-87ஆம் ஆண்டிலிருந்து இதுநாள் வரை எதுவும் வசூலிக்காமல் இருந்து கொண்டிருந்த நிலைமை மாறி, இப்போது நமது ஆட்சி பொறுப்பேற்றவுடன், நமது அரசு இதுபோன்ற ஒரு நிலைமை உருவாகியிருப்பது, மக்கள் மனதிலே ஒரு குழப்பமான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. அதுவும், நம்முடைய அதிகாரிகள் அவர்களிடத்திலேயி லருந்து பணத்தை வசூலிக்க முடியாமலும் விவசாயிகள், பணத்தைக் கொடுக்க முடியாமலும் திணறிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கட்ட வேண்டிய தொகையை, நமது அரசானது, தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, ஜமாபந்தி என்று ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஜமாபந்தியைப் பொறுத்தவரையில், வருவாய்க் கணக்குகள் எல்லாம் ஆராயப்பட்டு, கடந்த காலத்தில், 100 ஆண்டுகளுக்கு முன்பிருந்த கணக்குகள் எல்லாம் சரிபார்க்கப்பட்டு- உண்மையில் அது சரியில்லை என்று சொன்னாலும், ஓரளவுக்கு சரிபார்க்கப்பட்டு-வருகின்றன. எனினும் அவை ஏட்டளவில் சரிபார்க்கப்படுகிறதே தவிர, உண்மையில் சரிபார்க்கப்படுவதில்லை. அதேபோன்று கடந்த காலத்தில் பதியப்பட்டதற்கும், இன்றைய சூழ்நிலைக்கும் இடையே நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஏனென்றால், 2-சி மரம் என்று அந்தப் பதிவேட்டில்தான் இருக்கிறது. உண்மையில், அந்த நிலத்தில் மரம் இல்லை. ஆகவே, இதுபோன்ற முரண்பாடுகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய முரண்பாடான நிலையை மாற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்

அதே போன்று, 1980-81ஆம் ஆண்டு, நமது விவசாயிகளுக்கு, புதிய கிணறுகளை வெட்டுவதற்கும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன் வழங்கப்பட்டது. அந்தக் கடன் தொகையில் சில விவசாயிகளுக்கு 100 ரூபாய் என்றும், சிலருக்கு 200 ரூபாய் என்றும், சிலருக்கு 500 ரூபாய் என்றும் நிலுவை இருக்கிறது. ஆனால் இந்த குறைந்த ரூபாயைக்கூட கட்ட முடியாமல் நிறைய விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலே அதிகாரிகள் சென்று இன்றைக்கு வசூலிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி வசூலிக்கின்றபோது அரசாங்கமானது இத்தனை நாள் அமைதியாக இருந்துவிட்டு இன்றைக்கு இருக்கிற ஆட்சி பொறுப்பேற்றவுடன் வசூலிக்கிறார்களே என்று சொல்லி ஒரு குழப்பத்தை அதிகாரிகள் விளைவிக்கின்ற காரணத்தினாலே நாம் அவர்களுடைய கடன் தொகை மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினால் அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-55

அதேபோல, இன்றைக்கு நமது கிராம நிருவாக அதிகாரிகளுக்கு அவர்கள் இருக்கின்ற இடத்திலேயே அந்தப் பகுதியிலேயே குடியிருப்புகள் கட்டித் தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய "மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு நாகை, திருவாரூர் மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அதனடிப்படையிலே சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அதிலே நாகை தாலுகாவிலிருந்த கீழையூர் ஒன்றியம் கீவலூர் தாலுகாவுடன் இணைக்கப்பட்டது. அது நிருவாக மாற்றங்களுக்காக செய்யப்பட்டபோதும் அந்தக் கீழையூர் ஒன்றியத்திலுள்ள பெரும்பாலான கிராமங்கள் கீவலூர் தாலுகாவில் சேர்க்கப்பட்டதால் அந்த மக்களுக்கு





மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டன என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கீழையூர் ஒன்றியத்திலுள்ள காரப்பிடாகை, திருப்பூண்டி மேற்கு, திருப்பூண்டி கிழக்கு, கீழப்பிடாகை, வேட்டைக்காரனிருட்டி, விருந்தமாவடி, காரப்பிடாகை, பிரதாபராமபுரம், வெண்மனச்சேரி, கருங்காணி, கீழையூர், சோழவித்யாபுரம், சின்னத்தும்பூர், தலையாமலை, வேளாங்கன்னி ஆகிய ஊர்கள் கீவலூரிலிருந்து மிகவும் தூரமாக அமைந்துள்ளன. அதற்கு அருகிலேயே நாகப்பட்டினம் இருந்தும், அங்கேயிருந்து 16 கி.மீட்டர் தூரம் பயணம் செய்தாலும் சென்றுவிடமுடியும் என்ற நிலை இருந்தும் சுமார் 40 கி.மீட்டர் தூரமுள்ள கீவலூர் தாலுகாவுடன் இணைந்திருப்பது அந்த மக்களுக்கு மிகுந்த வேதனை அளிக்கக்கூடிய விஷயம் ஆகும். அது மட்டுமல்ல. அவர்கள் தாலுகா அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் இரண்டு பஸ்கள் மாறிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நாகைக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் கூட ஒரு பஸ்ஸில் சென்றுவிடலாம். ஆனால் தாசில்தாரைச் சந்திப்பதற்கு இரண்டு பஸ்கள் மாறி சுமார் 40 கி. மீட்டர் தூரம் பயணம் செய்யவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. அதிகாரிகள் தவறாகப் புரிந்து கொண்டு அதைப் பிரித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே இந்த அரசு கவனத்தில் கொண்டு அதை மாற்றி மீண்டும் கீழையூர் ஒன்றியத்தை நாகை தாலூகாவோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இப்போது நாகை தாலுகாவோடு இணைக்கப்பட்டிருக்கிற திருமருகல் ஒன்றியம் மிகப் பெரிய பரந்த இடம். அவர்களும் நாகைக்கு வருவதற்கு தூரமாக இருப்பதால் திருமருகல் ஒன்றியத்தை நாகை தாலுகாவிலிருந்து பிரித்து தனித் தாலுகாவாக அறிவித்து அதற்கு திட்டச்சேரியையோ, திருமருகலையோ தலைநகராக ஆக்கிடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கடலூர், விழுப்புரம் பகுதிகளிலே இருளர் என்ற ஒரு பிரிவினர் வசிக்கிறார்கள். நாகையிலே காட்டுநாயக்கர் என்ற ஒரு பிரிவினர் வசிக்கிறார்கள். தர்மபுரியிலே பன்னியாண்டிகள் என்ற ஒரு பிரிவினர் வசிக்கிறார்கள். இவர்கள் எல்லாம் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் இவர்களுக்கு பழங்குடியினர் இனம் என்ற சான்றிதழை அங்கேயுள்ள தாலுகா அலுவலகத்திலே வழங்குவதில்லை. அவர்களுக்கு முறையான சாதிச் சான்றிதழ் கிடைக்காத காரணத்தினால்

அவர்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் முறையான இடத்தைப் பெறமுடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். தருமபுரி பகுதியிலே வாழும் குரும்பன்ஸ் என்ற ஓர் இனத்தினர்களும், குரும்பர்கள் என்று சொல்லக்கூடியவர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் குரும்பன்ஸ் என்று இருந்தால்தான் பழங்குடியினர் சான்று வழங்குகிறார்கள். குரும்பர்களுக்கு அந்தச் சான்று வழங்கப்படுதில்லை. இரண்டும் ஒன்றுதான் என்று எவ்வளவுதான் விவாதித்தாலும் அவர்கள் அந்தச் சான்றைக் கொடுக்க மறுக்கிறார்கள். இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அடுத்து அடிக்கடி இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டு பல பகுதிகள் பாதிக்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளிலே நாகைப் பகுதி மிகவும் பலத்த மழையால் பாதிப்பு அடைந்துள்ளது. அதற்கு இந்த அரசு 58 கோடி ரூபாய் நிதியுதவியும் நில வரியைத் தள்ளுபடி செய்தும் அறிவித்தது. அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி அடிக்கடி இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுவதால் அதற்கான துயர் துடைப்பு பணிகளைச் செய்வது என்பது கட்டாயம் ஆகிறது. அரசு இதை கவனத்தில் கொண்டு இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் துயரைத் துடைப்பதற்காக தனி நிதியம் ஒன்றினை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு நிரந்தரமான நிதியத்தை ஏற்படுத்தி, இயற்கைச் சீற்ற நிவாரணப் பணிக்காக, அதைத் தனியாகப் பயன்படுத்த வேண்டுமாய் இந்த அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அடுத்து, நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து திருவாரூர் பிரிக்கப்பட்டு, மாவட்டத் தலைநகரமாக ஆக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையில்கூட, நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கென்று இரண்டு வட்டாட்சியர்கள்தான் செயல்பட்டு வருகிறார்கள். இதனால், மயிலாடுதுறை போன்ற பகுதிகளிலிருந்து ஆசிரியர்கள் மற்றும் ஆதி திராவிடர் நலத் துறையைச் சேர்ந்த பணியாளர்கள் ஊதியம் பெறுவதற்கோ, மற்ற பணிகளுக்கோ நாகப்பட்டினத்திற்குத்தான்—அதிக தூரம் அவர்கள் கடந்து வரவேண்டியிருக்கிறது. ஆகவே, இவற்றைக்





கவனத்தில்கொண்டு, காலியாக உள்ள ஆதிதிராவிடர் அலுவலர் பணியிடங்களை உடனடியாக நிரப்பி அவர்களுடைய சிக்கலைப் போக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுவான பிரச்சினைக்கு வருகின்றேன். வருவாய்த் துறை என்பது மற்ற துறைகளுக்கெல்லாம் மூத்தத் துறையாகும். ஆனால் வருவாய்த் துறையிலே ஒரு காரியம் நடைபெறவேண்டும் என்று அணுகும்போது, அதிலே மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது.' அதற்கு அங்கு இருக்கிற அலுவலர்களை குறை சொல்லிப் புண்ணியமில்லை. அங்கே பின்பற்றப்படும் பழக்கவழக்கங்கள் அப்படியிருக்கின்றன. Tottenham System என்ற சிஸ்டத்தை அவர்கள் பின்பற்றுகிறார்கள். அந்த சிஸ்டத்தில் 18 படிகள் ஏறி, இறங்கிச் செல்ல வேண்டியிருப்பதால், எந்த ஒரு பணியும் அல்லது எந்த ஒரு மனுவின் மீதும் நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. இந்த முறை ரொம்பகாலமாக இருந்து வரும் ஒரு சிஸ்டம் ஆகும். அதை மாற்றி, இன்றைய காலத்திற்கேற்றவாறு Single File System என்ற முறையை அமல்படுத்தி, ஒரே தடவையில் விசாரணை செய்து, முடிவு எடுக்க வேண்டிய அதிகாரத்தை அலுவலர்களுக்கு வழங்கி, வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்வதோடு, இந்தத் துறையில் கூடுதல் மாற்றங்களைச் செய்து, பணிகளைச் சுலபமாக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு பணிக்கும் இவ்வளவு காலம் என்று மக்கள் சாசனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திலும் அறிவிப்புப் பலகையில் எழுதி, மக்களுக்கு விளம்பரப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், சிலர் மனுக்களைக் கொடுத்தால், சிபாரிசு அல்லது பொருள் அல்லது மற்ற உதவிகள் மூலம் தங்களது காரியத்தைச் சீக்கிரமாக முடித்துக் கொள்கிறார்கள். ஆனால், அவையேதும் இல்லாத பொது மக்களுடைய, சாமானியர்களுடைய, பாமரர்களுடைய மனுவின்மீதான நடவடிக்கை மிகவும் தாமதப்படுத்தப்படுகிறது. இதனால் அவர்கள் மனச்சோர்வு அடைகிறார்கள். எனவே, இன்னின்ன பணிகளுக்கான நடவடிக்கைகள் இவ்வளவு நாட்களில் நடைபெறும் என்றும், அப்படி நடைபெறவில்லை என்றால், மேல்முறையீடு செய்யவேண்டும் என்றும் தாலுகா அலுவலகத்தில், அறிவிப்புப் பலகையில் எழுதி வைக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. ல. தங்கவேல்.

**திரு. அ. ல. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் சேலம்' மாவட்டத்தில் உள்ள வாழப்பாடியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டமும், சேலம் வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து 'ஆத்தூர்-கெங்கவல்லி' ஆகிய இரு வட்டங்களை உள்ளடக்கி ஆத்தூர் என்ற வருவாய்க் கோட்டத்தை உருவாக்கியதற்கு மாண்புமிகு நாஞ்சிலார் அவர்களுக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை, அரசின் தாய்த் துறை எனக் கூறுவார்கள். இத்துறை அரசின் நிருவாக இயக்கம் ஆகும். இதிலிருந்துதான் பல துறைகள் பிரிக்கப்பட்டு இதன் மூலம் மக்களுக்கு வேண்டிய நலப்பணிகள் செய்யப்படுகின்றன. இருந்தாலும், இத்துறையின் வழிகாட்டுதலின் பேரிலேதான் அவை செயல்பட முடியும்.

குறிப்பாக, முதியோர் உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஏழை விவசாயத் தொழிலாளர்கள், விபத்தில் மரணம் அடைந்தவர் குடும்பத்தினர் போன்றவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல், மற்றும் பல சமுதாயப் பணிகளைச் செய்வதற்கு, அவர்களைக் கண்டறிந்து அரசு நலத் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு செல்வதில் இந்தத் துறை பெரிதும் செயல்படுகிறது. மேலும், இதுபோன்ற பல்வேறு பணிகள் இந்தத் துறை மூலம் செய்யப்படுகின்றன என்றாலும், நேரம் இல்லாத காரணத்தால் ஒருசில கருத்துக்களை மட்டும் நான் கூற விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-05*

சாதிச் சான்றிதழ் இந்தத் துறையின்மூலம்தான் வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட சில சாதியினர் இன்னின்ன பகுதிகளில்தான் வாழ்வதாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் வேலை வாய்ப்புத் தேடியும், கல்வி கற்று வேலைவாய்ப்புதேடும் காரணத்தினால் வேறு சில



இடங்களுக்குச் சென்று குடியேறிவிடுகின்றனர். அதுபோன்ற குடும்பத்தினர், பிற மாவட்டத்தில் உள்ள வட்டாச்சியர் அலுவலகத்தில் சாதிச் சான்று வேண்டுமெனக் கேட்கும்போது, குறிப்பிட்ட இந்த சாதியினர் இப்பகுதியில் இல்லை என்று மறுத்துவிடுகின்றனர். எல்லாச் சாதியினரும் தமிழகமெங்கும் பரவி இருக்கின்ற காரணத்தினால் இந்தச் சான்றிதழ் வழங்குவதில் உள்ள முறையை மாற்ற, மறுபரிசீலனை செய்து, சீரமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இருப்பிடம், வாரிசு, செல்வநிலை, பிறப்பு, இறப்பு போன்ற சான்றிதழ்கள் இந்தத் துறையின் மூலம்தான் வழங்கப்படுகின்றன. இதில் சொத்து மதிப்புச் சான்றிதழ் பெறுவதில் மிகப் பெரிய அளவில் கஷ்டப்படவேண்டியுள்ளது. ஒருவர் தொழில் செய்வதற்கு இந்தச் சான்றிதழ் தேவைப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் சொத்துச் சான்றிதழைப் புதுப்பிக்கவேண்டியுள்ளது. ஒவ்வொரு முறையும் இதனைப் பெறுவதற்கு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து பெறவேண்டியுள்ளது. ஆகவே இதனை எளிமையாகப் பெற வழிவகை செய்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நிலங்கள் அளந்து பிரிக்கப்பட்டு, நிலத்தின் தரத்திற்கு ஏற்ப வரி விதிக்கப்படுகிறது. இந்த வரியின் மூலம் கிடைக்கின்ற வருவாயைக் காட்டிலும், இதை வசூல் செய்வதற்கு ஏற்படுகின்ற கால விரயம், அதற்கான செலவினங்கள் கூடுதலாக ஆகின்றன. இதனை அரசு கருத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு நில வரியை முழுமையாக இரத்துச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு சிரமங்களைத் தாங்கிக்கொண்டு உணவு உற்பத்தியில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு வரி விலக்கு முழுமையாக அளிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமானால் நிலங்கள் யாருடையது என்பதை உறுதி செய்வதற்கும், யாருடைய அனுபவத்தில் இருக்கின்றன என்பதைக் கண்டறிவதற்கும், ஒரு ரூபாய்க் கட்டணம் என நிர்ணயம் செய்தால் போதுமானது. ஆகவே இதனை அரசு பரிசீலனை செய்து இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கைச் சீற்றங்களான வெள்ளம், வறட்சி, தீ விபத்து போன்ற இடர்ப்பாடுகள் ஏற்படுகின்ற நேரங்களில் இந்தத் துறையின் மூலமாகத்தான் உதவிகள் வழங்கப்படுகின்றன. தீ விபத்திற்கு உள்ளான—வீடுகளுக்கும், மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்ற வீடுகளுக்கும் உதவும் நேரத்தில் அதில் முழுமையாக பாதிக்கபட்டவர்களுக்கு ரூபாய் 1000/- என்றும் பகுதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபாய் 500/- என்றும் உயர்த்திக்கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும் இந்தத் தொகையினை ரூபாய் 2000/- எனவும் ரூ.1000/- எனவும் உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல வெள்ளச் சேதம் ஏற்படும்போது கால்நடைகளுக்கும் மற்றும் மனிதர்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்பட்டிருந்தால் இத்துறையின் மூலம் நிவாரணம் தரப்படுகிறது. அதில் கால்நடைகளுக்குத் தரப்படும் நிவாரணம் போதுமானதாக இருந்தாலும், மனித உயிர் இழப்பைப் பொறுத்தவரையில் தவறான கணக்குக் காட்டி நிதி பெற இயலாது. எனவே மனிதர்கள் உயிர் இழப்புக்கு ஆளாகும் போது ரூ.15,000/- என்று கொடுப்பதை, குறைந்தது ரூ.50,000/- ஆக உயர்த்திக்கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வரத்துக் கால்வாய்களைப் பொறுத்தவரையில் குடிமராமத்துப் பணிகளாகத்தான் செய்யவேண்டுமென ஆங்கிலேயர் காலத்தில் போடப்பட்ட சட்டம் அப்படியே உள்ளது. அந்தக் கால்வாய்களை சரிசெய்ய, வெள்ள நிவாரணப் பணி அல்லது வறட்சி நிவாரணப் பணி என்று, வருவாய்த் துறையின் தலைப்பில்தான் செய்யப்படுகிறது. ஆகவே இதற்கும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிபற்றி, ஒருசில வேண்டுகோள்களை வைக்க விரும்புகிறேன். அதாவது செட்டிசாவடி, அழகாபுரம், ரெட்டியூர் அழகாபுரம் பெரியபுதூர் மற்றும் சில பகுதிகளில் சுமார் 30 ஆண்டுக் காலமாக அரசு நிலங்களில் விவசாயம் செய்துவருகின்றவர்களின் நிலங்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் கிராமங்களில் நீண்டகாலமாக குடியிருந்து வரும் ஏழை-எளிய மக்களுக்கு அவர்கள் குடியிருந்துவரும் வீட்டின்



நிலங்களுக்கு பட்டா வழங்கவேண்டுமாய் கேட்டுகொள்கிறேன். மேலும் தொகுதி வளர்ச்சிக்காக கீழ்க்கண்ட வளர்ச்சிப் பணியினை செய்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. மனோகரன் தலைமை)**

மணக்காடு, சேலம் மாநகராட்சி காமராஜ் மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட 1996-ஆம் ஆண்டு அரசுக்குக் கட்ட வேண்டிய ரூ. 1 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே 1998-ஆம் கல்வி ஆண்டிலேயே மேல்நிலைப்பள்ளியாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும், அப்பள்ளியில் நவீன கழிப்பறை ஒன்றைக் கட்டித்தரவேண்டுமென்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அழகாபுரம், சேலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித்தர வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்காடு மெயின் ரோட்டில் உள்ள சேலம் மத்திய சிறைக் கண்காணிப்பாளர் பங்களா அருகில் வரட்டாற்றில் ஒரு பாலம் அமைத்தும், தார்ச்சாலையை நெடுஞ்சாலைத் துறையின் மூலமும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

ஜங்ஷன் மெயின் ரோட்டிலிருந்து அழகாபுரம், புதூர் வழியாக செட்டிச்சாவடி செல்லும் ரோட்டை நெடுஞ்சாலை ரோடாக மாற்றித் தருமாறும், அதற்கு தார்ச்சாலை போட்டுத்தர வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

கோரி மேட்டிலிருந்து தமிழ்நாடு மேக்னசைட் தொழிற்சாலை வரை செல்லும் ரோட்டை நெடுஞ்சாலை ரோடாக மாற்றி அதற்கு தார்ச்சாலை போட்டுத்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியில் உள்ள பழுதடைந்துள்ள மகப்பேறு மருத்துவமனைகளை பழுதுபார்த்தும் செப்பனிட்டும், மகப்பேறு மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோர் முறையாகப் பணியாற்ற தக்கப்படி கண்காணிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற வருவாய்த் துறை மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, வருவாய்த் துறையிலே உள்ள சில விஷயங்களை மிகுந்த வேதனையோடு சொல்கிறேன். இந்தத் துறை, அதிகாரிகள் பெரிதும் வருமானத்தைப் பெறுகின்ற, அதிகாரிகள் வருவாய்த் துறையாக இருக்கின்றதே தவிர, அரசுக்கு வருவாயை ஈட்டித் தருகின்ற துறையாக இல்லை. இது அதிகாரிகளின் வருவாய்த் துறையாக உள்ளது. அரசுக்கு இதனால் வருவாய் இல்லை. இந்தச் சீர்கேடுகள் அனைத்தும் அனைவரும் அறிந்ததே. இதற்கு அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை விவசாயிகளுடைய நிலத்தில் ஏதேனும் பிரச்சினை என்றால், அவர்களுடைய நிலத்தை அளவு செய்ய வேண்டும் என்றால், அதற்கு 4 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாய் என்று லஞ்சம் கொடுத்து அளவு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இந்த நிலையில், நில வருவாய்த் துறை, ஊழலின் ஊற்றுக் கண்ணாக உள்ள ஒரு துறையாக இருக்கின்றது. பெரும்பாலான அதிகாரிகள் தனிப்பட்ட வருமானம் இல்லாமல் செயல்படுவதில்லை. சராசரி ஏழை எளியவர்கள் வீட்டுமனை வாங்கி அதை அளவிடவேண்டும் என்றால் நிலத்தின் விலையைவிட பணம் அதிமாகக் கொடுக்கின்ற நிலை உள்ளது. அதற்குப் பட்டா மாறுதல்கள் செய்ய் ஏழை எளிய விவசாயிகள் பல நாட்கள் அலைந்து பணம் இல்லை என்றால் பட்டா பெற முடியாத நிலை உள்ளது. கூலித் தொழில் செய்கின்ற ஏழை எளியவர்கள் இலவச வீட்டுமனைப் பட்டா பெறுவதற்கும் லஞ்சம் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்ற நிலை உள்ளது. இந்தத் துறையில் ஏற்படும் கேவலங்கள் அத்தனையுமே இந்தத் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வந்து சேருகின்ற நிலை ஏற்படுகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருந்தும் அது சரியான முறையில் நடைபெறவில்லை. தரிசு நிலங்களில் வீடு கட்டிப் பல ஆண்டுகாலமாக வாழ்ந்து வருகின்ற சில ஏழை எளிய மக்களுக்குப் பட்டா உடனடியாக வழங்க முடியாத நிலை உள்ளது. சில நிலங்கள்



வண்டிப் பாதை புறம்போக்கு, நத்தம், கரடு புறம்போக்கு என உள்ளன. இப்படி உள்ள நிலங்களை மாறுதல் செய்ய தற்போதுள்ள நடைமுறை எப்படி இருக்கிறது என்று சொன்னால், கிராம நிர்வாக அதிகாரிகளால் கோப்புகள் தயார் செய்யப்பட்டு, வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்டு, வட்டாட்சியர் கோட்ட ஆட்சியருக்கு அனுப்பி, கோட்ட ஆட்சியர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி, மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்து தலைமைச் செயலத்தில் உள்ள வருவாய்த் துறைக்கு அது வருகின்றது. இவ்வாறு இருக்கின்ற நிலையை மாற்றி, கிராம நிர்வாக அதிகாரிகள், வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அளவிலேயே அந்த நிலங்கள் பட்டா கொடுப்பதற்கு தகுதி உள்ளனவா என்று ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சியரே பட்டா வழங்குகின்ற எளிய முறையைக் கொண்டுவர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

எனது தாரமங்கலம் தொகுதியை எடுத்துக்கொண்டால், நான் குறிப்பிட்டதைப்போல, கருக்கல்வாடி ஊராட்சியிலும், செம்மங்கூடல், கச்சுவலியானூர், ஊ.மாரமங்கலம், துட்டம்பட்டி, தாரமங்கலம் பேரூராட்சி, மேச்சேரி, புக்கம்பட்டி, வெள்ளார், எம். காளிப்பட்டி, மானத்தாள் கரட்டூர், மல்லிகுந்தம் ஊராட்சி, பள்ளிப்பட்டி போன்ற பல இடங்களில் ஏழை கூலித் தொழிலாளர்கள் வீடுகள் கட்டி பல ஆண்டுக்காலமாக குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா இதுநாள்வரை வழங்கப்படவில்லை. இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரியிடத்தில் பலமுறை முறையிட்டும் இதுநாள்வரை பட்டா கிடைக்கவில்லை. என் தொகுதியில் ஓமலூர் வட்டாட்சியர் அவர்களிடம், வீட்டுமனைப் பட்டா வழங்குகிற கோப்புகள் அத்தனையும் தேங்கிக் கிடக்கின்றன. அவர் இதுநாள் வரைக்கும் எந்தவிதமான அக்கறையும் எடுத்துக்கொண்டு அந்த மக்களுக்குப் பட்டா வழங்கும் பணியைச் செய்யவில்லை. அவருக்கு வருமானம் வருகின்ற வகையில் இருந்தால் அதற்குத்தான் முன்னுரிமை கொடுத்து அந்தப் பணியை மட்டும் செய்து வருகிறார். இதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து ஏழை எளிய மக்களுக்குப் பட்டா கொடுக்க வழிவகை செய்ய செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சார் பதிவாளர் அலுவலகங்களில் பத்திரம் பதிவு செய்தவுடன் உடனுக்குடன் இந்தப் பத்திரங்களை வருவாய்த் துறைக்கு அனுப்பி பட்டா மாறுதல் செய்யப்படுவதில்லை. இந்த நிலையை மாற்றி, பத்திரம் பதிவு செய்தவுடனேயே விவசாயிகளின் நிலங்களுக்குப் பட்டா மாறுதல் செய்து கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும் கூட்டுப் பட்டாவாக உள்ளதைத் தனிப் பட்டாவாக மாறுதல் செய்யும்போது விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். அதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண்ணாகரம் தொகுதியில் கோடிஅள்ளி கிராமம், வட்டுவனஅள்ளி கிராமம் போன்ற பல கிராமங்களில் 40, 50 வருடங்களாக விவசாயம் செய்துவரும் தகுதியான நிலங்களுக்கு, இதுவரை பட்டா வழங்கப்படாமல் உள்ளது. அதற்கு இலட்சக்கணக்கில் கிராம நிர்வாக அதிகாரி லஞ்சம் கேட்கிற நிலை இருக்கின்றது. பல ஆண்டுக் காலமாக விவசாயிகள் தரிசு நிலங்களைச் சீர் செய்து விவசாயம் செய்துகொண்டு இருப்பவர்கள் பட்டா வேண்டி மனு கொடுத்தும், அவர்களுக்கு பட்டா கிடைக்காமல் இருக்கிறது. பட்டா கோரிய விவசாய நிலங்களின் உரிமையாளர்களுக்கு உடனடியாக பட்டா கிடைத்திட வழிவகை செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வாரிசுச் சான்றிதழ், பிறப்பு இறப்பு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் வேண்டுமென்று வட்டாட்சியர் அலுவலகத்தில் மனுச் செய்தால் உடனடியாகக் கிடைக்கிற நிலை இல்லை. இதனால் பொதுமக்களும், படிக்கின்ற மாணவர்களும் பெரிதும் அவதிப்படுகின்றார்கள். இந்தச் சான்றிதழ்கள் வழங்கும் முறையை கிராம நிர்வாக அதிகாரிகளே வழங்க வழிவகை செய்ய வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தாரமங்கலம் தொகுதியில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்கு—பம்பை அடிக்கும் வகுப்பைச் சார்ந்த—பம்பையர் என்று அழைக்கப்படும் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு, அவர்களின் சாதியைக் குறிப்பிடும் சாதிச் சான்றிதழ்கள் இதுநாள் வரைக்கும் வழங்கப்படாத நிலை இருக்கிறது. அதனால் அந்த வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். அதேபோல் எனது பக்கத்துத் தொகுதியான ராசிபுரத்தில் வாழ்கின்ற இதே பம்பையர் இன



மாணவர்களும் 'மிகப் பிற்படுத்தப்பட்ட சாதியினர்'. அதைப்போன்றே, எனது தொகுதியில் உள்ள பம்பையர் இன மாணவர்களுக்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று சான்றிதழ் வழங்க சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு உத்தரவிட வழிவகை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அனைத்து நிர்வாகத் துறைகளுக்கும் மூத்த துறையான வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நிர்வாகத்தின் முதுகெலும்பாக உள்ள இத்துறை, தமிழ்நாட்டில் உள்ள 29 மாவட்டங்களில் உள்ள ஏறத்தாழ 72 வருவாய்க் கோட்டங்கள், மற்றும் 195 வட்டங்களில்—ஏறத்தாழ 17,273 கிராமங்களில்—சிறப்பாகப் பணியாற்றுகிறது.

பிற்பகல் 12-20

இத்துறைக்கான பொறுப்புக்களும் கடமைகளும் வரையறுக்கப்பட்டு இருந்தாலும், நில எடுப்பு, நில ஒப்படை, நில உரிமை, நில வருவாய், ஆவணங்கள் பராமரித்தல், மேம்படுத்தல், நிலப் பட்டாக்கள் வழங்குதல் நிலச் சீர்த்திருத்தம், நகர்ப்புற நில உச்ச வரம்பு, நில வருவாய், நகர்ப்புற நில வரி, வேளாண்மை வருமான வரி வசூல் ஆகிய பணிகள் அனைத்தும் இத்துறையின் மூலமாகச் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. ஆனாலும் கடந்த ஆண்டு பெய்த பெருமழையினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நேரத்தில் உணவு, உடை, உறையுள், உதவிப் பணம் ஆகியவை அனைத்தும் உடனடியாக வழங்கப்பட்டிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது.

நமது கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னர்தான் 1-7-1967 முதல் புஞ்சை நிலங்களுக்கு நில வரி ரத்து செய்யப்பட்டது. கடந்த ஆண்டு பெய்த பெரு மழையினால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்ட நேரத்தில் தாயுள்ளம் கொண்ட நமது முதல்வர் அவர்கள் நில வரி முழுவதையும் ரத்து செய்து, விவசாயிகளுடைய இன்னல்களைக் குறைத்ததற்கு இந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் [illegible] நில வரியினுடைய மொத்த வருவாயே ஏறத்தாழ [illegible] [illegible]ன். வறட்சி,

218457

[திரு. செ. இராமலிங்கம்] [1998 ஏப்ரல் 21

வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகிற நேரத்தில் எல்லாம் இந்த 43 கோடி ரூபாயை நாம் தள்ளுபடி செய்கிறோம். இது ஒரு மிகப்பெரிய வருவாய் என்று நாம் சொல்ல முடியாது. எனவே, விவசாயிகளுடைய துயரை நிரந்தரமாகப் போக்குகிற வகையில் நன்செய் நிலத்திலிருந்து வரக்கூடிய இந்த 43 கோடி ரூபாய் வருவாயையும் நிரந்தரமாக ரத்து செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நில மாற்றம் செய்வதைப் பொறுத்தவரையில், தலைமுறை மாறினாலும்கூட பட்டா மாற்றம் செய்வது என்பது மிகவும் கடினமாக இருக்கிறது. கடந்த கால ஆட்சியில் ஏற்கெனவே யு.டி.ஆர். திட்டம் என்கிற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து ஏராளமான குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அரசுக்குச் சொந்தமான பல நிலங்கள் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஊழல்களையெல்லாம் கண்டுபிடித்து அந்த நிலங்களை அரசின் கணக்கிற்குக் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கிரையம் செய்யப்பட்ட நிலங்கள் உடனடியாக உரிமை மாற்றம் செய்யும் அன்றையதினமே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நீங்கள் ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா வழங்குகிற நேரத்தில் இன்னும் நீண்டகால நடவடிக்கைகளுக்கு உட்பட வேண்டிய நிலைமையில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் ஏழை ஆதிராவிடர்களுக்கு குடியிருப்பு மனைப் பட்டா வழங்குவதற்கென நன்செய் நிலத்தை ஆர்ஜிதம் செய்கிற நேரத்தில் வருவாய்த் துறையின் ஒப்புதல் பெற வேண்டி சென்னையிலே இருக்கக் கூடிய நிலச் சீர்திருத்த ஆணையருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள எனது தொகுதியின்கீழ்வரும் ஏறத்தாழ 4 கிராமங்கள் சம்பந்தப்பட்ட அந்த நடவடிக்கை இன்னும் நிலச் சீர்த்திருத்த ஆணையாளருடைய அலுவலகத்திலே ஓராண்டுக் காலமாக தேங்கிக் கிடக்கிறது. எனவே, இப்படிப்பட்ட முட்டுக் கட்டைகள் அகற்றப்பட்டு விரைந்து ஏழை எளிய மக்களுக்கு குடியிருப்பு மனைப் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 21] [திரு. செ. இராமலிங்கம்]

நமது தமிழக முதல்வர் அவர்கள் கடந்தமுறை முதல்வராக இருந்தபோது ஒரே நாளில் ஒரு துளி மையினால் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் சுமார் 2 இலட்சம் குடியிருப்பு மனைப் பட்டாக்களை ஏழை எளிய மக்களுக்குக் வழங்கி, அவற்றையெல்லாம் அவர்களுக்குச் சொந்தமாக ஆக்கிக் கொடுத்தார்கள். எனவே, இந்த நேரத்தில் நான் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், மீண்டும் தமிழகம் முழுவதும் ஆட்சேபணையில்லாத புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கக்கூடிய ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அந்த நிலங்களையெல்லாம் குடியிருப்பு மனைப்பட்டா வழங்குகிற சட்டத்தின் மூலமாக பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நில மாற்றம் செய்வதற்கு, புறம்போக்கு நிலங்களை வகை மாற்றம் செய்வதற்கு ஆண்டுக்கணக்கில் காத்திருக்க வேண்டியிருக்கிறது. எனது தொகுதியில் கோவிந்தபுரம், அசுவதி நகர், சாயினாபுரம் போன்ற கிராமங்களில் குடியிருக்கும் நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்பு மனைப் பட்டா வழங்க ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை நன்செய் நிலங்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகளில் கால்நடைகளும் அதிகமாக இருக்கின்றன. சுமார் 20 ஆண்டுக் காலத்திற்கு முன்பாக ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒரு கால்நடை பட்டி இருந்தது. ஆனால் தற்போது கால்நடைப் பட்டி என்பதே இல்லாத நிலைமை தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. எனவே ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒரு கால்நடைப் பட்டியையாவது ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தநேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

நான் இந்தநேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். கிராம நிருவாக சீர்திருத்தத்திற்காக 'சபாநாயகம் குழு' என்ற ஒரு குழுவை நீங்கள் நியமித்தீர்கள். சிறந்த அனுபவமிக்க நிர்வாகிகளெல்லாம் இந்தக் குழுவில் பங்கு பெற்றிருந்தாலும், இவர்கள் ஆய்வு செய்ய வருகிற நேரத்தில், வருகிற இடங்களிளெல்லாம் நிர்வாகச் சீர்திருத்தம் எப்படி அமைய வேண்டும் என அரசுக்குப் பரிந்துரை வழங்குவதற்கு பதிலாக, ஆய்வு நடத்துகின்ற இடங்களிலே பத்திரிகை

நிருபர்களை அழைத்து குழுவின் முடிவுகளை தெரிவித்த காரணத்தால், தற்போது பணியிலே உள்ள கிராம நிருவாக அலுவர்கள் ஊர்வலம், ஆர்ப்பாட்டம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய ஒரு நிலைமையை அது தோற்றுவித்தது என்பதை இந்தநேரத்தில் நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கிராம நிருவாக உதவியாளர்களாக ஏற்கெனவே ஒவ்வொரு கிராமத்திற்கும் இரண்டு உதவியாளர்கள் இருந்தார்கள். இப்போது ஓர் உதவியாளர் என்கிற அளவிலேதான் பணியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு குறைந்தபட்சம் அலுவலக உதவியாளர்களுக்கான—ஆபிஸ் அசிஸ்டென்ட், O.A. கேடருக்கான—ஊதிய விகிதம் நியமிக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, வருவாய்த் துறை மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மர்னியத்தில் புதிய தமிழகத்தினுடைய கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு முதலிலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1947-க்கு முன்பாக, இந்த நாட்டில் மூன்றிலே ஒரு பகுதி நிலம், அரசுப் புறம்போக்கு நிலங்களாக இருந்தன என்று அண்ணல் அம்பேத்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இப்போது என்ன நிலைமை என்றால், அரசுக்குச் சொந்தமான அந்த மூன்றிலே ஒரு பகுதி நிலங்களையெல்லாம் மிட்டா மிராசுகளும், வசதி படைத்தவர்களும், அரசியலிலே ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்களும் பட்டா போட்டுக் கொண்டிருக்கிற நிலையை நாம் காண்கிறோம். இந்த ஆண்டு வருவாய்த் துறை மானிய கொள்கை விளக்கக் குறிப்பிலே நான் மிக முக்கியமான ஒன்றை எதிர்பார்த்தேன். கடந்த 3 சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயும் தொடர்ச்சியாக ஒரு கருத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றேன். பல ஆண்டுக் காலத்திற்கு முன்பு, தாழ்த்தப்பட்ட, ஏழையெளிய விவசாயிகளுக்காக கொடுக்கப்பட்ட பஞ்சமி நிலத்தை வசதி படைத்தவர்கள், அதிகார பலத்தை பிரயோகித்து அபகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் உடனடியாகக் கையகப்படுத்தி அந்த மக்களுக்கே திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று பலமுறை நான்





வற்புறுத்தி வந்திருக்கிறேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பஞ்சமி நிலத்தினுடைய மொத்த அளவை எவ்வளவு? அது யார் யாரிடத்திலே இப்போது கை மாறி இருக்கிறது. அதை மீட்டுத் தருவதற்கு என்ன வழிமுறைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் சுட்டிக்காட்டி இருப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் கோடானு கோடி ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து பறிக்கப்பட்ட அந்த நிலத்தைப்பற்றி இந்த அரசு ஒரு கருத்தைக்கூட சுட்டிக்காட்டாதது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. இதை இந்த மாமன்றத்தில் நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே இதனால் கொந்தளிப்பு நடந்து, காரணையில் துப்பாக்கிச் சூடு நடந்து இரண்டு பேர் இறந்திருக்கிறார்கள். பஞ்சமி நில மீட்புப் போர் என்று ஓர் இயக்கமே நடந்து கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே மக்கள் இதற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே பஞ்சமி நிலங்கள்—எத்தனை ஏக்கர் நிலங்கள்—யார் யார் கையிலே இருக்கிறது என்பதை வெள்ளை அறிக்கையாக நீங்கள் வெளியிட்டே தீரவேண்டும். வெள்ளை அறிக்கையாக வெளியிட்டால் மட்டும் போதாது. அந்த நிலங்களை எல்லாம் உடனடியாகக் கையகப்படுத்திக் கொடுத்தாகவேண்டும். ஏழை எளிய சாதாரண மக்களுக்காக இருக்கக்கூடிய அரசு, ஏன் இந்த நிலங்களை கையகப்படுத்துவதிலே காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறது என்பதுதான் எனக்குப் புலப்படவில்லை. எனவே, இதில் காலம் தாழ்த்தாமல், பஞ்சமி நிலங்களை உடனடியாகக் கையகப்படுத்தி அந்த மக்களுக்கே திருப்பிக்கொடுக்கவேண்டும் என்று நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

இந்த நேரத்திலே [illegible] 3-வது பக்கத்திலே மிக முக்கியமான செய்தி வந்திருக்கின்றது. இங்கே சென்னை நகரில், திரு.வி.க. பாலத்திற்கு அருகில் குடிசைவாழ் மக்களுக்காக, அறிவொளி இயக்கத்திற்காக கொடுக்கப்பட்ட நிலத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவரே பட்டா போட்டுக் கொண்டதைப் போல, விலைக்கு வாங்கிக் கொண்டார், அதை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டத்திலே இறங்கியிருக்கிறார்கள் என்பது போன்ற செய்தியை எல்லாம் பார்க்கிறேன். ஏழை எளிய மக்களுக்காக கொடுக்கப்பட்ட அந்த நிலத்தை, இதுபோன்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி

கையகப்படுத்துவதை, கைப்பற்றுவதை, இந்த அரசு யாராக இருந்தாலும், தடுத்து நிறுத்தவேண்டும் என்று இந்தநேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த மக்கள் எல்லாம் போராடுவதை போட்டோ எடுக்கச் சென்ற போட்டோகிராபர்கூட தாக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியை எல்லாம் பார்க்கிறோம். இதுபோன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நடக்காமல் இந்த அரசு தடுக்கும் என்று நான் நம்புகிறேன். அதேபோன்று இந்த அரசு திட்டங்களை அறிவித்திருக்கின்றது.

**திரு. ந. பூ. இராமஜெயம்:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** என்ன பாயின்ட் ஆப் ஆர்டர், சொல்லுங்கள்.

**திரு. ந. பூ. இராமஜெயம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திரு.வி.க. பாலத்தின் அருகில் அறிவொளி இயக்கத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பட்டா போட்டுக் கொண்டதாக ஒரு தவறான செய்தியை இங்கே அறிவிக்கிறார். (குறுக்கீடு)

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி தொடர்ந்து பேசலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பாயின்ட் ஆப் ஆர்டர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? அவர் பேசியதிலா, அல்லது இவர் பேசியதிலா. (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. ந. பூ இராமஜெயம்.

**திரு. ந. பூ. இராமஜெயம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திரு.வி.க. பாலத்தின் அருகில் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று ஒரு தவறான தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள். அது பத்திரிகைச் செய்தியாக இருந்தாலும், அது உண்மை என்று நம்ப முடியாது. ஆனால் ஆளும் கட்சி உறுப்பினர்தான், அந்த இடத்தையே அறிவொளி இயக்கத்திற்குத் தந்தார். அறிவொளி இயக்கத்திற்காகப் பெற்றுக்கொண்டவர், வேறுவிதமான ஒரு செயலுக்கு தகாத முறையிலே அந்த இடத்தைப் பயன்படுத்திய காரணத்தால், அந்த இடம் பொதுப் பிரச்சினைக்கு ஆளாகி—அந்தப் பகுதியிலே வாழ்கின்றவர்கள் என்ற



காரணத்தால்-அந்தப் பிரச்சினை உருவானது. பொதுமக்களை திசைதிருப்பி வேறு ஏதோ ஒரு காரணத்திற்காக அந்த இடத்தைப் பறிமுதல் செய்ய வேண்டும், ஆக்கிரமிப்புச் செய்ய வேண்டும் என்று அந்த நண்பர்கள் திட்டம் போட்டு, மனுநீதி நாளில் மனுக்கள் பெற வருகிறார்கள் என்று சொல்லி பொதுமக்களை அழைத்துவந்து அங்கே சாலை மறியலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எனவே, இதிலே ஆளும் கட்சிக்குச் சம்பந்தம் இல்லை என்று உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட மனைவியருக்கு ஓய்வூதியத் திட்டம் என்று அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதிலே ஒரு குறிப்பு என்னவென்றால், ஆண் வாரிசு இருந்தால், வாரிசுதாரருக்கு 18 வயது பூர்த்தியாகும் வரை, ஓய்வூதியம் பெறலாம் என்பதாகும். இந்த மாமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டுவர விரும்புகிறேன். 18 வயது என்று நீங்கள் வயதை நிர்ணயித்திருக்கிறீர்கள். 18 வயது பூர்த்தியானவுடன், அந்த ஆண்மகனுக்கு ஓர் உத்தரவாதமான வேலை கிடைக்கும் என்றால், அல்லது கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால், 18 வயது என்று நாம் நிர்ணயம் செய்யலாம். ஆனால் இப்போதெல்லாம் 30 வயது, 35 வயது 40 வயது ஆனாலும்கூட வேலை கிடைக்காதபோது, 18 வயது என்று நாம் நிர்ணயம் செய்வது, நாம் போடக்கூடிய திட்டத்திற்கே எதிரானதாக இருக்கிறது என்ற கருத்தை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோல் இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புவது இந்த நாட்டிலே உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்து போய் இருக்கக்கூடிய நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான வரம்போ, அல்லது கட்டுப்பாடோ விதிக்காமல் அவர்களுக்கு ஆண் வாரிசு இருந்தாலும், அல்லது பெண் வாரிசு இருந்தாலும், யார் இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் 60 வயதிற்கு மேற்பட்ட நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஓய்வுதியம் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தை இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் சான்றிதழ் கொடுப்பதில் இன்னும் காலதாமதம் ஆகின்றது. குறிப்பாக 'ஷெட்யூல்டு டிரைப்ஸ்' என்று அழைக்கப்படுகின்ற காட்டுநாயக்கன் சமுதாயத்திற்கு ஏறக்குறைய மூன்று ஆண்டுக்காலமாக சான்றிதழ் கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலேயும் பரந்துகிடக்கவில்லை. இந்த அரசு நினைத்தால் மொத்தமாக அவர்கள் எத்தனை குடும்பங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று அடையாள அட்டைகூட கொடுத்து, இதுபோன்ற ஒரு தீவிரமான நடவடிக்கைகள் எடுப்பதன்மூலமாக அவர்களுடைய பெயரிலே வேறு யாராவது சான்றிதழ் பெறுவதைக்கூட தடுத்துவிட முடியும். எனவே, அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்கவேண்டும். அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அந்தச் சான்றிதழை வேறு யாரும் பெற்றுவிடக் கூடாது. அதே சமயத்தில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அந்த வாய்ப்பும் காலம் தாழ்த்தியும் போகக்கூடாது என்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல தாழ்த்தப்பட்டோர் என்று போலிச் சான்றிதழ் பெற்று நூற்றுக்கணக்கான பேர் மாநில, மத்திய அரசுத் துறைகளிலே புகுந்து இருக்கிறார்கள். அப்படிப் போலிச் சான்றிதழ்களின்மூலம் புகுந்திருக்கிறவர்களைப் பற்றி புகார் கொடுக்கின்றபோது மாவட்ட நிருவாகம் கண்டுகொள்வது கிடையாது. கோர்ட்டிற்குச் சென்றாலும் அந்த வழக்குகள் எல்லாம் 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலமாக இருக்கின்றன. ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்டான இட ஒதுக்கீட்டு முறை அமலாகவில்லை என்று நாங்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இந்த வேளையிலே தாழ்த்தப்பட்டோருக்கான இடத்தைப் பறிப்பதிலே இப்படி போலிச் சான்றிதழ் பெற்றும் பலபேர் உள்ளே நுழைந்து விடுகின்றார்கள். எனவே அதைத் தடுப்பதற்கும் நீங்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றிகூறி, விடைபெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான துறைகளிலே ஒன்றான வருவாய்த் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நான் நன்றி கூறிக் கொள்கிறேன்.





குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால் தமிழகத்திலே, குறிப்பாக தென் மாவட்டங்களிலே கடுமையான வறட்சி, ஒரு பகுதியிலே கடும் வெள்ளம், இயற்கைச் சீற்றத்தினுடைய இடர்ப்பாட்டிற்கு இடைப்பட்ட இந்தக் காலத்தில் அதற்கான நிவாரணப் பணிகளை எடுத்து அரசு முனைப்போடு கடந்த காலத்திலே செயல்பட்டமைக்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக எங்களுடைய தஞ்சை மாவட்டம் உள்ளிட்ட ஒன்றுபட்ட மாவட்டங்களில் சமீபத்திலே ஏற்பட்டிருக்கிற பெரும் வெள்ளப் பாதிப்பால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதியிலே உள்ள குடிசைவாழ் மக்களுக்கு ரூ.43.35 கோடி வழங்கி, நிவாரணப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வருவாய்த் துறையினரும் சிறப்பான முறையில் செய்து இருக்கிறார்கள் என்பது பாராட்டுக்குரியது. இருந்தபோதிலும் மாவட்ட வருவாய்த் துறையினர் பாதிப்பிற்கு உள்ளான வருவாய்க் கணக்கெடுப்பதிலே ஏற்படுகின்ற காலதாமதத்தையும், சரியாக எடுப்பதிலே ஏற்பட்டிருக்கின்ற தேக்க நிலைகளையும் கவனித்து, அதனைச் சரியாக எடுப்பதற்குரிய முறையில் இந்தத் துறை செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றைக்கு வெள்ளத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மாவட்டங்களில் நிலவரிகள் முழுவதையும் அரசு இரத்து செய்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று அறிவித்த பின்னாலும்கூட—வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்ட அமைப்புகள் தமிழ்நாட்டில் ஏற்பட்ட பின்னாலும்கூட—அந்த மாவட்ட நிர்வாகத்தால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களிடத்திலேயிருந்து நில வரியை வசூல் செய்வதற்கான கெடுபிடி முயற்சிகளில் ஈடுபடுவது என்பது முற்றிலும் சரியில்லை என்பதை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

அதை உணர்ந்துதான் இன்றைக்கு அரசு நிலவரியை ரத்து செய்திருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் மேல்வரி என்ற ஒரு வரியை வசூல் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த மேல்வரியையும் நீங்கள் உடனடியாக இரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு

[திரு. ஜி. பழனிசாமி] [1998 ஏப்ரல் 21

உறுப்பினர்கள் எல்லாம் மனைப்பட்டா வழங்குவது சம்பந்தமாக இங்கு சொல்லியிருக்கின்றார்கள். அனேகமாக, 2 லட்சத்திற்கு மேற்பட்ட மனைப்பட்டாக்கள் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, ஏழை மக்களுக்கு வழங்கப்படுவதாக அரசினுடைய குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே ஆதிதிராவிட மக்களுக்கு 12,000 ரூபாய் வருமானத்திற்கு உட்பட்டவர்களுக்கு குடியிருப்பு மனைப் பட்டா வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதிலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னவென்றால், நகராட்சி, பேரூராட்சி இன்னும் மாநகராட்சி போன்ற இடங்களில் ஏழையெளிய மக்கள் குடியிருக்கக்கூடிய இடங்களில், இந்த மனைப்பட்டா வழங்குவதற்கான சட்டத் திருத்தங்கள் இந்த அவையிலே கொண்டுவரப்பட வேண்டும். அவர்களுக்குப் பட்டா தந்தால்தான் மின்சார இணைப்புகள் வழங்க முடியும். அவர்கள் குடியிருக்கிற இடங்களில் ஒரு வீடு கட்ட வேண்டுமென்றால், லோன் வாங்கி, தகுதியிருக்கக்கூடிய நபர்கள் ஒரு குடிசை வீட்டை மாற்றி ஓர் ஓட்டு வீட்டையாவது கட்ட வேண்டுமென்று சொன்னால், பட்டா சான்றிதழ் வழங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த பழைய முறையிலிருந்து மாற்றி, ஆண்டு வருமானம் 12,000 ரூபாய்க்கு குறைவாக இருக்கிறது என்றால் அந்த மக்களுக்கு நகரங்களிலே பட்டா வழங்கப்பட வேண்டும். ஆக, நகராட்சி, பேரூராட்சி என்று சொல்லி, தடுத்துவிடக்கூடாது என்று தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல தருமபுரி மாவட்டம். டேனிகோடா என்கின்ற பகுதி—ஓசூருக்குப் பக்கத்திலே வருகிற தேன்கனிக்கோட்டை என்ற அந்தப் பகுதியிலே பட்டா கொடுக்க தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய மலைவாழ் மக்களுக்குப் பட்டா வேண்டுமென்று சொல்லி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அதையும் வழங்க வேண்டுமென்று சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சமத்துவபுரத்தை விரும்புகிறார்கள். ஜாதியச் சண்டைகள், மதச் சண்டைகள் காரணமாக இடுகாட்டிற்கு பிணத்தை எடுத்துக்கொண்டு செல்வதிலே ஏற்பட்டிருக்கிற தகராறைப் போக்கும் விதத்தில் நிலமைகள் தற்போது இல்லை. அநேகமாக, ஏதாவது விபத்திலே இறந்தால், கொலை நடந்தால்கூட, காவல் நிலையத்தில் இருக்கக்கூடியவர்கள், அந்தப் பிணத்தை முதலில் யாருடைய காவல் சரகத்திலே எடுக்க வேண்டுமென்று சொல்லி இன்றைக்கு எல்லைத்



1998 ஏப்ரல் 21] [திரு. ஜி. பழனிசாமி]

தகராறு வருகிறது. ரெவின்யூ துறையில், அங்கிருக்கிற தாலுகா அலுவலகம் மூலமாக, ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மூலமாக இந்த இடம் இந்தச் சரகத்திற்கு உட்பட்டது என்றும் இதனை காவல்துறை எடுத்துக் கொள்ளலாம் என்றும் சொல்லக்கூடிய விதத்தில் இன்றைக்கு வருவாய்த் துறையினுடைய அதிகாரம் இருக்கின்றது. அப்படிப்பட்ட அதிகாரம் படைத்திருக்கிற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் சமத்துவபுரத்தை விரும்புகிறார்.

இன்றைக்கு ஏழை எளிய மக்கள்—அதுவும் என்னுடைய மாவட்டத்திலே ஒன்று குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், பண்ணையார்கள் காலத்திலிருந்தே தங்களுடைய வேலைகளை—அடிமைகளாக, தங்களுடைய பண்ணையிலே வேலை செய்ய வேண்டும் என்பதற்காக, போக்குவரத்து வசதி இல்லாமல், மின்சார வசதி இல்லாமல், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல், பல நூறு கிராமங்களில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தார்ச் சாலை என்றால் என்ன என்று அவர்களுக்குத் தெரியாது. மின்விளக்கு என்றால் என்ன என்று தெரியாது. நல்ல குடிதண்ணீர் என்றால் என்ன என்று தெரியாது குளத்துத் தண்ணீரை இன்னும் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அது கொடுமையான நிகழ்ச்சி. அதுவெல்லாம் எந்த நேரத்திலே எங்களுக்குத் தெரிகிறது என்று சொன்னால், ஆண்டுதோறும் நவம்பர் மாதத்திலே ஏற்படுகிற அந்தக் கடுமையான வெள்ளம் வருகிறபோது, நாங்கள் அவர்களைக் கரையேற்றிக் கொண்டுவந்து பள்ளிகளிலே அவர்களுக்கு உணவு அளிக்கக்கூடிய நேரத்திலே, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சேவை மனப்பான்மை உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடுகிற நேரத்தில் காணப்படுகிற கொடுமை இருக்கிறதல்லவா, ஆண்டுதோறும் அது ரொம்ப வேதனையான கொடுமை.

ஒருவர், இரண்டு பேர் அல்ல, பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொண்டு வரக்கூடிய பெரும் செலவை அரசாங்கம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆனால், ஆண்டாண்டுக் காலமாக, நூற்றாண்டுக் காலமாக அந்த இடத்திலே இருந்தவர்களுக்கு பட்டா வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் 2 லட்சம் பேர்களுக்குக் கொடுப்பதாக கணக்கு வருகிறது., சமத்துவபுரத்தை விரும்புகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேடான பக்கங்களிலே, சாலை யோரங்களிலே எல்லாம், விபத்து வருகின்ற நேரங்களிலே அவர்களுடைய

[திரு. ஜி. பழனிசாமி] [1998 ஏப்ரல் 21

உயிரைக் காப்பாற்றும் விதத்தில் அந்த இடங்களை அவர்களுக்கு வழங்க வேண்டிய முயற்சியில் ஈடுபட வேண்டும். இன்றைக்கு அரசு ஓர் உத்தரவை வழங்கியிருக்கிறது. அந்த ஏழை மக்கள் குடியிருக்கக்கூடிய இடங்களுக்கு, அந்த இடங்களைக் கொடுக்கிறோம் என்று சொல்லி, பள்ளப் பகுதியிலே இருக்கிற இடங்கள் வழங்கப்படுகின்றன. அதைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக நில உச்சவரம்புச் சட்டத்தையே நம்முடைய வருவாய்த்துறை கைவிட்டது போன்று இன்றையதினம் கொள்கைக் குறிப்பிலே தென்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர்தான் காங்கிரஸ்காரர்கள் காலத்திலே அந்த நேரத்திலே ஓர் உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 30 ஸ்டாண்டர்டு ஏக்கர். மிச்ச நிலமே எடுக்கவில்லை. கோழிப் பண்ணைக்கும், ஆட்டுப் பண்ணைக்கும், மாட்டுப் பண்ணைக்கும் எல்லாம் எழுதி வைத்து காங்கிரஸ்காரர்கள் **அந்த நேரத்திலே. அதற்குப் பின்னாலே அந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வந்து.....

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 பேர்கள் உள்ள குடும்பத்திற்கு 30 ஏக்கர்தான் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டுவரக்கூடிய அந்த கால கட்டத்திலே இந்தச் சட்டமன்ற உறுப்பினர் அன்றைக்கு இருந்தார். ஆகையினால் அந்த 30 ஏக்கர் போக பாக்கி நிலம் எல்லாம் அரசாங்கத்திலே கையகப்படுத்தப்பட்டது. சில பேர்களுக்கு வேண்டுமானால் சில தொழில்களுக்காக தள்ளியிருப்பார்களே தவிர அரசாங்கம் போலி வேஷம் போடவில்லை என்பதைத் தங்கள் மூலமாக உறுப்பினருக்குத் தெளிவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் காங்கிரஸ் கட்சியைத்தான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அக்கா அவர்கள் இப்போது காங்கிரஸ் கட்சியிலே இருக்கிறார்களா அல்லது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியிலே

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 ஏப்ரல் 21] [திரு. ஜி. பழனிசாமி]

இருக்கிறார்களா என்று தெரியவில்லை. ஆகையினால் நான் சொல்வது **காங்கிரஸ் கட்சியைச் சொல்கிறேன். உங்கள் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சொல்லவில்லை. **காங்கிரஸ் கட்சி.

ஆகையினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்னால் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் கொண்டு வந்து அந்த நிலங்களை எடுத்து ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலமற்றவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கொள்கையாகக் கொண்டு வந்தார்கள். 1989 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னால் இதே அவையிலே வருவாய்த் துறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டியலிட்டுக் காட்டினார்கள். பெயர்கள் அறிவிக்கவில்லை யார் யாரிடத்தில் பினாமி நிலம் வைக்கப்பட்டிருக்கிறது. உச்சவரம்பாக நிலங்களை எடுக்க முடியாத நபர்கள் யார் யார் என்பதையெல்லாம் அன்றையதினத்திலே பட்டியலிட்டுக் காட்டினார்கள். அதேபோன்று அந்த நிலங்கள் எல்லாம் விரைவிலே எடுக்கப்படும், கையகப்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு பார்க்கிறபோது முழுமையாக அந்தக் கொள்கை நிலையிலிருந்து விடுபட்டதாக எனக்குத் தெரிய வருகிறது. ஆகையினால் அந்த உச்சவரம்புச் சட்டத்தை மேலும் விரிவுபடுத்தி மிச்ச நிலங்களை எடுத்து ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு எங்களுடைய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. திருவாரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் என பிரிக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்டத்திற்கான மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைக் கட்டுவதற்கான இடங்களை எல்லாம் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குரிய இடங்கள் இன்னும் சர்வே செய்யப்பட்டதா? அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அதற்கான உரிய கட்டடம் கட்டுவதற்காக அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரைவிலேயே திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கல்நாட்டு விழா நடத்தப்பட வேண்டும். அது இந்த அவையிலே அறிவிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜி. பழனிசாமி] [1998 ஏப்ரல் 21

இன்றைக்குத் தாலுக்கா எல்லாம் பிரித்திருப்பது என்பது நிர்வாகத்திற்கு உண்மையிலேயே வசதியானது. அதுவும் வருவாய்த் துறை அலுவலகத்தைப் பிரித்திருப்பது ரொம்ப அவசியமானது கணிப்பொறித் திட்டங்கள் கொண்டு வந்து இருப்பது என்பது, பழைய முறையிலிருந்து மாற்றுவது என்பது போன்ற நல்ல நிலைமைகள் வந்திருப்பது எல்லாம் வரவேற்க வேண்டிய ஒன்று.

அதேபோன்று நில மாற்றுப் பட்டாக்கள். இன்றைக்கு என்னிடத்திலே நிலம் இருக்கிறது என்று சொன்னால் அந்த நிலத்தை அடமானம் வைக்க வேண்டுமென்றால் அல்லது ஒரு பொருளை வங்கியிலே கொண்டுபோய் அடமானம் வைக்க வேண்டும் என்று சொன்னால் என்னுடைய பத்திரத்தைக் கொண்டுபோய் அங்கே வைக்க முடியவில்லை. வருவாய்த் துறையிலே என்ன கேட்கிறார்கள் என்று சொன்னால், வங்கியிலே என்ன கேட்கிறார்கள் என்று சொன்னால் உங்கள் பெயரிலே நிலம் இருப்பது என்பதில் எங்களுக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் நீங்கள் யாரிடத்தில் வாங்கினீர்கள் என்ற அந்த மூலப் பத்திரத்தைக் கொண்டு வாருங்கள் என்று கேட்கிறார்கள். அதற்கு என்ன காரணம். ஒருவர் நிலம் வாங்கி சப்-ரிஜிஸ்டர் அலுவலகத்திலே ரிஜிஸ்டர் செய்த பின்னால் அந்த நிலத்தை அவருக்கு உரியது என்று சொல்ல முடியாத அளவுக்கு இந்த வருவாய்த் துறையினுடைய நிர்வாக அமைப்பு இன்றையதினத்திலே தமிழ்நாடு முழுவதும் இருக்கிறது. நிலம் வாங்கப்பட்டு சப்-ரிஜிஸ்ரார் ஆபீசில் ரிஜிஸ்டர் செய்த அன்றைக்கே மூலப் பத்திரத்தைப் பார்த்து அவர் நிலத்திற்குச் சொந்தக்காரர் என்று உறுதி செய்யப்பட வேண்டும். இல்லையென்று சொன்னால் அவன் நிலம் வைத்திருந்தாலும்கூட வேறொரு நபர்கூட இன்னொரு நபருக்கு இந்த நிலத்தை விற்க முடியும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வட்டங்கள் எல்லாம் பிரிக்கப்பட்டிருகின்றன.

என்னுடைய திருத்துறைப்பூண்டித் தாலுகாவை இரண்டாகப் பிரித்து முத்துப்பேட்டையை ஒரு வட்டமாகப் பிரிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். வருவாய்த் துறை அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறேன். அதைச் செய்ய வேண்டும்.



1998 ஏப்ரல் 21] [திரு. ஜி. பழனிசாமி]

பிற்பகல் 12-50

இன்று காலையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு தாலுகாவை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று ஆளும் கட்சியினர் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள். 1984ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் திருநெல்வேலியில் அந்த வட்டத்தைப் பிரிக்க வேண்டும் என்று அப்போது அறிவித்தார்கள். ஆனால் இன்று வரையில் அந்த வட்டத்தைப் பிரிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அந்த வட்டத்தை நீங்கள் பிரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயத் தொழிலாளர்களுக்காக ஓர் ஒருங்கிணைந்த சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு திரு. சோலப்பன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் அந்தக் கமிட்டி சென்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது கோலப்பன், கோ. பழனிசாமி என்பது மாதிரி.

**திரு. ஜி. பழனிசாமி:** திரு. கோலப்பன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு அது ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. அதை விரைவில் வருவாய்த் துறையின் மூலமாக அறிவிக்க வேண்டும். அதை அறிவித்தால் கூலித் தொழிலாளர்களுக்கென ஒரு சீரான கொள்கையைத் தமிழகத்தில் கொண்டு வர முடியும். அந்த வகையில் அதையும் அமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

**திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேரில் யாராவது ஒருவர் பேசுங்க. (குறுக்கீடு), திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு ஆண்ட ஆட்சி, தலைவர் காமராஜர் ஆட்சி. அந்த ஆட்சியின்போது பெரிய மிராசுதாரர்கள், மிட்டாதாரர்கள் எல்லாம் அந்த அசெம்பிளியில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள் -

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1998 ஏப்ரல் 21

அந்த ஒப்பற்றத் தலைவர் அவர்களைக்கூட சட்டை செய்யாமல் 30 ஏக்கர் நிலம்தான் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்த அந்தத் தலைவர் ஆட்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது** ஆட்சி என்று சொன்னதைத் தயவுசெய்து அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், என்ன ஒவ்வொருவராக எழுந்துகொள்கிறீர்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்ச வரம்பு வந்ததே தவிர மிச்ச நிலம் வரவில்லை. அதற்கு ஒரேயொரு உதாரணம். திருடன் ஒருவன் இருக்கிறான் என்று சொன்னால்—ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன்—திருடன் ஒருவன் இருக்கிறான் என்று சொன்னால், அவனைக் கண்டுபிடிப்பதற்கு 6 மாதத்திற்கு முன்னால் அல்லது ஒரு வருடத்திற்கு முன்னால், நாங்கள் இந்த இடத்திலே, காவல் துறை அதிகாரிகள் மூலமாக கண்டுபிடிக்கப்போகிறோம் என்று சொல்லி பத்திரிகையில் செய்தி கொடுத்து விளம்பரப்படுத்தி, மைக் வைத்து விளம்பரப்படுத்தி, அவனைப் பிடிக்கப்போனால், காவல் துறை தேடும் அந்தத் திருடன் அங்கே இருப்பானா? அந்தத் தவறு செய்தவன் அங்கே இருக்க முடியுமா? ஆக கரும்பு பயிரிடுகிறார்கள், கோழிப்பண்ணை வைத்து இருக்கிறார்கள், அதுபோல காங்கிரஸ் கட்சியினுடைய சட்டம் இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ** காங்கிரஸ் என்று சொன்னீர்கள். அந்தக் காலத்திலே அவர்கள் காங்கிரசில் இருந்து இருக்கிறார்கள். அது அவர்களுடைய மனதைப் புண்படுத்துகிறது. அதனால் அந்தச் சொற்களை நீக்கியிருக்கிறேன். அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்பது unparliamentary word அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1998 ஏப்ரல் 21] [திரு. கே. சுப்பராயன்]

இரண்டாவது விஷயம். ** என்ற அந்த வார்த்தை அட்சர சுத்தமாகப் பொருந்தும், அந்த இடத்திற்கு. ஆகவே, அதை எடுத்து விட்டால் அதனுடைய உள் அர்த்தம் சிதைக்கப்பட்டு விடும் என்பதாலே, எடுக்கக்கூடாது என்பதற்கு நான் குறிப்பிட விரும்புவது, காமராஜர் அவர்களைப் பற்றி நான் எள் முனை அளவுகூட குறைவாக மதிப்பிடவில்லை. ஒரு தேசிய விடுதலை இயக்கத்தில் மகத்தான பங்கு ஆற்றிய தலைவர் என்பதில் மாறுபடவில்லை. ஒரே ஒரு விஷயம். காமராஜர் அவர்களால் கொண்டுவரப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டத்திலே மிச்ச நிலமே கிடைக்காத அளவுக்கு உச்ச வரம்புச் சட்டம் அமைந்து விட்டதே என்ற வேதனையில்தான் பின்னர் அந்தச் சட்டத்தை திருத்த வேண்டிய வரலாற்று நிர்பந்தம் ஏற்பட்டது என்பதையும் தமிழ் மாநில காங்கிரஸ் நண்பர்கள் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அந்த வார்த்தையை எடுத்து விட்டேன், நீங்கள் உட்காருங்கள். ** காங்கிரஸ் என்று சொன்னதில்** என்பது வடுக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், உங்களுடைய இருக்கையில் போய் உட்காருங்கள். அந்த வார்த்தை எடுக்கப்பட்டுவிட்டது. திரு. வெங்கடசாமி, நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 12-55

**Thiru B. Venkatasamy:** Hon. Deputy Speaker, Sir, in support of my cut motions on the Demand for Land Revene for the year 1998-99, I want to offer some of my views on behalf of the Janata Dal. Revenue Department is one of the most important Department which governs Tamil Nadu in all matters like law and order, social welfare and all aspects. For example, the Collector is the Head of the District and he looks after the law and order situation and the entire welfare of the District. The DROs are there and at the Taluk level the Tahsildars are also there. Actually many schemes are implemented by the Government for achieving a socialistic pattern of living. For example, drought relief, flood relief, tenancy registration, implementation of Tamil Nadu

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

Agricultural Labourers Fair Wages Act, Natham Survey, Accident Relief Scheme, grant of relief for fire accident victims in huts, grant of widow and old age pension and for physically handicapped, Manu Needhi Thittam are some of the welfare schemes implemented by the Revenue Department. It is one of the most important departments, which needs keen attention of the Government. You must see that the Department is rejuvenated so that it gives better schemes to the public. Then only the Government will get a good name.

A lot of help can be extended to the poor people in the State through this Department. Now, if you go for getting a Community Certificate, actually you will have to walk to the Taluk office for atleast 15 days. Similar is the case while getting Solvency Certificate or patta transfer. I therefore request the Hon'ble Minister to fix up some time limit for issue of these certificates. Why should one walk for one month to the office to get the certificate? Even after one month they are not giving it. I request the Hon'ble Minister to see that a time limit of seven days is fixed. If you give a petition, the concerned officer must give a reply within 7 days. Otherwise what is the use in having an officer in the office. There is no meaning in that. I therefore request the Hon'ble Minister to fix up some time limit, and see that the certificate is given. Otherwise, the Government will earn a bad name and all kinds of corruptions and other things start only here. If you issue an order in this matter, we can definitely solve lot of problems.

Regarding my constituency, I have given a cut motion to discuss the need to give pattas to the poor people who have already constructed houses in Hosur Municipal area. Nearly ten to fifteen thousand houses have been constructed in the Municipal area and it is said that the pattas cannot be given in the municipal area and that they have to pay money. How can poor people who are having an annual income of Rupees five to ten thousand, pay the money? So, I request the Hon'ble Minister to see that the pattas are given in the municipal areas as well as villages, even where a lot of buildings have been constructed without pattas. The houses constructed in poromboke lands should be given pattas throughout the State. The Hon'ble Minister has already mentioned in item 5 in page 8 of the Policy Note that a High Level



Committee has been constituted for regularisation of unobjectionable porombokes which are no longer used for communal purposes. Similarly in Item 6 in page 9 of the Policy Note, it has been stated that the Government have constituted a Committee with the Special Commissioner and Commissioner of Land Administration as Chairman, to go into the question of regularisation/eviction of encroachments in objectionable porombokes in the State. The District Revenue Officer/ Additional Collector of the respective District would be the Member-Secretary of the Committee. I request the Hon'ble Minister to see that the local M.L.A. also is included in those committees, so that it will be useful for the people. This is really a very good scheme. Where there are occupations and houses have been constructed and where there is no objection, the pattas should be given.

I have given a cut motion regarding pattas to the poor who have been cultivating the lands for decades in Hosur and Denkanikotta taluks. Hosur and Denkanikotta areas are nearer to Bangalore and are plain areas. I came to understand that some Officers to get Hill Allowance, have classified it as Hill Area. What is the fun in that? It is a plain area. We are living there for so many years and how can they classify it as hill area. It is about only 3000 ft. above sea level. How can we say it is a hil area? The area is having the same climate as in Bangalore and its geographical status is similar to Bangalore. Last time, the Hon'ble Minister was kind enough to say that this will be re-examined and pattas would be given to the poor people cultivating the lands. I request the Hon. Minister to see that the hill area classification is changed and pattas issued to the people who are cultivating the lands for decades.

பிற்பகல் 1-00

I have given cut motion to discuss the need to take steps to prevent the unauthorised occupation in the Government lands. Lot of lands have been encroached in the tanks. Almost all the tanks have silted up because of the encroachments. The Hon'ble Minister for Public Works Department was telling that he was going to desilt the tanks. When the tanks have been encroached, there is no use in desilting the tanks. So, I request the Hon. Minister to see that the encroachments are evicted urgently.

There are some grievances also in the Department. I came to know that some part-time contingent staff are working in the Department as Water Suppliers and Sweepers and they are appointed through the Employment Exchange. They are given Rs.135/- only per month. What is their fate? I request that, the same man, after 5 years may be absorbed as office Assistant, Field Assistant or Record Clerk. I request the Hon'ble Revenue Minister to examine this because even in these hard days we have given Rs.1,000/- to the Sathunavu Workers. These contingent staff have been given Rs.135/- for a long time. I request the Hon'ble Minister to see that they are given promotion as Office Assistant, Field Assistant or Record Clerk. I think there is also a G.O. with regard to this. I request the Hon'ble Minister to see that the G.O is implemented.

Regarding the auction of sand and minor minerals, I am very sorry to state that the quarry is being misused. There is no auction in some places. In some places, they bid in auction for takings and in one place but take the sand from another place. It is not at all functioning properly. The Revenue Department is doing this. For example in Villupuram, permission is given in one place and sand is taken in another place. It should be regularised. Lot of income will come to the Government if it is regularised. So, I request the Hon'ble Minister to see that it is regularised and permits are given to all areas without any hesitation. If a man wants to construct a house, he has to come to Madras to get permission for quarrying sand and stone. We must decentralise this and we should give more powers to the panchayats or to the Revenue Officers and see that it is regularised.

Thank you very much for giving me this opportunity, Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். ஆர். அழகராஜா.

***திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பழமையான, பெருமையான, முதன்மையான இலாக்காவினுடைய நிதிநிலை அறிக்கையிலே அதுவும் முதுமையான அனுபவம் வாய்ந்த ஒரு திறமையான அமைச்சரின் மானியக் கோரிக்கையிலே பேசுவதிலே மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டு





தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய நில வரியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றபோது இரத்து செய்தமைக்கு அனைத்து நில உரிமையாளர்கள் சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதன்மையாக, கிராமங்களிலே பணிபுரிகின்ற கிராம அலுவலர்களுக்கு, வி.ஏ.ஓ.-க்களுக்கு அலுவலகங்கள் இல்லாத காரணத்தினால், அவர்கள் அங்கே தங்குவது கிடையாது. சாதாரணமாக கிராமங்களில் இருக்கின்றவர்கள் அவர்களிடம் சென்று ஒரு மனுவைக் கொடுத்து பரிந்துரை செய்யவேண்டுமென்று சொன்னால், பல இடங்களுக்கு அவர்கள் அலைய வேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. ஆகவே, வி.ஏ.ஓ-க்களுக்கு எல்லாக் கிராமங்களிலும் ஓர் அலுவலகத்தை ஏற்படுத்தி, குறைந்தபட்சம் வாரத்திலே நான்கு நாட்களாவது குறிப்பிட்ட நேரத்திலே அவர்கள் அங்கே தங்கவேண்டுமென்று அரசு ஆணையிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அடுத்தபடியாக, வி.ஏ.ஓ.-க்கள் எத்தனை ஆண்டுக்காலம் பணிபுரிந்தாலும்கூட அவர்களுக்கு எந்தவிதமான பதவி உயர்வும் கிடையாது. ஆகவே, அவர்களுக்குப் பதவி உயர்வு இல்லாத காரணத்தாலே அவர்கள் செய்கின்ற அந்தப் பணியிலே அதிகமாக ஆர்வம் எடுத்துக்கொள்வது கிடையாது. ஆகவே, அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கக்கூடிய வாய்ப்பினை இந்த அரசு செய்யவேண்டுமாய் இந்தநேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

வருவாய்த் துறையானது பல்வேறு அலுவல்களைச் செய்து வருகின்றது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், வருவாய், சட்டம்-ஒழுங்கு, வெள்ள நிவாரணப் பணி, வறுமை ஒழிப்புத் திட்டங்கள், சாதிச் சான்றிதழ் வழங்குதல், சமூக நலப் பணிகளான ஊனமுற்றோருக்கு பஸ் பாஸ் வழங்குதல், விபத்து நிவாரணத்திட்டம், நலிந்தோருக்கான குடும்ப நலத்திட்டம் போன்ற பல பணிகளை வருவாய்த் துறை கவனித்து வருகிறது. சமூக நலத் துறை என்ற ஒரு துறை இருக்கின்ற காரணத்தாலே சமூக நலத் துறைக்கு ஒரு தாய் அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சமூக நலத் துறையினுடைய பணிகளையும் வருவாய்த் துறை கவனிக்கின்ற காரணத்தினால் முழுமையாக இந்தப் பணியை வருவாய்த் துறை

அலுவலர்களால் கவனிக்க முடிவதில்லை. பெண்களுக்குச் சம உரிமை கொடுக்க வேண்டும் என்று நாம் அனைவரும் பேசுகின்ற இந்த நேரத்திலே அந்த உரிமையை நாம் தட்டிப் பறித்துக்கொள்வது என்பது சாலச்சிறந்ததாக இருக்காது. ஆகவே, சமூக நலத் துறை செய்ய வேண்டிய பணிகளை வருவாய்த் துறையிலிருந்து பிரித்து அதை அந்த அமைச்சகத்திற்கே கொடுத்துவிடுவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இரண்டாவதாக, இங்கே பல உறுப்பினர்கள் பேசினார்கள். சாதாரணமாக ஒரு நிலத்தை வாங்குகின்றபோதோ அல்லது விற்கின்றபோதோ—குறிப்பாக விற்கின்றபோது—பத்திரப் பதிவு அலுவலகத்திலே ஒரு மனுவையும் சேர்த்துக் கொடுத்துவிடுகிறோம். அந்தப் பத்திரத்திலேயும் நாம் அதை எழுதிவிடுகிறோம். இத்துடன் சேர்த்து பட்டா மாறுதல் மனுவையும் இணைத்துக் கொடுத்திருக்கிறேன் என்று எழுதுகின்றோம். அதைக் கொடுப்பதினால் எந்தவிதமான பிரயோஜனமும் இதுவரைக்கும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. எனவே, பட்டா மாறுதல் மனுவைக் கொடுத்ததற்குப் பின்னால் பத்திரப் பதிவுத் துறை அதிகாரிகள், சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அலுவலகத்திற்கு அனுப்பி, பட்டாவை மாறுதல் செய்வதற்கு இந்த அரசு உடனடியாக முயற்சியை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்று சொன்னால், அவர்கள் மீண்டும் வருவாய்த் துறைக்குச் சென்று பலமுறை அலைந்துதான் பட்டா மாறுதலைச் செய்யவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, உடனடியாக பட்டா மாறுதலுக்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

புதிதாக, கடந்த ஆண்டு நான்கு மாவட்டங்களைத் தோற்றுவித்திருக்கிறீர்கள். அதிலே தேனி மாவட்டம் ஒன்று என்பதிலே நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால், புதிதாக ஏற்படுத்தப்பட்ட அந்த மாவட்டத்தில் 16 கிலோ மீட்டர் சுற்றளவில் எந்தவொரு நிலமாக இருந்தாலும், எத்தனை பேர் அதிலே குடியிருந்தாலும் அங்கு பட்டா கொடுக்கக்கூடாது என்ற ஒரு நிலை இருக்கிறது. அவர்கள் பல ஆண்டுக் காலமாக குடியிருந்து கொண்டு வருகிறார்கள். உதாரணமாக,



தேனியை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக காமராஜர் லேன் என்ற ஒரு லேன் இருக்கிறது. அங்கு கிட்டத்தட்ட 100 பேர் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல், தேனியிலே பொம்மையகவுண்டன்பட்டி என்ற ஒரு பகுதியை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், அங்கு ஓடைத் தெரு என்ற பெயர் கொண்ட அந்த இடத்தில் சாதாரண ஏழை விவசாயிகள், ஆதிதிராவிட மக்கள் 50, 60 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்தக் குடும்பங்களுக்கெல்லாம் பட்டா கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, 16 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு பட்டா கொடுக்கக்கூடாது என்றுள்ள சட்டத்தை நீக்கி அந்த ஏழை விவசாயிகளுக்கும், குடியிருப்பு மனை உள்ளவர்களுக்கும் பட்டா வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கின்றேன். தாலுகா ஒன்றுக்கு ஒரு Taluk Surveyor என்ற நிலை இருக்கிறது. அவர்கள்தான் நகராட்சிப் பகுதியிலேயும் இருக்கக்கூடிய பல்வேறு பணிகளைக் கவனித்து வருகிறார்கள். அந்த Taluk Surveyor-கள் நகராட்சியிலேயிருந்து கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பகுதி சம்பளத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்கின்ற பணிகளையும், வட்டாட்சியர் சொல்கின்ற பணிகளையும், கோட்டாட்சியர் சொல்கின்ற பணிகளையும்தான் அவர்கள் கவனிக்கின்றார்களே தவிர, மூன்றில் இரண்டு பகுதி சம்பளம் தருகின்ற நகராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய பணிகளை அவர்களால் சரியாகச் செய்ய முடிவதில்லை. ஆகவே, ஒவ்வொரு நகராட்சிக்கும் தனியாக ஒரு சர்வேயரை நியமித்தால் அவர்கள் அந்தப் பணிகளை மட்டும் செய்வதற்கு வசதியாக இருக்கும். ஏனென்று சொன்னால் பல பகுதிகளில் சிறிய சிறிய நிலப் பிரச்சினைகள் இருக்கின்றபோது சரியான அளவு முறை - சர்வே - செய்யப்படாத ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால் பல்வேறு தகராறுகள் ஏற்படுகின்றன. சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்படுகிறது. அதனால் பல பிரச்சினைகள் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே, தாலுகா சர்வேயரை தனியாகப் பிரித்து, ஒவ்வொரு நகராட்சிக்கும் தனியாக ஒரு சர்வேயரை நியமிப்பதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அடுத்தபடியாக, தற்சமயம் பயிர் வாரியாக நிலவரி வசூல் செய்யப்படுகின்றது. அவ்வாறு செய்கின்ற ஒரு நிலையை மாற்றி,

ஒவ்வொரு நஞ்சைக்கும் ஒரு ஏக்கருக்கு இவ்வளவு, புஞ்சைக்கு இவ்வளவு என்று வரி வசூல் செய்தால், அனைவரும் வரி செலுத்துவதற்கு வசதியாக இருக்கும். ஏனென்றால், ஒரு நிலத்திலே, ஒருசில நேரங்களில் வெவ்வேறு விதமான சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு, விலைகளுக்கு ஏற்றவாறு விவசாயம் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வாழை போடுகிறோம், பருத்தி போடுகிறோம் அல்லது வேறு விவசாயம் செய்கிறோம் என்று சொன்னால், அதற்கு ஏற்றவாறு வரிகளை அமைப்பதைக் காட்டிலும், புஞ்சை நிலத்திற்கு இவ்வளவு அல்லது நஞ்சை நிலத்திற்கு இவ்வளவு என்று வசூல் செய்தால், அனைவருக்கும் சுலபமாக இருக்கும். வரி செலுத்துபவர்களுக்கும் சுலபமாக இருக்கும் என்பதை இந்தநேரத்தில் என்னுடைய கருத்தாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்று சாதாரணமாக விவசாயிகள் நீர் இருக்கக்கூடிய ஆதாரத்தைப் பார்த்து, அங்கே கிணறுகளைத் தோண்டி, அங்கிருந்து பல மைல்களுக்கு அப்பால் இருக்கக்கூடிய தன்னுடைய நிலத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் பைப் லைன் போடுகின்றபோது சில நேரங்களில் சாலை வழியாகத்தான் அதை எடுத்துச் செல்லவேண்டிய சூழ்நிலை, அரசு நிலத்தின் வழியாக எடுத்துச் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு அதிகாரிகள் பலரைச் சந்தித்து, பல்வேறு சிரமங்களுக்கிடையே அனுமதி பெற்று, அதற்குண்டான தீர்வைகளைச் செலுத்தி அந்த் பைப் லைனைப் போடவேண்டியிருக்கிறது. ஆகவே, எவ்வாறு அதை சுலபப்படுத்த முடியுமோ அவ்வாறு சுலபப்படுத்தி, அதற்கு உடனடியாக அனுமதி பெறக்கூடிய அளவிலே அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மரியாதைக்குரிய முன்னாள் தலைமைச் செயலாளர், திரு. சபாநாயகம் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, வருவாய்த் துறையில் பல சீரமைப்புகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்தார்கள். அந்தக் குழுவும் அரசுக்குத் தன்னுடைய அறிக்கையை அளித்து விட்டதாகக் கருதுகிறேன். அந்த அறிக்கையை இந்தச் சபையிலே சமர்ப்பிக்க வேண்டும். அந்த அறிக்கையை இந்த அரசு முழுவதுமாகப் பரிசீலனை செய்து, உடனடியாக அமல்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, 1961 ஆம் ஆண்டு அன்றைய பாரதப் பிரதமராக பணிபுரிந்த மாண்புமிகு ஜவஹர்லால் நேரு அவர்களுடைய ஜனநாயக சோஷலிஸ அடிப்படையில், தமிழகத்தில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசு ஒரு 'நில உச்சவரம்புச் சட்டத்தைக்' கொண்டு வந்தது. அது 1961ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டாலும்கூட, அதை அமல்படுத்திய ஆண்டு 1960. ஆகவே இந்த நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து யாராக இருந்தாலும் தப்பித்துவிடக்கூடாது என்பதற்காக இந்தச் சட்டம் 1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்டாலும்கூட அமல்படுத்தியது முன்தேதியிட்ட 1960 ஆம் ஆண்டு ஆகவே, அதிலே யாராக இருந்தாலும் தப்பித்துவிட முடியாத அளவுக்குத்தான் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் செய்தார்கள் என்பதை இந்தச் சட்டமன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குப் பின்னால், 1972ஆம் ஆண்டு இந்த நில உச்சவரம்புச் சட்டத்தைக் குறைத்தாலும்கூட—பல்வேறு காலகட்டங்களிலே 60 standard acre-லிருந்து 15 standard acre-ஆகக் குறைத்தாலும்கூட—அதனால் பெற்றிருக்கக்கூடிய உபரி நிலம் 1,75,000 ஏக்கர்தான் என்பதை இந்த நேரத்தில் இந்தச் சட்டமன்றத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் அவற்றை வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அமைச்சருக்கு நான் சொல்லிக்கொள்வது, தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு அரசு நிருவாகத்தைச் சீர் செய்வதற்கு தமிழக அரசு பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதாகும். அதைப்போலத்தான், தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு புதிய கட்டடங்களைச் சீர்செய்து, தூய்மைப்படுத்தி, வெள்ளையடித்து மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். இது வரவேற்கக்கூடிய ஒன்று. ஆனால், செய்து முடித்துவிட்டு மறுநாள் பார்த்தால், அந்த இடத்தில் பல்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும், தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்களும், அரசு ஊழியர் சம்மேளனங்களும் அங்கு wall posters-களை ஒட்டிவிடுகின்றார்கள். இது தூய்மைக்கு அப்பாற்பட்ட முறையிலே இருந்து விடுகிறது. ஆகவே, அதைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டங்கள் இருந்தாலும்கூட, அதைச் சரியான முறையிலே செயல்படுத்த வேண்டுமென்று இந்த மன்றத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடித்து

விடுகிறேன். கடந்த ஆண்டு 1-1-1997 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு மாவட்டத்தினுடைய தலைநகராக தேனியை அறிவித்தார்கள். ஆனாலும்கூட, இன்றுவரை அதற்குரிய மாவட்ட அலுவலக வளாகம் ஏற்படுத்தப்படாமல் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்வது, இந்த ஆண்டாவது, அந்த மாவட்டத் தலைநகரத்திற்கு ஒரு சிறந்த வளாகத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு நன்றியோடு விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியத்தின்மீது சட்டப் பேரவை உறுப்பினர்கள் மொத்தம் 10 பேர் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்குக் கருணை உள்ளத்தோடு வாய்ப்புத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் முதலில் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புவது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்களுக்கு. திரு. ரங்கநாதன் அவர்களுக்கே ஆச்சரியமாக இருக்கும். அவர் பேசும்போது சொன்னார், இங்கே வருவாய்த் துறை மானியத்தின்மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது, வருவாய்த் துறையைச் சார்ந்த அதிகாரிகள் யாரும் வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். அவருடைய கருத்தை எடுத்துச் சொன்னார்கள். திரு. ரங்கநாதன் அவர்கள் அவ்வாறு பேசியிருந்தாலும், இருக்கையிலே உட்கார்ந்துகொண்டு பூபாளம் பாடினாலும், நான் ஒன்றை அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வருவாய்த் துறை என்பது தாய்த் துறை. ஆகவே, அந்த தாய்த் துறையில் பணியாற்றுகின்றவர்கள் அத்தனை பேரும் தாயுள்ளத்தோடு பணியாற்றுபவர்கள் என்பதால் அவர்களை அந்த அளவிற்கு மதித்து, அவர்கள் காட்டுகின்ற கடமை உணர்வுகளைப் புரிந்து நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை உணர்கிறேன் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



இங்கே மொத்தம் 10 பேர் பேசியிருக்கிறார்கள். இது வரலாறு காணாத உண்மையோ என்னவோ தெரியாது. அருமை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. அமரமூர்த்தி, திரு. ஜி.எல். வெங்கடாசலம், திரு. அ.ல. தங்கவேல், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. ஜி. நிஜாமுதீன், திரு. ப. கோவிந்தன், திரு. பி. வெங்கடசாமி, திரு. செ. இராமலிங்கம் மற்றும் திரு. என்.ஆர். அழகராஜா ஆகியோர் நல்ல பல கருத்துகளை இந்த மன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே நான் சில கருத்துகளைத் தெரிவிப்பதற்கு முன்பு விளக்கமான அறிக்கையைத் தருகின்ற வகையில் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் தங்களது அன்றாட வாழ்க்கை நடைமுறைகளுக்கு எந்தவொரு வகையிலேயாவது உறுதுணையாக வருவாய்த் துறை அமைந்திருக்கிறது என்று கூறுவதில் நான் பெருமிதம் அடைகிறேன். மனிதனுக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம், வேலைவாய்ப்பு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் வருவாய்த் துறை தனது சீரிய பணியை ஆற்றி வருகிறது. இத்துறை ஆற்றிவரும் பணிகளையும் அடைந்துள்ள சாதனைகளையும் இத்துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பிலேயும், சாதனைப் பட்டியலிலேயும் காணலாம். ஆகவே, அவை குறித்து மீண்டும் விளக்கமாக நான் கூறத் தேவையில்லை. சென்ற அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் திங்கள்களில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தினால் தமிழகத்தின் சில மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு 20-11-1997 மற்றும் 21-11-1997 ஆகிய நாட்களில் நேரில் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் மழை சேத விவரங்கள் குறித்து நான் ஆய்வு செய்தேன். அதேபோல், நவம்பர் 28, 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டதுடன், மதுரை, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம்,

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1998 ஏப்ரல் 21

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் குறித்தும் நான் ஆய்வு செய்தேன். பாதிக்கப்பட்ட மக்களை நேரில் பார்த்து ஆறுதல் அளித்ததுடன், பல இடங்களில் நிவாரண உதவிகளை நான் வழங்கினேன். இந்த வெள்ள நிவாரணப் பணிகளில், மாண்புமிகு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், சென்னை மாநகரப் பகுதிகளில், வணக்கத்திற்குரிய மாநகரத் தந்தை, தம்பி திரு. ஸ்டாலின் அவர்களும் பங்கு கொண்டு, மக்களின் துயர் துடைப்புப் பணிகளில் முனைப்புடன் செயலாற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வெள்ளச் சேதங்களினால் 234 பேர் உயிர் இழந்தனர், 631 கால்நடைகள் மடிந்தன, 1,33,000 ஏக்கர் நிலங்களில் பயிர்கள் சேதம் அடைந்தன. பொதுமக்களுக்கு உணவு வழங்குதல், பாதைகள் மற்றும் பாலங்கள் மராமத்துச் செய்வது ஆகியவை மூலம் இயல்பு வாழ்க்கை வெகுவிரைவில் கொண்டுவரப்பட்டது. இறந்தவர்கள் மற்றும் கால்நடைகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகைகள் உடனுக்குடன் வழங்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்த ஆணைக்கேற்ப, பொதுமக்களின் முறையீடுகளை உடனுக்குடன் பரிவுடன் கவனிக்க அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர். வெள்ள நிவாரணப் பணிக்காக 58.95 கோடி ரூபாய் அரசு வழங்கியது. அதுமட்டுமல்ல, அந்த கனத்த மழையினால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, நடப்பு ஆண்டிற்கான நிலவரி முழுவதையும், அதாவது சுமார் 44 கோடி ரூபாயையும் இரத்து செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த மாமன்றத்தில் அறிவித்துள்ளார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப்பற்றி திரித்து வெளியிட்டுக்கொண்டு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிற நபர்களைப்பற்றியோ, பத்திரிகைகளைப் பற்றியோ நான் கவலைப்படவில்லை. வெள்ள நிவாரணம் மற்றும் புனரமைப்புப் பணிகளில், வருவாய்த் துறை உரிய முறையில் பணியாற்றியுள்ளது. தகவல் தொடர்புச் சாதனங்கள் இயங்காத நிலையில், வருவாய்த் துறையின் 'ஹாம்' ரேடியோ, இயந்திர சாதனமாக பயனுடையதாக இருந்தது.



1998 ஏப்ரல் 21] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

வருவாய்த் துறை என்றவுடன் பொதுமக்கள் பொதுவாகக் கூறுவது, தங்களுடைய வீடு மற்றும் நிலத்திற்கான பட்டா வேண்டும் என்பதுதான். நடப்பாண்டில், குடியிருப்பு மனைப் பட்டாக்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட குறியளவு 75 ஆயிரம். ஆனால், இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு மட்டும் சுமார் 74 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது நாம் பெருமைப்படத்தக்க ஒரு சாதனையாகும்.

பல ஆண்டுகளாக, ஆட்சேபணையற்ற வகைப்பாடு நிலங்களில், குடியிருந்தாலும்கூட மலைப் பிரதேசங்களில், இயற்கைச் சூழல் சீரழிவை உண்டாக்குகின்ற காரணத்தால், வீட்டுமனை ஒப்படைவு செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் ஏழையெளிய மக்கள் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் குடியிருந்து வந்தாலும், அண்மையில் இந்த அரசுதான் இப்பகுதியில் ஒப்படைவு செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையைத் தளர்வு செய்து, ஆணை வெளியிட்டிருக்கிறது என்பதைப் பூரிப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை ஒப்படைவு செய்வதற்கு இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 2550 ஏக்கர் ஆகும். அந்தக் குறியீட்டிற்கு மேலாக, சுமார் 110 விழுக்காடு, அதாவது 2826 ஏக்கர் நிலங்கள் ஒப்படைவு செய்யப்பட்டிருக்கின்றன. குறியீடு 4000 என்றாலும், 4035 பேருக்கு நிலம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மை வருமான வரியைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் வசூல் செய்ய வேண்டுமென்ற குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 37.98 கோடி ரூபாய், அதாவது 189 விழுக்காடு வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதும் கலைஞர் அரசின் மற்றுமொரு சாதனையாகும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, கடந்த ஆண்டில் வருவாய்த் துறையின் பணிகள் சிறப்பாக அமைந்தன என்று இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இருப்பினும், மக்கள் தேவைகளும், எதிர்பார்ப்புகளும் வளர்ந்து கொண்டே இருக்கும். அவற்றை நிறைவேற்ற இந்த அரசு தொடர்ந்து முனைப்புடன் செயலாற்றும் என்று உறுதியுடன் கூற நான்

விரும்புகிறேன். வரும் ஆண்டில், வருவாய்த் துறையில் மேற்கொள்ளப்பட இருக்கும் முயற்சிகள் குறித்து சில அறிவிப்புகளை நான் இங்கே வழங்குவதற்கு முன்பு, நமது அருமை நண்பர் திரு. பழனிசாமி அவர்கள் இங்கே பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், நில வரி, தல வரி, தல மேல் வரி போன்ற வரிகள் அனைத்தையும் நாம் அடியோடு ஒழித்திருக்கிறோம் என்பதை அவர்கள் உணருவார்கள், உணரத் தவறமாட்டார்கள், உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே பேசிய அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த நண்பர்களும் மிகத் தெளிவாகத் தங்களது கருத்துகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஒத்துக்கொள்ள முடியாத சில கருத்துகளையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை ஒத்துக்கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு இல்லையென்றாலும் மறுதலிக்கக்கூடாது என்பதற்காகப் பரிசீலிப்போம் என்ற உணர்வை அவர்களுக்கு உருவாக்க நான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-25

திரு. பழனிசாமி அவர்கள் நில வரி இரத்து பற்றிச் சொன்னார்கள். எங்காவது நில வரி, தல வரி, தல மேல் வரி ஆகியவை வசூலிக்கப்படுகிறது என்று குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டால் நான் திரு. பழனிசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதற்குப் பிறகு, சான்றிதழ் வழங்குவது பற்றி நமது அருமை நண்பர் ஓசூர் வெங்கடசாமி (குறுக்கீடு) அமரமூர்த்தியா? திரு. வெங்கடசாமி அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு சான்றிதழ் வழங்குவதற்கும் ஒரு குறிப்பிட்ட காலவரையறையை அரசு நிர்ணயித்துள்ளது. சான்றிதழ்கள் வேண்டிய காலத்தில் குறிப்பிட்ட காலவரையறைக்குள் தாமதம் இன்றி வழங்கப்படும் என்று உங்களிடம் வழங்கப்பட்டுள்ள மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்போது சில அறிவிப்புகளை உங்கள் பொறுமையைச் சோதிக்கின்ற முறையில் அல்லாமல், இந்த இலாகாவிற்குப் பெருமை சேர்க்கின்ற முறையில் தெரிவிக்க விரும்புகின்றேன்.





அறிவிப்பு-1. சட்டம்-ஒழுங்கு, புயல், வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற இயற்கைச் சீற்றக் காலங்கள்; மிக முக்கிய விருந்தினர் வருகை ஆகிய சமயங்களில் மாவட்ட மற்றும் மாநிலத் தலைமையிடங்களுடன் உடனுக்குடன் தொடர்புகொள்ள வேண்டியது ஓர் இன்றியமையாத தேவையாகும். இதைக் கருத்தில் கொண்டு, மாவட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுடன் துரிதமான, பயனுள்ள தொடர்பு வசதிகளை உருவாக்கவும், மாவட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளவும் V.H.F. போன்ற நவீன தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்த அரசு பரிசீலிக்கும்.

அறிவிப்பு-2. கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் ஆகிய வருவாய்த் துறை அலுவலர்கள் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறார்கள். காலம், நேரம் கருதாமல் அவர்கள் ஆற்றிவரும் பணிகளைச் சிறப்பிக்க அரசு விரும்புகிறது.

காவல் துறை அலுவலர்களுக்கு வழங்கப்படும் பதக்கங்கள் போல வருவாய்த் துறையில் சிறப்பாகப் பணியாற்றி, எந்தவித தண்டனையோ, குற்றச்சாட்டோ இல்லாத அலுவலர்கள், அதாவது, கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் ஆகிய அலுவலர்களில் சிறந்த ஒவ்வொரு நபருக்கும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் அவர்கள் ஆற்றிய பணியைச் சிறப்பிக்கும் வகையில் விருதும், பதக்கமும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கலாமா என்பது குறித்து அரசு பரிசீலனை செய்யும். மேற்படி விருது, 'பேரறிஞர் அண்ணா விருது' என்ற பெயரால் அழைக்கப்படும்.

அறிவிப்பு-3. தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டத்தின்கீழ் 19-6-1971 நாளன்று குத்தகை அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் குடியிருப்பு மனை வைத்துக்கொள்ள உரிமை உண்டு. இவர்களில். பலர், சிறு குடிசைகளிலே வாழ்ந்து வருகிறார்கள். பெரும் மழை மற்றும் வெள்ளக் காலங்களில் இவர்களது குடியிருப்புகள் நீரால் சூழப்பட்டு இன்னல் அடைகிறார்கள். ஆகவே அவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள, அரசு மானியத் திட்டங்கள் வாயிலாக உதவி அளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1998 ஏப்ரல் 21

அறிவிப்பு-4. பொது மக்களின் நிலங்கள் குறித்த புல எல்லையை அளவிட்டுக் காட்டவும், பாகப் பிரிவினை போன்ற நில மாற்றங்கள் காரணமாக புலங்கள் உட்பிரிவு செய்யப்படுவதற்கும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இத்தகைய பணிகளை எவ்வித தாமதமும் இல்லாமல், உடனுக்குடன் முடித்துக் கொடுக்க தக்க அறிவுரைகளை அரசு வெளியிடும்.

அறிவிப்பு-5. நில உரிமைப் பதிவேடு திட்டம் ஏற்கெனவே எட்டு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சேலம், நாமக்கல், தருமபுரி, இராமநாதபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் கடலூர் ஆகிய ஏழு மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இப்பணிகளை விரைவில் முடித்து, நில உரிமைப் பதிவேடுகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அறிவிப்பு-6. நில அளவைத் திட்டம் முதன் முதலில் தமிழகத்தில் தான் தொடங்கப்பட்டது. இருப்பினும், நவீன தொழில்நுட்ப உத்திகள் பயன்படுத்தப்படவில்லை. ஆகவே, நில அளவைத் துறையை, தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் நவீனப்படுத்தவும், நில அளவைத் துறை அலுவலர்களுக்கு நவீன தொழில்நுட்ப முறைகளில் தகுந்த பயிற்சி அளிக்கவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதை அரசு பரிசீலிக்கும்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** எப்போதும் பண்பும், பாசமும் உள்ளவர்தான் நம்முடைய சபாயநாயகர் என்பதைத் தயவுசெய்து மறந்துவிடக்கூடாது. அறிவிப்பு 7. நில அளவைத் துறையில் பலதரப்பட்ட பணியாளர்களுக்கு, நில அளவை செய்தல்; நிலப்பரப்பு கணித்தல்; நிலப்படம் வரைதல் போன்ற பணிகளில் பயிற்சி வழங்க தற்போது தஞ்சை மாவட்டம் ஒரத்தநாட்டில் ஒரு பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இங்கு வழங்கப்படும் பயிற்சி முறைகள் இன்னமும் பழமையானதாகவே இருந்து வருகிறது. வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்ப உத்திகளையும், கருவிகளையும் பயன்படுத்தி, மேற்கண்ட பயிற்சிகளை சென்னையில் அளிக்க ஏதுவாக ஒரு கூடுதல் பயிற்சி மையம் நிறுவ இயலுமா என்பது குறித்தும் அரசு பரிசீலிக்கும்.



1998 ஏப்ரல் 21] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

அறிவிப்பு 8. நில அளவைத் துறையில், தற்போது புலப் படங்களை அச்சிட்டு வழங்குவதற்கு ஒரு நிழற்பட அச்சகம் சென்னையில் இயங்கி வருகிறது. இது மிகவும் பழமையானது. இதன் காரணமாக, காலதாமதம் ஏற்படுகிறது. குறிப்பிட்ட கால வரம்பிற்குள் பணி முடிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. கிராம, வட்ட மற்றும் மாவட்ட புலப் படங்கள் தயாரிக்கவும், தேர்தல் காலங்களில் தேவைப்படும் புலப் படங்கள் தயாரிக்கவும் இந்த அச்சகத்தை நவீன வசதியுடன் செயல்படும் வகையில் உருவாக்க வேண்டியுள்ளது. ஆகவே 'லித்தோ' மற்றும் 'லேசர்' அச்சு முறைகளை இந்த அச்சகத்தில் அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அறிவிப்பு 9. வீட்டுமனை மற்றும் விவசாய நிலங்கள் கோரி வரும் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, வீட்டுமனை மற்றும் நில ஒப்படை செய்யப்படுகின்றன. ஆனால், உண்மை நிலையைக் கூறாது, தவறான தகவல்கள் அடிப்படையில் பலர் ஒப்படை பெற்றிருப்பதும், ஒப்படை பெற்ற நிலங்களை உரிய முறையில் பயன்படுத்தாமல் இருப்பதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. ஆகவே, இந்தத் தவறுகளையும், குறைகளையும் களைகின்ற வகையில், வீட்டுமனை மற்றும் நில ஒப்படைகள் ஆய்வு செய்யப்பட்டு, தவறான தகவல்கள் அடிப்படையில் அல்லது உரிய முறையில் பயன்படுத்தாமல் உள்ள இனங்களில், அவற்றை மீளக்கொள்ள அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

அறிவிப்பு 10. வீட்டுமனை மற்றும் விவசாய நிலங்களை ஒப்படை செய்வதற்கு, வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், நில நிர்வாக ஆணையர் மற்றும் அரசுக்குத் தனித் தனியே நிதி அதிகார வரம்பு உள்ளது. இந்த நிதி வரம்பு பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. தற்போது நில மதிப்பு கூடியுள்ள காரணத்தால், இந்த நிதி வரம்பை உயர்த்துவதற்குத் தேவை எழுந்துள்ளது. ஆகவே, மேற்சொன்ன அலுவலர்களின் நிதி வரம்பை உயர்த்துவதற்கு தக்க நடவடிக்கையினை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்திலே உரையாற்றியவர்கள் தவிர, பல உறுப்பினர்கள் நேரிடையாக என்னிடத்தில், தங்கள் எண்ணங்களையும், யோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்கள். இவை

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1998 ஏப்ரல் 21

யாவற்றையும் கருத்திற்கொண்டு, தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி உரிய நேரத்தில் மேற்கொள்வோம் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல் பல உறுப்பினர்கள், வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். அவற்றை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகிறேன்.

இந்த நேரத்தில் இந்த அவைக்குத் தேவையான, பொருத்தமான ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இது அவையின் கவனத்தைக் கவர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

மார்டின் லூதர் கிங் என்ற கருப்பர் இனத் தலைவர், தமது மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டு வந்தார். அவரது விடுதலை வேட்கை முயற்சிகளைக் கண்டு பொறுக்காத வெள்ளையர் அவரை சுட்டுக் கொன்றனர்.

28-8-1963ஆம் நாளன்று வாஷிங்டன் நகரில், சிவில் உரிமைப் பேரணியில் கலந்து கொண்டபோது அவர் ஆற்றிய உரை கவிதை நயம் வாய்ந்தது. அந்த உரையின் ஒரு பகுதியை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அது வருமாறு:—

" I have a dream that one day on the red hills of Georgia, the sons of former slaves and the sons of former slave owners will be able to sit down together at the table of brotherhood...

I have a dream that my four little children will one day live in a nation where they will not be judged by the colour of their skin, but by the content of their character. When we let freedom ring, when we let it ring from every village and every hamlet, from every state and every city, we will be able to speed up that day when all of God's children, black men and white men, Jews and Gentiles, protestants and catholics, will be able to join hand and sing in the words of the old Negro spiritual 'Free at last! Free at last! Thank God Almighty, we are free at last ! "

பிற்பகல் 1-35

இதன் தமிழாக்கம் இதுதான்:



1998 ஏப்ரல் 21] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

"நான் ஒரு கனவு காண்கிறேன் - ஒரு நாள், ஜார்ஜியாவில் செங்குன்றத்தில் முன்னாள் அடிமைகளின் குழந்தைகளும், அந்த அடிமைகளின் எஜமானர்களின் குழந்தைகளும், சகோதரத்துவம் என்ற மேஜையைச் சுற்றி ஒன்றாக உட்கார்ந்து பேசக்கூடிய காலம் வரும் என்று.

நான் ஒரு கனவு காண்கிறேன் - என்னுடைய நான்கு சின்னஞ்சிறு குழந்தைகளும் அவர்களது தோலின் நிறத்தால் அன்றி, அவர்களது குணத்தால், அவர்களைப் பற்றிப் பேசப்படுகின்ற நாட்டில் ஒரு நாள் அவர்கள் வாழ்வார்கள் என்று.

ஒவ்வொரு கிராமத்திலிருந்தும், அதன் மூலை முடுக்குகளிலிருந்தும், ஒவ்வொரு நாட்டிலிருந்தும், நகரத்திலிருந்தும், சுதந்திரம் என்று மணியை நாம் அடிப்போம்.

கடவுளின் குழந்தைகளில் கறுப்பரோ, வெள்ளையரோ, யூதரோ அல்லது ஜென்டைல்ஸ் வகுப்பினரோ, புரொட்டஸ்டன்ட்களோ அல்லது கத்தோலிக்கர்களோ, எல்லோரும் ஒன்று சேர்ந்து பாட்டிசைப்பர்.

அது என்ன பாட்டு என்றால்...

"உரிமை பெற்றோம்! உரிமை பெற்றோம்!
இறைவன் அருளால்
இறுதியில் உரிமை பெற்றோம்"

மார்டின் லூதர் கிங்கைப் போல நாமும் சமத்துவம், சகோதரத்துவம், மனித நேயம், மத நல்லிணக்கம் ஆகியவைகளையே அடைய வேண்டுகிறோம்.

அதற்காக இந்த அரசு—இந்த அரசு என்றால் கலைஞர் தலைமையில் இயங்குகிற அரசு—தன்னால் இயன்ற அனைத்தையும் வருவாய்த் துறையின் மூலமும் செய்வதில் எந்தத் தயக்கமும் காட்டாது.

நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், கடைசியாக.

*" The Crow has begun
to Caw - the dawn
is not far off".*

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1998 ஏப்ரல் 21

"காகம் கரையத் தொடங்கியது,
விடியல் வெகு தொலைவில் இல்லை"

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் கூற விரும்புகிறேன். "The dawn is not far off".

முடிப்பதற்கு முன் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று, கோரிய நிதியினை அளிக்க மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். ஏற்புடைத்தாகும் என்றும் ஏற்பார்கள் என்றும் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

### (அ) மானியக் கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** இல்லை.



1998 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி. அய்யலுசாமி.

**திரு. வி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.16,24,52,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) மானியக் கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.70,02,08,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) மானியக் கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45-இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்

**திரு. ஜி. நிஜாமுதீன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அ. வ. அப்துல் நாசர்.



**திரு. அ. வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.119,75,10,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[1998 ஏப்ரல் 21

# 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

126. விற்பனை செய்யப்பட்ட பட்டாணி, மற்றும் பட்டாணி பருப்பிற்காக 31-07-1984 முதல் 24-12-1992 வரையில் செலுத்த வேண்டிய மேல் வரியையும், கூடுதல் மேல் வரியையும் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 13-11-1997ஆம் நாளிட்ட 511 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) மற்றும் 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

127. சென்னை, தமிழ்நாடு செராமிக்ஸ் லிமிடெட், நிறுவனத்தினர் தங்களுடைய வாணிபத்தை நிறுத்திவிட்டதன் விளைவாக, 1989-90 ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் செலுத்தவேண்டிய வரித்தொகை மற்றும் மேல் வரித் தொகையைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 9-12-1997ஆம் நாளிட்ட 76 (2டி)ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

128. திருவாளர்கள் பைன் உட் இண்டஸ்டிரீஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை, நிறுவனத்தினர் 1994-95 ஆம் ஆண்டில் பாதுகாப்புத் துறைக்கு மேசை நாற்காலிகள் விற்பனை செய்ததற்காகச் செலுத்த வேண்டிய வரித் தொகையைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 10-12-1997 ஆம் நாளிட்ட 502ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).



1998 ஏப்ரல் 21]

129. திருவாளர்கள் மைசூர் சேல்ஸ் இன்டர்நேஷனல் லிமிடெட், சென்னை, விசாலம் லாட்டரி சென்டர், பழனி மற்றும் அமீர் லாட்டரி சென்டர், திருச்சிராப்பள்ளி ஆகியோர், 28-10-1993 முதல் 17-1-1994 வரையுள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய வரி வேறுபாட்டுத் தொகையையும், மேல் வரியையும் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தது குறித்து, வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 19-12-1997 ஆம் நாளிட்ட 591 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

87. மானியக் கோரிக்கை எண் 5 — முத்திரைத்தாள் நிர்வாகம் மற்றும் மானியக் கோரிக்கை எண் 6 — பத்திரப் பதிவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

88. பதிவுத் துறையின் 'பதிவுக் குடிமகனின் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

89. மானியக் கோரிக்கை எண் 47 மற்றும் 59 - ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் மீதான மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

90. மானியக் கோரிக்கை எண் 47-ன் கீழ் பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

91. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

92. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1998-99 (தமிழ், ஆங்கிலம்).

93. சிறு தொழில் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், 1998 (தமிழ், ஆங்கிலம்).

94. பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், 1998. (தமிழ், ஆங்கிலம்).

95. மானியக் கோரிக்கை எண் 26 — தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

96. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், 1998. (தமிழ், ஆங்கிலம்).

97. மானியக் கோரிக்கை எண் 1—நிலவரி, மானியக் கோரிக்கை எண் 40 — இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் மானியக் கோரிக்கை எண் 45 — இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும், 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

98. வருவாய்த் துறையின் சாதனை அறிக்கை, 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

99. வருவாய்த் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

100. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தாறாவது அறிக்கை, 1997-98.

101. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தேழாவது அறிக்கை, 1997-98.

102. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தெட்டாவது அறிக்கை, 1997-98.

103. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தொன்பதாவது அறிக்கை, 1997-98.

104. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூறாவது அறிக்கை, 1997-98.





# இணைப்பு

## வருவாய்த் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 1998-99

(81-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

**கோரிக்கை எண் 1 - நிலவரி**

**கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**கோரிக்கை எண் 45- இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்**

### 1. முன்னுரை

வருவாய்த் துறை அனைத்து நிருவாகத் துறைகளுக்கும் மூத்த துறையாகும். மேலும் பல புதிய துறைகள் இத்துறையிலிருந்து பிரிந்து சென்றவையே. நிர்வாகத்தின் முதுகெலும்பாக விளங்கி கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றத்திற்குப் பெருந்துணையாக இருப்பது வருவாய்த் துறையே ஆகும்.

2. நிலம் தொடர்புடைய அனைத்து செயல்களுக்கும் வருவாய்த் துறை பொறுப்பாகும். நில எடுப்பு, நில ஒப்படை, நில உரிமை மாற்றம், நில வருவாய் ஆவணங்கள் பராமரித்தல், மேம்படுத்துதல், நிலப்பட்டாக்கள் வழங்குதல், நிலச்சீர்த்திருத்தம், நகர்ப்புற நில உச்சவரம்பு, நில வருவாய், நகர்ப்புற நில வரி, வேளாண்மை, வருமானவரி வசூல் ஆகிய பணிகள் அனைத்தும் வருவாய்த் துறையின் மூலம் செயல்படுகின்றன.

3 இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் இன்னல்களைத் துடைப்பதில் முன்னின்று செயல்படுவதும், இயற்கைச் சீற்றங்கள் குறித்து முன்னதாக அறிவிப்பதும் வருவாய்த் துறையேயாகும். புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றம் செய்து, அவர்களுக்கு உணவு, உடை மற்றும் உதவிப்பணம் ஆகியவற்றை வருவாய்த் துறை வழங்குகிறது. மேலும், வறட்சிக் காலங்களில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க பல்வேறு நடவடிக்கைகளை இத்துறை எடுத்து வருகிறது.

4. அண்மையில் செய்யப்பட்ட மாவட்டச் சீரமைப்புக்குப் பிறகு தற்போது 17,273 கிராமங்கள், 1,109 உள்வட்டங்கள், 195 வட்டங்கள் மற்றும் 72 வருவாய்க் கோட்டங்கள் அடங்கிய 29 மாவட்டங்கள் உள்ளன. மேலே கூறப்பட்ட பணிகள் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் மற்ற அரசு அலுவலர்களின் துணையுடன் நிறைவேற்றப்படுகின்றன.

**2. நிலவரி**

ஒரு நிலத்தின் இனம், வளம், தரம் ஆகியவைகளைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை வரியே நிலவரி என்பதாகும். உள்ளூர் வரி, உள்ளூர் மேல்வரி, கூடுதல் வரி, கூடுதல் தண்ணீர் வரி என்பதும் நிலவரியுடன் உள்ளடங்கியதாகும். 1-7-1967 முதல் அனைத்து புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் அடிப்படைத் தீர்வை ரத்து செய்யப்பட்டுள்ளது. அதே போல் 1-7-1971 முதல் 5 ஏக்கர் மற்றும் அதற்குக் குறைவாக நஞ்சை நிலங்கள் உள்ள தனி நபருக்கு மொத்த நஞ்சைத் தீர்வையில், புஞ்சை நிலத் தீர்வை அளவுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

2. நிலவரி வசூல் சுமூகமான முறையில் செய்யப்படுகிறது. நிலவரி வசூல் செய்யும்போது எடுக்கப்படும் ஜப்தி நடவடிக்கைகள் 1989 முதல் நிறுத்தி வைக்கப்பட்டன. 1403 ஆம் பசலிக்குப் பிறகு இந்த நடைமுறை ஆய்வு செய்யப்பட்டது. இயற்கை இடர்பாடுகளினால் பாதிக்கபடாமலிருந்து ரூ.10,000/- மற்றும் அதற்கு மேலும் நிலவரி பாக்கி வைத்திருக்கும் பட்டாதாரர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கலாம் எனக் கருதப்பட்டது. 5 ஏக்கருக்கு மேல் புஞ்சை நிலமோ அல்லது 2.5 ஏக்கருக்கு மேல் நஞ்சை நிலமோ வைத்திருக்கும் பட்டாதாரர்களிடம், அவர்கள் நிலத்தில் 50 விழுக்காட்டுக்கு மேல் பயிர் விளைச்சல் இருந்தால், ஒரு பசலி ஆண்டுக்கான நிலுவை நிலவரித் தொகையும் நடப்பு ஆண்டுக்கான நிலவரித் தொகையையும் வசூல் செய்ய டிசம்பர் 1994இல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

3. நிலவரி வசூல் செய்வதில் அந்தந்த பசலிகளில் குறிக்கப்பட்ட குறியீட்டு அளவை எய்தும் வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் பணியை பாராட்டும் வகையில்





சிறப்புப் பணி குறித்து அவர்களின் பணிப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அரசு உத்திரவிட்டுள்ளது. மேலும் வருவாய்த் துறைப் பணியாளர்களால் ஆற்றப்படும் பணிக்காக குறிப்பாக நிலவரி வசூல் சாதனை புரிந்தோருக்கு நற்சான்றிதழ், பாராட்டுப்பத்திரம் போன்றவை, தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்படுகின்றன.

**நிலவரி தள்ளுபடி**

1. பருவகால நிலவரி தள்ளுபடி

ஒரு விவசாயி தனக்கு நிலவரி தள்ளுபடி பெற விரும்பினால் எந்த நிலத்திற்குத் தள்ளுபடி வழங்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பாக எழுத்துமூலமாக, உரிய காலத்தில், சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். பின்னர் பயிராய்வு அலுவலரின் ஆய்வுக் குறிப்பின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட வருவாய் அலுவலரால் நிலவரி தள்ளுபடி அனுமதிக்கப்படும். பருவ நிலை தள்ளுபடியைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரி தள்ளுபடி வழங்கப்படுவதில்லை.

2. சில தவிர்க்க இயலாத சூழ்நிலைகளில் நிலவரி வசூல் நிறுத்தி வைத்தல் மற்றும் நிலவரி தள்ளுபடி வழங்குதல்

சில தவிர்க்க இயலாத சூழ்நிலைகளில், அதாவது பரவலாக நிலவிவரும் வறட்சி, பெருவாரியான நிலங்களில் பயிர் பாதிப்பு ஏற்பட்டால், நிலவரி வசூல் மற்றும் நிலவரித் தீர்வை விதித்தல் ஆகியவற்றிற்கு நிறுத்திவைப்பு அல்லது தள்ளுபடி, அரசால் அனுமதிக்கப்படுகிறது. இந்நேர்வுகளில் நிலவரி பாக்கித் தொகை மற்றும் அரசுக் கடன்கள் ஆகியவை அடுத்து வரும் பசலி ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. பயிர் உற்பத்தி 50% - க்குக் குறைவாக இருந்தால் நிலவரி பாக்கித் தொகை, உள்ளூர் மேல்வரி, உள்ளூர் கூடுதல் மேல்வரி மற்றும் அரசுக் கடன்கள் ஆகியவற்றை வசூலிப்பது ஆகியவை அடுத்து வரும் பசலிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

2. பசலி 1406-ம் ஆண்டில் தமிழ் நாட்டின் தென் பகுதியில் கடுமையான வறட்சி ஏற்பட்ட நேரத்தில் வட கிழக்குப் பருவ

[1998 ஏப்ரல் 21

மழையால் டிசம்பர், 1996இல் வட தமிழ்நாடு மற்றும் கரையோர மாவட்டங்கள் மிகுந்த பாதிப்பிற்குள்ளாயின. அதனால், அம்மாவட்டங்களில் சில பகுதிகளில் பயிர்ச் சேதம் ஏற்பட்டது. விருதுநகர், திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பசலி 1406ஆம் ஆண்டுக்கு பின்வரும் விவரப்படி ரூ.2,27,62,072.44-க்கு (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தேழு லட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து எழுபத்தி இரண்டு மற்றும் நாற்பத்தி நான்கு காசு மட்டும்) நிலவரி முதலியன தள்ளுபடி வழங்கும் செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன:—

| | | |
|---|---|---|
| (1) விருதுநகர் | .. | ரூ.28,77,036.58 |
| (2) திருநெல்வேலி | .. | ரூ.81,01,025.85 |
| (3) சிவகங்கை | .. | ரூ.75,30,347.00 |
| (4) இராமநாதபுரம் | .. | ரூ.42,53,663.01 |
| மொத்தம் | .. | **ரூ.2,27,62,072.44** |

3. தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 1406ஆம் பசலி ஆண்டுக்கு நிலவரி முதலிய தொகை ரூ.14,25,003.39/-க்கு (ரூபாய் பதினான்கு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து மூன்று மற்றும் முப்பத்து ஒன்பது பைசா மட்டும்) தள்ளுபடி செய்து மார்ச் 1998-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

4. கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 1406ஆம் பசலி ஆண்டுக்கு நிலவரி முதலியவற்றை ரூ.87,85,096.27/- (ரூபாய் எண்பத்தேழு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து தொண்ணூற்று ஆறு மற்றும் இருபத்தேழு பைசா மட்டும்) அளவுக்கு பின்வரும் விவரப்படி தள்ளுபடி செய்து மார்ச் 1998-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. கடலூர் | .. | ரூ.85,60,198.00 |
| 2. நாகப்பட்டினம் | .. | ரூ.2,24,898.27 |
| மொத்தம் | .. | **ரூ. 87,85,096.27** |



1998 ஏப்ரல் 21]

5. கடந்த பருவகாலத்திலே பெருமழை பெய்ததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனைக் கருத்தில்கொண்டு அதற்கு ஒரு நிவாரணமாக இந்த ஆண்டுக்கான நிலவரி ரூபாய் 43 கோடியே 33 இலட்சத்தை தமிழ்நாடு முழுவதற்கும் ரத்து செய்யப்படும் எனவும், எற்கெனவே இந்த ஆண்டுக்குரிய நிலவரியைச் செலுத்தியவர்களுக்கு, அவர்கள் செலுத்திய தொகை பற்று வைக்கப்பட்டு, அடுத்த ஆண்டு அவர்கள் செலுத்த வேண்டிய நிலவரிக்காக ஈடுசெய்யப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வவையில் அறிவித்துள்ளார்கள்.

### 3. நில உரிமைப் பதிவேடு

விவசாய நில உடமைதாரர்களுக்குக் கடன் வழங்கும் நிறுவனங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகள், நில உரிமைப்பதிவேட்டின் அடிப்படையில் கடன் வழங்க, அதனைச் சட்டபூர்வமான ஆதார ஆவணமாக்க, 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு நில உரிமைப் பதிவேடுச் சட்டம் வகை செய்கிறது.

2 இத்திட்டம் (1) வேலூர், (2) தஞ்சாவூர், (3) திருச்சிராப்பள்ளி, (4) பெரம்பலூர், (5) கரூர், (6) கோயம்புத்தூர், (7) மதுரை மற்றும் (8) தூத்துக்குடி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. வேலூர் மாவட்டத்தில் மட்டும் நிறுத்திவைக்கப்பட்ட அச்சட்டத்தின் பிரிவுகள் 5,9,15 ஆகியவை 1-3-1996 முதல் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

4. கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கரூர், மதுரை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் அனைத்து நில உரிமைப் பதிவேடுகளும் நிலுவையின்றி வழங்கப்பட்டுள்ளன என தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து உறுதியான அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் இம்மாவட்டங்களிலும் நிறுத்திவைக்கப்பட்டுள்ள இச்சட்டத்தின் பிரிவுகள், 5, 9 மற்றும் 15 ஆகியவை இவ்வாண்டில் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

5. இரண்டாம் கட்டமாக சேலம், நாமக்கல், தருமபுரி, இராமநாதபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்த டிசம்பர் 1997-ல் அரசு

ஆணையிட்டுள்ளது. ஆரம்ப கட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## 4 நிலக்கொள்கை

### நிலமாற்றம்

வருவாய்த் துறை அரசின் அனைத்து நிலங்களுக்கும், அதன் அனைத்துத் துறை மற்றும் அமைப்புகளின் உடைமையிலுள்ள நிலங்களுக்கும் பொறுப்பேற்றிருக்கிறது. மாநில அரசின் வசமுள்ள புறம்போக்கு நிலங்கள் பல்வேறு அரசுத் துறைகளுக்கும் அரசு சார்பு நிறுவனங்களுக்கும், தனியாருக்கும், நிலமாற்றம், உரிமை மாற்றம், குத்தகை மற்றும் ஒப்படை மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள் மிகவும் குறைந்துவிட்டன. ஆனால் அவைகளைக் கோரி வரும் கோரிக்கைகள் மிக அதிகமாக உள்ளன. ஆகவே அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களை வழங்குவதில் கவனமும், எச்சரிக்கையும் தேவைப்படுகிறது.

2. வருவாய் நிலயாணை எண் 23—ன்கீழ் மாநில அரசு நிலங்கள் மற்றும் கட்டடங்கள், மைய அரசுக்கு மாற்றம் செய்யப்படுகின்றன. இரயில்வே துறை, தொலை தொடர்புத் துறை, அஞ்சல் துறை, அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையம் போன்றவற்றிற்கு நிலங்கள் வழங்கப்படும்போது, நிலமாற்றம் செய்யப்படும் ஆண்டின் சந்தை மதிப்பினை, நிலக்கிரயமாக வசூலித்துக் கொண்டு நிலமாற்றம் செய்யப்படுகின்றது.

3. வருவாய் நிலையாணை எண் 23ஏ—ன்படி, மாநில அரசின் துறைகளுக்கு இடையே நிலமாற்றம் செய்யப்படுகின்றது. நிலம், வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும்போது, நிலக்கிரயம் வசூலிக்கப் படுகிறது. அரசுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள், அத்துறையினால் குறிப்பிட்ட பயன்பாட்டிற்கு, முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்றால் அந்நிலங்கள் வருவாய்த் துறையினால் திரும்ப எடுத்துக்கொள்ளபபடும்.

### நில உரிமை மாற்றம்

வருவாய் நிலை ஆணை எண்24-ன்கீழ் உள்ளாட்சி நிறுவனங்கள் அல்லது தனியார் நிறுவனங்கள், பள்ளிகள், பேருந்து நிலையம், சந்தை,





சாலை, மருத்துவமனை, அலுவலகக் கட்டடங்கள் போன்ற பொது நோக்கங்களுக்காக அரசு நிலங்கள் நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அத்தகைய நிறுவனங்களுக்கு, நேர்வுக்கேற்றபடி தகுதியின் அடிப்படையில் நிலக்கிரயத்தை வசூலித்தோ அல்லது நிலக்கிரயமின்றியோ நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது.

2. தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு, குடிசைவாழ் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு நில உரிமை மாற்றம் செய்யப்படும் நிலங்களுக்கு கிரவுண்டு ஒன்றிற்கு ரூ.5,000/-வீதம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் வணிக வளாகங்களுக்காக நில உரிமை மாற்றம் செய்யப்படும் நிலங்களுக்கு முழு சந்தை மதிப்பு வசூலிக்கப்படுகிறது.

## 5. வீட்டுமனை வழங்குதல்

பொருளாதார நிலையில் நலிவுற்றவர்களின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு, பொதுமக்களுக்கு வீட்டுவசதி அளிக்கும் வகையில் வீடில்லாதவர்களுக்கு நகர்ப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் வருவாய் நிலை ஆணை எண்21-ன்கீழ் உள்ள விதிகளின்படி வீட்டுமனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2. இத்திட்டத்தின்கீழ் ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்குக் குறைவாக இருந்தால், அத்தகைய நபர்கள் வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளவர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள், போரில் வீரமரணம் அடைந்த மற்றும் ஊனமுற்ற இராணுவ வீரர்களின் குடும்பங்கள், முன்னாள் படைவீரர்கள், கொத்தடிமைச் சட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியோர் முதலியவர்களுக்கு முன்னுரிமையுடன் வீட்டுமனை ஒப்படை வழங்கப்பட்டு வருகிறது. பெண்கள் முன்னேற்றம் மற்றும் நலத்தை ஊக்குவிக்கும் வகையில் தற்போது இவ்வொப்படைகள் மனைவி/ பெண்கள் பெயரில்தான் செய்யப்படுகின்றன.

3. மேலும் ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் குடிசை மற்றும் வீடுகள் மூலம் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் வரன்முறைப்படுத்தப்படுகின்றன. வீட்டுமனை பெற்ற ஒப்படைதாரர்கள்

தங்கள் நிலத்தினை தேசிய வங்கிகளில் அடமானம் வைத்து, வீடு கட்டுவதற்குத் தேவையான பணத்தைக் கடனாகப் பெறுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. வீட்டுமனை ஒப்படை வழங்கும் கொள்கையானது ஒரு தொடர் நடவடிக்கையாகும்.

4. மேலும், நீர்நிலை, மேய்க்கால், மந்தைவெளி, மயானம் போன்ற ஆட்சேபகரமான அரசுப் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களையும் நேரில் ஆய்வுசெய்து. அந்நிலங்கள் சமுதாய நலன்களுக்குத் தேவைப்படாத பட்சத்தில், அந்த ஆக்கிரமணங்களை முறைப்படுத்துவதற்குத் துரித நடவடிக்கை எடுப்பதற்காகச் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

5. ஒவ்வொரு ஆண்டும் இலவச வீட்டுமனை ஒப்படை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டிற்கு ஒரு லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில், 1,10,343 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கபட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டிற்கு 75,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில், பிப்ரவரி 1998 வரை 2,03,124 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**6. விவசாய நிலம் ஒப்படை செய்தல்**

பயிரிடத்தக்க தரிசு நிலங்கள் தகுதி வாய்ந்த நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகின்றன. ஒருவரது குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 12,000/-மும், அதற்குக் குறைவாகவும் இருப்பின் அவர் குடும்பத்தில் எவ்வளவு நபர்கள் இருப்பினும் அவர் “ஏழை” எனக் கருதப்படுகிறார்.

2. தகுதியுள்ள நபர்களுக்கு, கீழ்க்கண்ட வரிசைப்படி ஒப்படை வழங்கப்படுகிறது:-

(அ) மரணம் அடைந்த எல்லைப்புற பாதுகாப்புப் படையினர் மற்றும் உள்நாட்டு படை வீரர்களின் குடும்பத்தினர்.

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினர்



(இ) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்

(ஈ) முன்னாள் இராணுவத்தினர்

(உ) இராணுவத்தில் பணிபுரிவோர்

(ஊ) ஆதரவற்ற மற்றும் கைம்பெண்கள்.

(எ) நிலமற்ற ஏழைகள்.

3. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒப்படை பெறும் நபர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும், ஒப்படை பரப்பும் சேர்த்து 3 ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் என்ற வரம்புக்கு உட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு நிலங்களின் பரப்பு மிகவும் குறைவாக இருப்பதாலும், அந்நிலங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என்பதாலும் இந்த உயரளவு அம்மாவட்டத்தில் 1 ஏக்கர் புன்செய் அல்லது 0.50 ஏக்கர் நன்செய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4. அரசு நிலங்கள் ஒப்படை செய்யப்படும்போது சில நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. அவை:— ஒப்படை பெற்ற 3 ஆண்டுகளுக்குள் அந்நிலத்தில் பயிர் செய்ய வேண்டும். பத்தாண்டு காலத்திற்கு அந்தநிலத்தை விற்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ கூடாது; பத்து ஆண்டுகளுக்குப் பின்னரும் நிலங்களை விற்பனை செய்ய முன்அனுமதி பெற வேண்டும். இருப்பினும், பயிரிடுவதற்குக் கடன் வாங்கும்பொருட்டு நிலங்களை, அரசு உடைமையாக்கப்பட்ட தேசிய வங்கிகளில் அடமானம் வைக்கலாம். அந்நிலத்தை ஒப்படைதாரர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் நேரடியாகவோ அல்லது கூலியாட்களைக் கொண்டோதான் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தில் பயிரிடக்கூடாது. ஒப்படை பெறும் ஒவ்வொரு நபரும் ஓர் ஏக்கருக்கு 10 பலன் தரும் மரங்கள் நடவேண்டும். ஒப்படை நிபந்தனைகள் மீறப்பட்டால், எவ்வித இழப்பீடும் கொடுக்காமல் நிலத்தை அரசு மீண்டும் எடுத்துக்கொள்ளும்.

5. பொதுத் தேவைகளுக்கு வேண்டிய சமுதாய நிலங்கள் யாவும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் ஏரி, குளங்கள், கால்வாய், ஓடை போன்ற அனைத்து நீர்வழிப் புறம்போக்குகளையும், மந்தைவெளி மேய்க்கால் மற்றும் மயானப் புறம்போக்குகளையும் ஒப்படை செய்வதற்கு

அரசு தடை விதித்துள்ளது. இருப்பினும், ஆட்சேபனையற்ற மற்றும் பொதுக் காரியங்களுக்கு பயன்படுத்தப்படாத தடை செய்யப்பட்ட இனங்களில் உள்ள ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்துவதற்குப் பரிந்துரை செய்வதற்காக உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

6. இயற்கைச் சூழல், சமன்பாட்டினை பாதுகாப்பதற்கும், நில அரிப்பினைத் தடுக்கவும் அனைத்து மலைப் பிரதேசங்களிலும் வேளாண்மைக்கென நில ஒப்படை செய்வதற்கும் அரசு தடை விதித்துள்ளது. இருப்பினும், மலைப்பிரதேசங்களில் ஒப்படை செய்வதற்கான தடையை நீக்கவும், ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்தவும், நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

7. சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற மாநகரங்களைச் சுற்றிலும் நிலத்தேவை அதிகரித்துக்கொண்டே போவதால் இந்நகரங்களைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் ஒப்படை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

## 7. ஆட்சேபனைக்குரிய ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்கள் பரப்பில் குறைந்து கொண்டே வருகிறது. இருக்கும் நிலங்கள் நிலமில்லா தகுதியுள்ள ஏழைகளுக்கு ஒப்படை செய்யவும், திட்டப் பணிகளுக்கும், பொது நன்மைக்கும் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இதனடிப்படையில் கொள்கையளவில் அரசு நிலங்களின் மீது எந்தவித ஆக்கிரமிப்பும் தடுக்கப்பட வேண்டும். இருப்பினும், பொது நன்மைக்கு என ஒதுக்கி வைக்கப்படாத தரிசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை ஆட்சேபகரமற்றவை எனக் கருதப்படுகின்றன. அவை ஆக்கிரமிப்பாளரின் பொருளாதார நிலை மற்றும் ஆக்கிரமிப்புத் தன்மை, அவர் வசிக்கும் இடம் ஆகியவற்றைப் பொறுத்து முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் நெறிமுறைப்படுத்த தகுதியுடையவை ஆகின்றன.

2. அதே சமயம், நீர்வழிப் புறம்போக்குகள், மந்தைவெளி மற்றும் மேய்க்கால் நிலங்கள், கோவில் நிலங்கள், களம் போன்றவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபகரமானவை எனக் கருதப்பட்டு, அவை உடனே அகற்றப்பட வேண்டும். வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களும், நகராட்சி, மாநகராட்சி அலுவலர்களும் முறையற்ற ஆக்கிரமிப்புகள் செய்தோரை



1905ஆம் ஆண்டைய தமிழ்நாடு நில ஆக்கிரமணச் சட்டப்படி முன் அறிவிப்பு அளித்த பின் அகற்ற அதிகாரம் பெற்றுள்ளனர்.

3. அரசு நிலங்களில் உள்ள முறையற்ற ஆக்கிரமணங்களை முறையாக அகற்றும் நடவடிக்கைகள் செயலாக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

4. அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணம் அகற்றும் நடவடிக்கையை எதிர்த்து ஆக்கிரமணதாரர்கள் உரிமையியல் நீதிமன்றங்களை அணுகி தடை உத்திரவை பெறுவதைத் தடுக்க, நில ஆக்கிரமணச் சட்டம் 1905-க்கு ஒரு திருத்தச் சட்டம் (சட்டம் 1/96) கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்படி நில ஆக்கிரமிப்பு அகற்றல் சட்டத்தின் நடவடிக்கைகளை தடை செய்யும் அதிகாரம் உரிமையியல் நீதிமன்றங்களிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. இதனால் மாவட்ட ஆட்சியர்கள் அனைத்து முக்கிய நேர்வுகளிலும் ஆக்கிரமணங்களை அகற்ற இயலும். ஆயினும் நீர்நிலைப் புறம்போக்குகளில் வீடு கட்டி ஆக்கிரமித்து உள்ள ஆதிதிராவிடர்களுக்கு நில ஆர்ஜிதம் மூலம் வேறு நிலங்களைத் தேர்ந்தெடுத்து, தகுதியான வீட்டுமனைகள் வழங்கும்வரை அவர்களை அகற்றக் கூடாதென அரசு ஆணையிட்டுள்ளது.

5. ஆட்சேபனையுள்ள புறம்போக்கு இனங்களில் நீண்ட காலமாக இருந்து வரும் ஆக்கிரமணங்களை அகற்றுதல் அல்லது வரன்முறைப்படுத்தல் தொடர்பாக முடிவெடுக்க அரசு ஒரு குழுவினை நியமித்துள்ளது. இதற்குச் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அந்தந்த மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது கூடுதல் மாவட்டாட்சியர் இக்குழுவிற்கு உறுப்பினர்-செயலராக உள்ளனர்.

6. மாவட்டாட்சியர் இக்குழுவின் பரிசீலனைக்கென ஆட்சேபனையுள்ள ஆக்கிரமிப்புகளின் பட்டியலைத் தயாரித்துள்ளார். மேலும் ஏழை மக்களின் ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களைக் கண்டுபிடித்து, அவற்றைப் பார்வையிட்டு முடிவெடுக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

## 8. நிலச் சீர்திருத்தம்

வேளாண்மை நிலங்கள் சிலரது வசம் குவிந்து அதன்மூலம் வேளாண்மை நில உடைமைகளில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளைப்

போக்க உபரியாக உள்ள அந்நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க 1961ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம், (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது.

2. இந்தச் சட்டம் 6-4-1960 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டது. 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டப்படி 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு உச்சவரம்பு 30 தர ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஒரு குடும்பத்தில் 5 நபர்களுக்கு மேல் இருந்தால், ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் 5 தர ஏக்கர் அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் ஒட்டுமொத்த உச்சவரம்பு 60 தர ஏக்கர் என நிர்ணயிக்கப் பட்டது. 6-4-1960 அன்று குடும்பத்தின் பெண் உறுப்பினருக்கென்று சொந்த நிலம் இருந்திருப்பின், குடும்பத் தகுதி உடமை நீங்கலாக சீதனமாக 10 தர ஏக்கர் வரை வைத்திருக்க அவருக்கு உரிமையுண்டு.

3. அதிக நபர்கள் பயனடைய கூடுதல் உபரி நிலம் பெறும் நோக்கத்துடன் இவ்வரசு முன்பு 1970ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்தபோது நிலச்சீர்திருத்தச் சட்டம் 58/61-க்கு ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வந்தது. (தமிழ்நாடு சட்டம் 17/70). இதன்படி 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பம் வைத்திருக்கக்கூடிய நில உச்சவரம்பு 30 தர ஏக்கரிலிருந்து 15 தர ஏக்கராகக் குறைக்கப்பட்டது. முதன்மைச் சட்டத்தில் கரும்பு மற்றும் மேய்ச்சல் நிலங்களுக்கு விலக்களிக்கப்பட்டிருந்தது. சட்டத்தின் நோக்கங்களை முற்றிலும் நிறைவேற்ற, தமிழ்நாடு சட்டம் 41/71-ன்படி, மேற்கண்ட நிலங்களுக்கு அளிக்கப்பட்ட விலக்கும் 15-1-1972 முதல் திரும்பப் பெறப்பட்டது.

4. மேலும் முதன்மைச் சட்டத்தில் (58/61) ஒரு குடும்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒட்டுமொத்த உச்சவரம்பான 60 தர ஏக்கர் அளவை, 40 தர ஏக்கராக இந்த அரசு நிர்ணயித்தது. இதற்காக தமிழ்நாடு சட்டம் 20/72 என்ற இரண்டாவது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1-3-1972 முதல் நடைமுறைக்கு வந்தது.

5. பின்பு தமிழ்நாடு நிலச சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) நான்காவது திருத்தச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 39/1972) குடும்பத்தின் ஒட்டுமொத்த உச்சவரம்பு 40 தர ஏக்கரிலிருந்து 30 தர ஏக்கராக மேலும் குறைக்கப்பட்டு 1-3-1972 முதல் இச்சட்டம் அமலுக்கு வந்தது. அதாவது இன்றைய நிலையில் 5 நபர்கள் கொண்ட எந்தவொரு



குடும்பமும் வைத்திருக்கக்கூடிய நிலம் 15 தர ஏக்கர் எனவும், 5 நபருக்கு மேல் இருந்தால் ஒவ்வொரு நபருக்கும் 5 தர ஏக்கர் எனவும் அதிகபட்சமாக ஒரு குடும்பம் 30 தர ஏக்கர் விவசாய நிலம் வைத்துக் கொள்ளலாம் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதன்மைச் சட்டத்தில் எல்லா அறக்கட்டளை நிறுவனங்களும் கவரப்படவில்லை. 1-3-1972-ல் இச்சட்டத்திருத்தத்தின்படி எல்லா அறக்கட்டளை நிறுவனங்களின் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு அறக்கட்டளை நிறுவனங்களின் தன்மையைப் பொறுத்து உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது.

6. உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, நிலமற்ற ஏழைகளுக்கு உயரளவாக 3 ஏக்கர் புன்செய் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலம் என்ற அளவில், 1965ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (மிகை நில ஒதுக்கீடு) விதிகளின்கீழ், தகுதியுடையோருக்கு ஒப்படை செய்யப்படுகின்றது. நில உச்சவரம்பு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதிகப்படியான உபரி நிலம் கிடைத்ததையும் அதிகப்படியான நபர்களுக்கு ஒப்படை செய்ததையும் கீழ்க்காணும் அட்டவணை காட்டுகிறது:—

| ஆண்டு | உபரி அறிவிக்கப்பட்ட நிலம் (ஏக்கரில்) | ஒப்படை செய்யப்பட்ட நிலம் (ஏக்கரில்) | பயனடைந்த நபர்கள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1961-70 | 19,028 | 14,074 | 7,978 |
| 1971-75 | 60,515 | 43,090 | 28,920 |
| 1976-80 | 47,617 | 27,640 | 22,324 |
| 1981-90 | 50,834 | 59,647 | 53,494 |
| 1991-97 | 18,734 | 25,265 | 21,916 |
| 1998(31-1-98 வரை) | .. | 86 | 56 |
| | **1,96,728** | **1,69,802** | **1,34,688** |

**நிதியுதவித் திட்டம்**

தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட மிகை நில ஒப்படை பெற்றவருக்கு, நிதியுதவி அளிக்கும் திட்டத்தை மைய அரசு ஏற்படுத்தியுள்ளது. மைய' அரசு நிதி உதவித் திட்டத்தின்படி நிதி

உதவியாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 2,500/- வீதம் வழங்கப்படுகின்றது. 1996-97 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்திற்கான செலவினை மத்திய அரசும், மாநில அரசும் சரிசமமாகப் பகிர்ந்துகொண்டன. இத்திட்டத்தின் கீழ் 30 விழுக்காடு சிறப்புக் கூறாகத் தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு நிதி உதவி வழங்குவதற்குத் தனியாக வகை செய்யப்பட்டுள்ளது. மாநில அரசு 11-12-1997 நாளிட்ட வருவாய்த்துறையின் 1181 எண்ணுள்ள நிலை ஆணையின்படி, 1997-98ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டச் செலவினை மாநில அரசே முழுமையாக ஏற்று செயல்படுத்தி வருகிறது.

**குடிவாரச் சட்டங்கள்**

1. 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1955) - ன்படி எந்த ஒரு பயிரிடும் குத்தகைதாரரும், குத்தகைப் பணத்தைச் சரிவர செலுத்தாத நிலையிலோ, நிலத்திற்கோ அல்லது அதிலுள்ள பயிர்களுக்கோ சேதம் விளைவிக்கின்ற செயல்களைச் செய்தாலோ, நிலத்தைச் சாகுபடி செய்யாமல் இருந்தாலோ, விவசாயத்தைத் தவிர்த்த மற்ற காரியங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தினாலோ, நில உரிமையாளருக்கு நிலத்தின் உரிமையை மறுக்கும் வகையில் செயல்புரிந்தாலோ தவிர, பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட இயலாது. ஆயுதப் படையினரைத் தவிர, வேறு எந்த நில உடைமையாளரும், மேலே குறிப்பிட்ட காரணங்களின்றி, மற்ற காரணங்களுக்காகக் குத்தகைதாரரிடமிருந்து தங்களுடைய நிலத்தை மீளப் பெற முடியாது.

2. இந்த மாநிலத்தில் உள்ள குறிப்பிட்ட சில பகுதிகள், அண்மையில் சில ஆண்டுகளாகவே வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு வந்துள்ளன. இதனால் விவசாயிகள் பெரும்பாலும் தங்கள் மகசூல் இழக்க நேரிட்டு குத்தகைத் தொகையினைச் செலுத்துவதற்கு இயலாமல் உள்ளனர். எனவே, குத்தகைத் தொகை செலுத்துவதற்குத் தவறிய காரணத்திற்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் துயர நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நிலக்கிழார்களுக்கு செலுத்தத்தக்கதாகவுள்ள குத்தகைத் தொகையினைப் பொறுத்தமட்டில் அதனைச் செலுத்தாமல் நிலுவையில் வைத்திருக்கின்ற பயிரிடு குத்தகைதாரர்களைப் பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்க, 1997 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதிலிருந்து பாதுகாப்பு அளித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம்



20/1997) என்ற சட்டம் இவ்வரசால் கொண்டு வரப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள், 1996 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் அன்றோ, அல்லது அதற்கு முன்னர், நிலக்கிழாருக்குக் கொடுக்கப்பட வேண்டியதாகவிருந்து, இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளான, அதாவது 25-4-1997-ல் செலுத்தப்படாமல் சேர்ந்துள்ள குத்தகைத் தொகை நிலுவை முழுவதையும் அல்லது 1997ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளில் முடிவடைகின்ற பசலி ஆண்டிற்குச் செலுத்தத்தக்க குத்தகைத் தொகைகளை அல்லது அவை இரண்டையும் வசூல் செய்வதனை 30-6-1999 வரையிலான காலஅளவிற்குத் தள்ளி வைப்பதன் மூலம், ஓரளவிற்கு நிவாரணம் வழங்க இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தள்ளி வைக்கப்பட்ட கால அளவின்போது மேற்சொன்ன குத்தகைத் தொகையினைச் செலுத்தாததற்காக அந்தக் குத்தகையாளர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் இருக்கவும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இச் சட்டம் வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்படாத வேலூர், தேனி, நீலகிரி, ஈரோடு, நாமக்கல் மற்றும் தர்மபுரி தவிர்த்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பொருந்தும்.

3. 1956 ஆம் ஆண்டைய தமிழ் நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயக் குத்தகை செலுத்தல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 24/56) குத்தகைதாரர்களால் ஆண்டொன்றுக்கு மொத்த விளைச்சலில் 25 விழுக்காட்டினை தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களுக்குக் குத்தகைத் தொகையாக அளிக்க வழிவகை செய்கின்றது. அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் நிலத்தின் மீதான இதர இனங்களை நிலத்தின் உரிமையாளர்கள் செலுத்துவர். ஆனால், விவசாயத்திற்கான செலவு முழுவதையும் பயிரிடு குத்தகைதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்தல்) சட்டம், (தமிழ்நாடு சட்டம் 57/61) பொதுப் பொறுப்புக் கழகங்கள் வைத்துள்ள விவசாய நிலங்களின் நிருவாகத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளன. எந்த ஒரு பொதுப் பொறுப்புக் கழகமும், தன்னுடைய பண்ணை சொந்தச் சாகுபடிக்கு 20 தர ஏக்கருக்கு மேல்

நிலத்தினை வைத்துக் கொள்ளக்கூடாது. இதற்கு மேலுள்ள நிலத்தினை உண்மையான பயிரிடும் குத்தகைதாரர்களுக்குக் குத்தகைக்கு விட வேண்டும்.

5. 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1969) மூலம் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்குப் பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தினை நீக்கிவிட்டு, குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தினை மாநிலம் முழுவதும் அமல் செய்வது குறித்த செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

6. 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 10/1969) தமிழ்நாட்டில் நிலச் சொந்தக்காரர்கள் அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களிடம் உள்ள விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களது பெயர்களைப் பதிவு செய்ய இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச் சட்டத்தின்படி, வட்டாட்சியர் பதிவு அலுவலராவார். அவர், பயிரிடும் குத்தகைதாரர்களின் நிலங்களைப் பாதுகாப்பதற்காகக் குத்தகை உரிமைப் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும். பதிவு அலுவலர் தன்னிச்சை நடவடிக்கை எடுத்து, குத்தகைதாரர்களைப் பதிவு செய்ய சட்டப்பிரிவு 4-ன்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 5(ஏ)-ன்படி வட்டாட்சியர்களுக்கு உதவி புரிவதற்காக, வட்டார அளவில் அமைக்கப்படும் அலுவல் சார்பற்ற ஆலோசனைக் குழுவில் நிலமற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர் ஒருவரும், பயிரிடும் குத்தகைதாரர் ஒருவரும் மற்றும் சமூக நல ஊழியர்கள் மூவரும் உறுப்பினர்களாக இருப்பர்.

7. 1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/71) குடியிருப்புகளில் அனுபோகதாரர்களுக்கு உடைமை உரிமை அளிக்கின்றது. அதன்படி, 19-6-1971 அன்று குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் குடியிருப்பு மனையை



அனுபோகத்தில் வைத்திருந்தவர், உரிமையாளராக இருப்பர். இக்குடியிருப்பு, வில்லங்கம் ஏதுமின்றி அவரிடமே நிலை பெற்று இருக்கும்.

8. தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம், 1976 (குடியரசுத் தலைவரின் சட்டம் 38/76)-ன்படி, குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் 1-7-1975 அன்று தமிழ்நாட்டில் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள கிராமக் கைவினைஞர்களுக்கு உடைமை உரிமை வழங்க இச்சட்டம் வகை செய்கின்றது.

9. இந்த அரசால் இயற்றப்பட்ட தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த திருத்தச் சட்டம், 1990 (தமிழ்நாடு சட்டம் 39/90) மூலம், குடியிருப்பு அனுபோகத்தில் வைத்துள்ள குடியிருப்புதாரர்களுக்கு 1-4-1990 வரை காலக்கெடுக்களை நீட்டி, 1-4-1990 அன்று குடியிருப்பு அனுபோகத்தில் வைத்துள்ள குடியிருப்புதாரர்களுக்குக் குடியிருப்பு மீதான உரிமையைப் பெற்று பயன் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

**நிலத் தீர்ப்பாயங்கள்**

நிலச் சீர்திருத்த வழக்குகளில் துரிதமாக முடிவு காண்பதற்காக, மாவட்ட வருவாய் அலுவலர்களின் தலைமையில் இரு நிலத் தீர்ப்பாயங்கள் 1979 ஆம் ஆண்டு முதல் மதுரை மற்றும் தஞ்சாவூரில் அமைக்கப் பெற்றன. வழக்கின்மையால், 1989 ஆம் ஆண்டு முதல் மதுரை நிலத் தீர்ப்பாயம் கலைக்கப்பட்டு தஞ்சை தீர்ப்பாயத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது.

தீர்ப்பாயம் தோன்றிய 1979-ம் ஆண்டு முதல் நாளது வரையில் 4537 வழக்குகள் இத் தீர்ப்பாயங்களில் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில் 4501 வழக்குகள் முடிவுற்று தற்போது 36 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

நிருவாக காரணங்களுக்காக தஞ்சையில் உள்ள நிலத் தீர்ப்பாயம் சென்னைக்கு மாற்ற ஆணையிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல் முறையீட்டு தீர்ப்பாயம்**

1-11-1990 அன்று முதல், தமிழ்நாடு நிலச் சீர்திருத்தத் தனி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள நிலச் சீர்திருத்தம் சம்பந்தமான நீதிப்பேராணை அதிகார வரம்பு நீக்கப்பட்டு நிலுவையிலுள்ள நிலச் சீர்திருத்த நீதிப்பேராணை மற்றும் உரிமையியல் சீராய்வு மனுக்கள் இத்தனி மேல் முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

தீர்ப்பாயத்தில் முடிக்கப்பெற்ற வழக்குகளின் விவரங்கள் பின்வருமாறு:

| | வழக்குகள் | பல்வகை மனுக்கள் |
|---|---|---|
| 1. உயர்நீதிமன்றத்தில் இருந்து மாற்றப்பட்ட மொத்த வழக்குகள் | 893 | 693 |
| 2. தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 633 | 1921 |
| மொத்தம் | 1526 | 2614 |
| (அ) மாற்றம் செய்யப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றவை | 863 | 649 |
| (ஆ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றவை (28-2-1998 முடிய) | 541 | 1828 |
| மொத்தம் | 1404 | 2477 |
| 28-2-1998 அன்று நிலுவை | 122 | 137 |

உச்சநீதிமன்றம் சமீபத்தில் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முடிவுகள் உயர்நீதிமன்ற அமர்வு மன்றத்தின் நீதிப்பேராணை வரம்புக்குட்பட்டவை என ஆணையிட்டுள்ளது.

**வருவாய் நீதிமன்றங்கள்:**

தற்போது மாநிலம் முழுவதும் 6 வருவாய் நீதிமன்றங்கள் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய



இடங்களில் தனித் துணை ஆட்சியர்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன. வருவாய் நீதிமன்ற தனித் துணை ஆட்சியர்கள், 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணச் சட்டத்தின்கீழான வட்டாட்சியர்களின் ஆணைக்கு எதிராகத் தொடரப்படும் வழக்கு மனுக்களை விசாரணை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மேலும், தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955, தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (நியாய வாரம் வழங்குதல்) சட்டம், 1956, தமிழ்நாடு பொது பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குப்படுத்துதல்) சட்டம் 1961, தமிழ்நாடு விவசாய நிலங்கள் (குத்தகை உரிமைப் பதிவுச் சட்டம்) 1969, தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாத்தல்) சட்டம், 1961 மற்றும் தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் தமிழ்நாடு கைவினைஞர்கள் (குடியிருப்பு உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1976 ஆகிய சட்டங்களின்கீழ் தொடுக்கப்படும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்து வருகின்றனர். அன்றாடப் பணிகளின் பொருட்டு வருவாய் நீதிமன்ற தனித் துணை ஆட்சியர்கள் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட இடங்களில் வழக்குகளை விசாரிக்க, நீதிமன்றங்களை நடத்துவதற்காகப் பெருவாரியான வட்டங்கள் மற்றும் மாவட்டங்களுக்குப் பணியிடங்களை ஆய்வு செய்வதற்காகப் பரவலாகப் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

**9. இடைத்தரகர்களை ஒழித்தலும் ரயத்துவாரியாக மாற்றலும்**

சுதந்திரம் அடைந்த பின்னர், பெருமளவில் வேளாண்மை சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், அரசுக்கும் ரயத்துக்களுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை ஒழித்துப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. கீழ்க்கண்ட சட்டங்களின்கீழ் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன:

(அ) தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1948 (தமிழ்நாடு சட்டம் 26/1948).

(ஆ) தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 27/1963).

(இ) தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963).

கீழ்க்கண்ட சட்டங்களின்கீழ் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன:—

(ஈ) தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963).

(உ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969).

(ஊ) தமிழ்நாடு வரியற்ற நிலங்களின்மீது ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்டம், 1973 (தமிழ்நாடு சட்டம் 31/1973).

2. ஜென்மம் நில உடைமைதாரர்கள் சிலர் அவர்கள் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் பொருந்தாது என சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த நீதிப் பேராணைகள் தள்ளுபடி செய்யப்பட்டன. அவர்களில் சிலர் அதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் அளித்துள்ளனர். உச்சநீதிமன்றம் மேல்முறையீடு மனுதாரர்களின் நிலங்களுக்குத் தடையாணை வழங்கியுள்ளது. அரசின் மேலாண்மை ஆளுமையை நிலைநிறுத்த வேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள சிவில் வழக்குகளை விரைவில் முடிக்கக் கோரி பொது மனு ஒன்றும் உச்சநீதிமன்றத்தில் அரசால் தாக்கல் செய்யப்பட்டது. அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி கூடலூர் ஜென்மம் ஒழிப்புச் சட்டம் செல்லத்தக்கதா என்ற வினா எழுப்பப்பட்டுள்ளதால், இதுகுறித்து விசாரிக்க உச்சநீதிமன்ற அதிக நீதிபதிகள் உள்ளடக்கிய பெஞ்சுக்கு அனுப்ப உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. நீதிமன்றத் தீர்ப்பை விரைவில் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3 நில உடைமைதாரர்களுக்கு நட்ட ஈட்டுத் தொகையும் தர்ம சத்திரங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு தஸ்திக் கொடையும் வழங்க பல்வேறு உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் வருவாய்த் துறையால் நிறுவனங்களுக்கு தஸ்திக் கொடை வழங்கப்படும்பொழுது நட்ட ஈட்டுத் தொகை ஒரே தவணையில் நில உடைமைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.





**10. நகர்ப்புற நில உச்சவரம்பு**

மாநிலத்தில் உள்ள முக்கிய நகரங்களில் ஒரு சிலரிடம் நகர்ப்புற நிலங்கள் குவிந்து இருப்பதைப் பொது நலத்தைக் கருத்திற் கொண்டு தடுக்கவும், நகர்ப்புற நிலங்களை ஒரு சிலர் விற்று ஆதாயம் தேடும் முயற்சியைத் தடுக்கவும், மிகை வெற்று நிலங்களைச் சமமாகப் பகிர்ந்தளிக்கவும், நகரப் பகுதிகளில் உள்ள காலி நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும் நோக்கத்தோடும், 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், (குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டின் 24-வது சட்டம்) இயற்றப்பட்டது. பின்னர், தனி நபர்கள் மற்றும் தொழிற் கூடங்களுக்குச் சில சலுகைகள் வழங்கும் வகையில் இச்சட்டம், 1978 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது.

2. மேற்படி திருத்திய சட்டத்தின் மூன்று சிறப்புக் கூறுகள் பின்வருமாறு:-

(1) தனிப்பட்ட நபர், ஒரு குடும்பம், ஒரு நிறுவனம், ஒரு குழுமம் அல்லது ஒரு கழகம் அல்லது தனிப்பட்டவர்கள் சேர்ந்து ஒரு கூட்டமைப்பு வைத்திருக்கும் வெற்று நிலத்தின் மீது உச்சவரம்பு விதித்தல்.

(2) எதிர்காலத்தில் கட்டப்படும் வீடுகளின் தரைப் பரப்பிற்கு உச்சவரம்பு விதித்தல்.

(3) நகர்ப்புற நில சொத்துக்களின் மாற்றத்தை முறைப்படுத்துதல்.

3. இச்சட்டம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி நகரக் கூட்டுப் பகுதிகளில் தற்போது நடைமுறையில் உள்ளது.

4. 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்துடன், 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப் படுத்துதல்) சட்டத்தினை ஒருங்கே அமைக்கும் நோக்கத்தோடு, சென்னை நகர்ப்புறக் கூட்டுப் பகுதிகளில் உள்ள 162 கிராமங்களுக்கு 9-8-1995 முதல் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது.

[1998 ஏப்ரல் 21

5. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் ஒவ்வொரு நகர்ப்புறக் கூட்டுப் பகுதியிலும் தனி நபர். ஒரு குடும்பம் மற்றும் தொழில் நிறுவனம் வைத்துக் கொள்ளக்கூடிய நில உச்சவரம்பின் விவரம் பின்வருமாறு:—

| நகரக் கூட்டுப்பகுதி | வகைப்பாடு | தனி நபர் | ஒரு குடும்பம் | தொழிற் நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | (சதுர | மீட்டரில்) |
| சென்னை | I | 500 | 2000 | 2000 |
| மதுரை<br>கோயம்புத்தூர்<br>திருச்சிராப்பள்ளி<br>சேலம் | II | 1500 | 3000 | 3000 |
| திருநெல்வேலி | III | 2000 | 4000 | 4000 |

6. இச்சட்டத்தின் விதிமுறைகள், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்குச் சார்ந்த நிலங்களுக்கும், அரசுத் துறை மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள், அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வீட்டுவசதிக் கழகங்கள் மற்றும் அறக்கட்டளை நிறுவனங்கள் வைத்திருக்கும் நிலங்களுக்குப் பொருந்தாது.

7. உச்சவரம்பு வரையறைக்கு அதிகமாக ஒருவர் வெற்று நிலம் வைத்திருந்தால், அதற்கு விலக்களிக்க விண்ணப்பிக்கலாம். அத்தகைய மிகைவெற்று நிலங்களைப் பயன்படுத்தும் நோக்கங்கள் மற்றும் ஒவ்வொரு நோர்விற்குத் தேவையான விவரங்களையும் சூழ்நிலைக்குத் தொடர்பான பிற கூறுகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டும், மாநில அரசு, நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம். பிரிவு 21 (1) (ஏ)-ன்கீழ் விலக்கு அளிக்கலாம். உச்சவரம்பு வரையறைக்கு அதிகமாகக் காலியிடம் வைத்திருக்கும் ஒரு நபர் மீது இச்சட்டத்தின் விதிமுறைகள் அவருக்கு மிகக் கடுமையான இடர்பாட்டை விளைவிக்குமானால், மாநில அரசு, அவருக்கு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம், பிரிவு 21(1)(பி)-ன் கீழ் காரணங்களை விளக்கி, விலக்களிக்கலாம்.



1998 ஏப்ரல் 21]

8. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை, சட்டப்பிரிவு 24 மற்றும் 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) விதிகளில் விதி 23-ன்கீழும், ஏதேனும் ஒரு தொழிற்சாலை, தொழிலாளர்களுக்கு, மாநில அரசால் ஏற்பளிக்கக்கூடிய குடியிருப்பு வகை, இடவசதி செய்வதற்காக அல்லது தொழில் நோக்கத்திற்காகவோ, ஒதுக்கீடு செய்ய, மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது. மாநில அரசினால், காலி நிலங்கள் கீழ்க்கண்ட முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது:—

1. மாநில அரசுத் துறைகள்
2. உள்ளாட்சி மன்றங்கள், மாநகராட்சி மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொது நிறுவனங்கள்
3. மத்திய அரசுத் துறைகள்
4. மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசு பொது நிறுவனங்கள்
5. வீட்டு வசதிக் கழகங்கள்/கூட்டமைப்புகள்
6. தொழில் நிறுவனங்கள்
7. தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்கு
8. நிறுவனங்கள்
9. தனி நபர்கள்

9. இச்சட்டத்தின்கீழ் 31-12-1997 வரை 1793.19.41 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது. அதில் 75.00.00 ஹெக்டேர் பரப்பளவு நிலம் நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளது. 216.00.00 ஹெக்டேர் பரப்பளவு நிலம் ஆக்கிரமிப்பில் உள்ளது. 327.59.77 ஹெக்டேர் நிலங்கள் அரசுத் துறை, நிறுவனங்கள் மற்றும் இதர நபர்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. 1174.59.64 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீட்டிற்காக உள்ளது.

10. நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளை விரைவாக முடிக்கவும், இவ்வழக்கில் தொடர்புள்ள மக்களுக்கு விரைவில் தீர்ப்பு கிடைக்கவும், தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978-ன்கீழ் வரும் வழக்குகளை தமிழ்நாடு நிலச்சீர்த்திருத்தச் சிறப்பு மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்திடம் ஒப்படைக்கலாம் என்று அரசு முடிவு செய்தது. இதற்கான சட்டம் தற்போது இயற்றப்பட்டுள்ளது. நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகள் தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சிறப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு விரைவில் மாற்றப்படும்.

11. சொந்தமாக நிலம் வைத்திருக்கும் அல்லது வாங்கியிருக்கும் தொழில் நிறுவனங்கள் அவற்றின்கீழ் உள்ள தொழிற்சாலைகள் கால தாமதமின்றி தொடங்குவதற்கு ஏதுவாக இச்சட்டத்தின்கீழ் விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு மிக விரைவாக விதிவிலக்கு அளிப்பதற்கு அரசு சிறப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**11. நகர்ப்புற நிலவரி**

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் முதன் முதலில் 1-7-1963 முதல் சென்னை நகரில் அறிமுகம் செய்யப்பட்டது. மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1-7-1971 முதலும் சென்னை புறநகர்ப் பகுதிகளுக்கு 1-7-1975 முதலும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது. வரிவிதிப்புக்கு உட்படும் நிலத்தின் 1-7-1971 ஆம் தேதி சந்தை மதிப்பு அடிப்படையில் நகர்ப்புற நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது. பின்னர் இச்சட்டம் நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 அமலில் உள்ள சேலம், கோவை, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி புறநகர்ப்பகுதிகளுக்கும், திருநெல்வேலி நகரப் பகுதிக்கும் 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

(2) இச்சட்டம் கீழ்க்கண்ட நகராட்சிகளுக்கும், நகரியங்களுக்கும் 1-7-1991 முதல் விரிவுபடுத்தப்பட்டது:

மயிலாடுதுறை, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, ஈரோடு, பொள்ளாச்சி, தஞ்சாவூர், திருப்பூர், தூத்துக்குடி, வேலூர்,



கும்பகோணம், உடுமலைப்பேட்டை, பழனி, காரைக்குடி, இராஜபாளையம், நாமக்கல், உதகமண்டலம், திண்டுக்கல், கரூர், நாகர்கோவில் ஆகிய நகராட்சிகளுக்கும் மற்றும் கொடைக்கானல், மேட்டூர் ஆகிய நகரங்கள். மேற்படி எல்லா பகுதி நிலத்திற்கும் 1-7-1981 நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொள்வதென ஆணையிடப்பட்டது.

(3) இந்தச் சட்டத்தின் பிரிவு 29-ல் கீழ்க்கண்ட நிலங்கள் விலக்களிக்கப்பட்டுள்ளதால் நகர்ப்புற நிலவரி விதிப்பு பொருந்தாது:—

1. பொது வழிபாட்டுக்கான நிலங்கள்
2. மத்திய, மாநில அரசு நிலங்கள்
3. மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள்
4. மயான பூமி நிலங்கள்
5. மத சார்பு செயல்களுக்காகப் பயன்படும் நிலங்கள்
6. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்
7. பொது பூங்காக்கள், நூலகங்கள் உள்ள நிலங்கள்
8. அருங்காட்சியக நிலம் மற்றும் அனாதை இல்லங்கள் உள்ள நிலங்கள்

அறக்கட்டளைகள் மற்றும் பிற நிறுவனங்கள் நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் சிரமம் இருப்பின் அரசுக்கு மனு செய்து கொண்டால் பரிசீலனை செய்யப்பட்டு, உரிய இனங்களில் அரசு, பிரிவு 27(1)-ன் கீழ் தகுதி அடிப்படையில் வரிவிலக்களித்து ஆணையிடும்.

(4) கீழ்கண்ட அமைப்புகளுக்கு சலுகைகளை அரசு அளித்துள்ளது:

1. சிறுதொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 சதவீதம் சலுகை; மற்றவைகட்கு 10 சதவீதம் சலுகை.
2. சங்கீத நாடக சபைகளுக்கு 50 சதவீதம் சலுகை
3. திரையரங்குகளுக்கு 10 சதவீதம் சலுகை.
4. குடிசைப் பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்கட்கு முழுச்சலுகை.

5. நகர்ப்புற நிலத்தில் கட்டிடம் இருந்து அது நிலத்தின் சொந்தக்காரரால் மட்டும் குடியிருக்கப் பயன்படுத்தப் பட்டால், விதிக்கும் நகர்ப்புற நிலவரியில் 50 சதவீதம் கழிவு தரப்படுகிறது.

5. வரிவிதிப்பு விகிதங்கள்

| சென்னை புறநகர்ப்பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் அனைத்தும். (1) | சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள நிலங்கள். (2) |
|---|---|
| 1. முதல் இரண்டு மனைகள் வரியில்லை. | 1. முதல் மூன்று மனைகள் வரியில்லை. |
| 2. இரண்டு மனைக்குமேல் ஐந்து மனைக்குள் சந்தை மதிப்பில் 0.7 சதவீதம். | 2. மூன்று மனைக்குமேல் ஏழு மனைக்குள் சந்தை மதிப்பில் 0.7 சதவீதம். |
| 3. ஐந்து மனைக்குமேல் பத்து மனைக்குள் 1 சதவீதம். | 3. ஏழு மனைக்குமேல் பத்து மனைக்குள் 1 சதவீதம். |
| 4. பத்து மனைக்குமேல் இருபது மனைக்குள் 1.5 சதவீதம். | 4. பத்து மனைக்குமேல் இருபது மனைக்குள் 1.5 சதவீதம். |
| 5. இருபது மனைக்குமேல் 2 சதவீதம். | 5. இருபது மனைக்குமேல் 2 சதவீதம். |

6. நகர்ப்புற நிலவரி தீர்ப்பாயங்களில் (சார்பு நீதிமன்றங்கள்) செய்து கொள்ளப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களை விரைவாகத் தீர்வு செய்யவும், அதனால் இவ்வழக்குகளில் தொடர்பு உள்ள மக்களுக்கு விரைவாகத் தீர்ப்பு கிடைக்கவும் நகர்ப்புற நிலவரி சட்டம் அமலில் உள்ள அந்தந்த மாவட்ட வருவாய் அதிகாரிகளைக் கொண்ட தீர்ப்பாயங்களை ஏற்படுத்திட அரசு 28-11-1997-ல் உத்தரவிட்டுள்ளது. சென்னை நகருக்கு சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து இணை ஆணையர் நகர்ப்புற நிலவரி தீர்ப்பாயமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

7. 1997-98 ஆம் நிதியாண்டில் 31-12-1997 வரை ரூ. 8.87 கோடி நகர்ப்புற நிலவரி வசூல் செய்யப்பட்டுள்ளது.



**12. வேளாண்மை வருமான வரி**

தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டில் வேளாண்மை வருமான வரி விதிப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, மலைத் தோட்டப் பயிர்களில் இருந்து பெறப்படும் வருமானத்திற்கு மட்டுமே வரிவிதிப்பு செயல் படுத்தப்பட்டது. பின்னர் 1958 ஆம் ஆண்டில் சட்டம் திருத்தம் செய்யப்பட்டு மலைத் தோட்டம் அல்லாத பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கும் வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டது. கேரளா, கர்நாடகா, அசாம், மேற்கு வங்காளம் ஆகிய நான்கு மாநிலங்களிலும் வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகிறது.

2. சிறு விவசாயிகட்கு நிவாரணம் அளிக்கும் முகத்தான் மலைத் தோட்டம் அல்லாத பயிர்களின்மீது வேளாண்மை வருமான வரி விதிப்பு 1-4-1992 முதல் முழுமையாக அகற்றப்பட்டது. இரப்பர், காபி, தேயிலை, ஏலக்காய், பாக்கு, கிராம்பு மற்றும் மிளகு ஆகிய மலைத் தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே வேளாண்மை வருமான வரிவிதிப்பு செய்யப்படுகிறது. 8 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை உடைய வரிதாரர்கள் மட்டுமே 1-4-1992 முதல் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் வரிவிதிப்புக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இணக்கமுறை வரிவிதிப்பின்கீழ் சாதாரண 8 ஏக்கர் வரை வரி விலக்களிக்கப்பட்டும் 50 ஏக்கர் வரை இணக்கமுறை அனுமதிக்கப்பட்டும் வருகிறது.

3. மலைத் தோட்டப் பயிரல்லாத இனங்களின் வருமான வரி நிலுவையினை 1-6-1992 முதல் வட்டாட்சியர் மூலமாக வசூலிக்க ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுய வரிவிதிப்புக்கும் மற்றும் முன்னதாக வரி செலுத்தும் முறைக்கும் 1992-93 வரி விதிப்பு ஆண்டு முதல் வழி வகை செய்யப்பட்டுள்ளது. ஆண்டு வருமானம் ரூ.28,000/-க்கு மேலிருந்தால், வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகிறது.

**13 நில அளவை, நிலப் பதிவுருக்கள் மற்றும் பராமரிப்பு**

நில அளவை மற்றும் நிலப் பதிவுருக்கள் துறை பொது மக்களுக்கு, அவர்களின் நில உடைமைகள் குறித்த தேவைகளைப் பொறுத்தவரையில் தொண்டு நோக்குடன் பணியாற்றி வருகிறது. விற்பனை மாற்றம், உரிமை வழி மாற்றம், அன்பளிப்பு, பரிமாற்றம், நீதிமன்ற ஆணை, பாகப்பிரிவினை முதலிய நிகழ்வுகள் மூலம் முறையான நில

[1998 ஏப்ரல் 21

உடைமைகளில் மற்றும் நில உடைமை எல்லைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு நிரந்தர நிலப் பதிவுருக்களில் பிரதிபலிக்கும் வகையில் பராமரிப்பதும் முறையான ஆய்வுகள் மற்றும் பராமரிப்பின் மூலம் இத்துறை நிலையான நிலப் பதிவுருக்களைப் பராமரித்தும் மேம்படுத்தியும் வருகிறது. வேளாண்மைப் பகுதிகள், நத்தம் பகுதிகள், மற்றும் நகரப் பகுதிகளில் எங்கெங்கு அவசியமோ, அங்கு முதல் நில அளவை, மறு நில அளவை அல்லது துணை நில அளவை ஆகியவற்றை இத்துறை மேற்கொள்கிறது.

2. முறையான பராமரிப்புப் பணியோடு கீழ்க்கண்ட திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன :

(1) நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாது பிறவற்றிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வேளாண்மை நிலங்களை அளவை செய்தல்.

(2) சென்னை (பழைய நகரம் நீங்கலாக) அனைத்து நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகளில் நகர அளவை செய்தல்.

(3) மாநிலத்தில் ஆறு மலைகளில் உள்ள மலைக்கிராமங்களின் வருவாய் பின் தொடர்பணி செய்தல்.

**நத்தம் அளவை:**

இத்திட்டப்பணி சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக 27 மாவட்டங்களில் பரவியுள்ள 190 வட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்ட 185 வட்டங்களில் 179 வட்டங்களில் புல அளவைப்பணி முடிக்கப்பட்டுள்ளது. 6 வட்டங்களில் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சிய 5 வட்டங்களில் இப்பணி நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. 28-2-1998 முடிய 4463 ச.கி.மீ. பரப்பில் அளவைப்பணி முடிவுற்று 4371 ச.கி.மீ. பரப்பிற்கான ஆவணங்கள் நிலவரித்திட்டத் தொடர் பணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**நகர அளவை:**

ஒவ்வொரு பகுதியிலும், மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளின் தன்மையையொட்டி, நகர அளவைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாட்டில் 6 மாநகராட்சிகளும், நகரியங்களை உள்ளடக்கிய



1998 ஏப்ரல் 21]

நகராட்சிகளும் உள்ளன. இவற்றில் 30 நகராட்சிகளில் முதல் நகர அளவையும் 77 நகராட்சிகளில் துணை நகர அளவையும் 6 மாநகராட்சிகளில் முதல் நகர அளவை மற்றும் துணை நகர அளவையும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

2. 27 மாவட்டங்களில் பரவியுள்ள 77 நகரங்களிலும் 6 மாநகராட்சிகளிலும் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 56 நகரங்களிலும், ஒரு மாநகராட்சி மற்றும் 1 மாநகராட்சியின் ஒரு பகுதியிலும், நில அளவையின் ஒரு பகுதியான புல அளவைப்பணி முடிக்கப்பட்டுள்ளது. 21 நகரங்களிலும், 4 மாநகராட்சிகளிலும் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாது பயன்படுத்தப்படும் வேளாண்மை நிலங்களின் நில அளவைப்பணி முடிவுறும்பொழுது எஞ்சிய 30 நகரங்கள் மற்றும் ஒரு மாநகராட்சியில் இப்பணி நடப்பு நிதியாண்டில் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

3. 28-2-1998 வரையில் 1433 ச.கி.மீ. பரப்பிற்கு அளவைப்பணியும் 1308 ச.கி.மீ. பரப்பிற்கு தனி அலுவலர் இறுதித் தணிக்கைப் பணி மற்றும் நிலவரித்திட்டத் தொடர் பணி மேற்கொள்ள ஆவணங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**மலைக்கிராம அளவை:**

வேலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், சேலம், நாமக்கல் மற்றும் கோவை மாவட்டங்களில் கீழ்க் குறிப்பிட்ட ஆறு மலைகளில் பரவியுள்ள 66 கிராமங்களில் மலை அளவை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது:-

(1) ஜவ்வாது மலை

(2) ஏலகிரி மலை

(3) பச்சை மலை

(4) கொல்லி மலை

(5) அரநூத்து மலை மற்றும்

(6) ஆனை மலை.

மேற்கண்ட 66 மலைக்கிராமங்கள் அனைத்திலும் புல அளவைப் பணியில் நில அளவை சம்பந்தப்பட்ட பணிமுடிக்கப்பட்டுள்ளது. 28-2-1998 வரையில் 861 ச.கி.மீ. பரப்பிற்கு புல அளவைப் பணியும், 858 ச.கி.மீ. பரப்பிற்கு நிலவரித்திட்டத் துறைக்கு ஆவணங்கள் ஒப்படைக்கும் பணியும் முடிக்கப்பட்டுள்ளன.

[1998 ஏப்ரல் 21

**வருவாய் பதிவுகள், பதிவேடுகள் பராமரித்தல்:**

கிராம மட்டத்திலிருந்து மாநில அளவு வரை எல்லைகளை அடையாளம் காண்பதற்கு உன்னிப்பான மற்றும் தொடர்ச்சியான நில அளவைப் பராமரிப்புப்பணி மிக அவசியமான ஒன்றாகும். பொது மக்களுக்கு நமது உடைமைகள் குறித்த புல எல்லையைத் தெரிந்து கொள்ள இத்துறை உதவி செய்கிறது. மேலும், வருவாய்க் கணக்குகளில் அவர்களது உடைமைகளைப் பதிவு செய்தல் மற்றும் பாகப் பிரிவினைகள் ஏற்படும்போது அவை தொடர்பாக ஏற்படும் மாற்றங்களைப் நிலஅளவைப் பதிவேடுகளில் பதிவுகள் செய்தல் மற்றும் உரிய கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு புலப்பட நகல்கள் வழங்குதல் ஆகிய பணிகளை இத்துறை செய்கிறது.

2. மாநிலத்தில் 25 மாவட்டங்களில், மாவட்ட நிலஅளவை அலகு அலுவலகங்கள் அமைந்துள்ளன. மாநிலத் தலைமையிடத்தில் ஒரு மத்திய நிலஅளவை அலுவலகமும் செயல்பட்டு வருகிறது. பொது மக்களுக்குத் தேவைப்படும் தகவல்கள் மாவட்ட நிலஅளவை அலுவலகங்களில் உள்ளன. மேலும், பொது மக்களுக்குத் தேவையான கிராமப்படங்கள், வட்டப்படங்கள், மாவட்டப் படங்கள், சுற்றுலா வரைபடங்கள் மற்றும் பெருவழிப்பாதைகளைக் காட்டும் பல்வகையான படங்களும், மாவட்டங்கள் மற்றும் சென்னை மத்திய நிலஅளவை அலுவலகத்தில் உள்ள விற்பனை முகப்புகள் மூலம் குறைந்த விலையில் பொது மக்களுக்குக் கிடைக்குமாறு வகை செய்யப்பட்டுள்ளது.

**அச்சக வசதிகள்:**

சென்னை எழிலகத்தில் உள்ள நில அளவை மத்திய அலுவலகத்தில் வரைபடங்களை அச்சிடுவதற்கான வசதிகள் அமைந்துள்ளன. வரைபடங்கள் கருப்பு, வெள்ளை மற்றும் ஆறு வண்ணங்களிலும் அச்சிடப்படுகின்றன. மேலும், இத்துறை எவ்வித லித்தோ பணியையும் மேற்கொள்ளும் அளவிற்கு நன்றாக அமைந்துள்ளது.

2. நிழற்பட அச்சு மூலமோ, ஆப்செட் அச்சிடும் முறை மூலமோ வரைபடங்கள் தயாரிப்பதற்கு நவீன தொழில்நுட்ப உத்திகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. பிளான் பிரிண்டர் மற்றும் கம்ப்யூட்டர் போன்றவற்றின் மூலம் பட நகல்களைத் தயாரிக்கும் நவீன முறைகளை இத்துறை ஏற்கெனவே அறிமுகப்படுத்தியுள்ளது.



1998 ஏப்ரல் 21]

**நில அளவைப் பயிற்சி நிலையம்:**

வருவாய்த்துறை சார் பணியாளர்கள், பயிற்சி பெறும் துணை ஆட்சியர்கள், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மற்றும் இதர துறை மற்றும் அரசுக் கழகங்களைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் முழு அளவில் நில அளவைப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, நிலஅளவைப் பயிற்சி நிலையம் ஒன்று தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் நிறுவப்பட்டுள்ளது. வானவியல் அளவை மற்றும் கார்டோகிராப் போன்ற அளவை முறைகளில் சிறப்புப் பயிற்சியும், தேர்வு செய்யப்பட்ட சிலருக்கு அளிக்கப்பட்டுள்ளது. விண்கோள் மூலம் தொலை தூரத்தை அளந்து நிலப்படம் வரைவதிலும், பயிற்சி வழங்குவதற்கு வசதியாக இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி உள்ளமைப்புகளை வலுப்படுத்துவதிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

2. வருவாய் நிர்வாகத் துறையில் செய்தது போல நில அளவை மற்றும் பதிவேடுகள் துறையில் பணிபுரியும் உதவி இயக்குநர்கள், நில அளவை ஆய்வாளர்கள் ஆகியோருக்கு அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது.

**நிலப்பதிவுருக்களை கணிப்பொறி மயமாக்குதல்**

மாவட்ட நிர்வாகம் மற்றும் நில உடமை மேம்பாடு போன்றவற்றை நவீனமயமாக்கும் பகுதியாக மைய அரசின் நூறு சதவிகித நிதி உதவியுடன் மாநிலத்தின் அனைத்து வட்டங்களிலும் நிலப்பதிவுருக்களை கணிப்பொறி மயமாக்குவதென அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது. அரசு இதனை சேலம் மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

2. ஒன்பது கிராமக் கணக்குகள் மற்றும் பதினைந்து வட்டப் பதிவேடுகள் கணிப்பொறி மயமாக்க அடையாளமாக எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டத்தினை அமுலாக்கம் செய்வதற்காக மத்திய அரசு இதுவரை ரூ.513/- இலட்சத்திற்கு நிதி வழங்கியுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.285/- இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

3. தேசிய தகவல் மையம் கணிப்பொறிகளை வழங்கியுள்ளது. மாவட்டத் தலைமையகங்களில் முடிவிடங்களுடன் கூடிய

[1998 ஏப்ரல் 21

கணிப்பொறிகள் நிறுவப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் அடிப்படை விவரப் பதிவுகள் முற்றுப்பெற்றுள்ளன. திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயமுத்தூர் மற்றும் தஞ்சை மாவட்டங்களில் இப்பணியில் முன்னேற்றம் காணப்படுகிறது. ஏனைய மாவட்டங்களில் இடம் தெரிவு செய்தல், பயிற்சி அளித்தல் போன்ற ஆயத்தப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான கணிப்பொறி மென்பொருட்களை மேம்படுத்தி வைத்துக் கொள்ளுமாறு மத்திய அரசு கோரப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் 2000-ஆம் ஆண்டிற்குள் நிலப் பதிவுருக்கள் கணிப்பொறி மயமாக்கப்பட்டுவிடும்.

**வருவாய்த்துறை நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிலப்பதிவுருக்களை மேம்படுத்துதல்**

வருவாய்த்துறை நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிலப்பதிவுருக்களை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 50 : 50 என்ற அடிப்படையில் (மாநில மற்றும் மத்திய அரசு) உதவியளிக்கிறது. இதுவரை ரூ. 722.06 இலட்சம் இத்திட்டத்திற்காக (மாநில அரசின் பங்கையும் சேர்த்து) கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது :—

| | | (ரூபாய்) |
|---|---|---|
| 1989-90 | ... | 200.00 இலட்சம் |
| 1990-91 | ... | 20.00 இலட்சம் |
| 1991-92 | ... | 148.00 இலட்சம் |
| 1992-93 | ... | 125.76 இலட்சம் |
| 1993-94 | ... | 150.70 இலட்சம் |
| 1995-96 | ... | 77.60 இலட்சம் |
| | | 722.06 இலட்சம் |

இத்தொகை, நவீன உபகரணங்கள் வாங்கவும், பயிற்சி உள்ளமைப்புகளை வலுப்படுத்தவும், கட்டிடம் கட்டுவதற்கும் பயன்படுத்தப்படும். இதுவரை இவ்வகையில் ரூ.641/- இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 21]

**14. வறட்சி நிவாரணம்**

1996-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வடகிழக்கு மாவட்டங்களில் மழையும் வெள்ளமும் இருந்தது. ஆனால் தென் மாவட்டங்களில் போதிய அளவு மழை பெய்யவில்லை. எனவே, பிப்ரவரி '97 முதல் தென் மாவட்டங்களில் வறட்சி நிலவியது. தென் மாவட்டங்களில் நிலவிய வறட்சி நிலைமையை ஆய்வு செய்து, அரசு ரூ.26.44 கோடியை வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்க மார்ச் 1997 முதல் செப்டம்பர் 1997 வரை பின்வரும் 15 மாவட்டங்களுக்கு ஒப்பளிப்பு அளித்துள்ளது.

| வ.எண் | மாவட்டம் | ஒப்பளிப்பு செய்த தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | கன்னியாகுமரி | 1.300 |
| 2. | தூத்துக்குடி | 4.905 |
| 3. | திருநெல்வேலி | 3.565 |
| 4. | விருதுநகர் | 3.025 |
| 5. | சிவகங்கை | 2.325 |
| 6. | மதுரை | 2.005 |
| 7. | தேனி | 1.010 |
| 8. | இராமநாதபுரம் | 2.040 |
| 9. | திண்டுக்கல் | 1.850 |
| 10. | புதுக்கோட்டை | 0.500 |
| 11. | திருச்சிராப்பள்ளி | 1.200 |
| 12. | பெரம்பலூர் | 0.700 |
| 13. | தருமபுரி | 0.800 |
| 14. | நாமக்கல் | 0.215 |
| 15. | சேலம் | 1.000 |
| | | 26.440 |

மேலே கூறப்பட்ட ரூ.26.44 கோடியில், ரூ.1.45 கோடி ரூபாய் தண்ணீர் வழங்க மாவட்டங்களில் லாரிகள் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. 23-2-1998 வரையில் ரூ.24.34 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 21

எடுத்துக்கொண்ட மற்றும் முடித்த வேலைகள் விவரம்

| வ.எண். | வேலைகள் விவரம் | முடிக்கப்பட்டவை |
|---|---|---|
| 1. | ஆழ்குழாய் கிணறுகள் | 5078 |
| 2. | ஆழ்குழாய் கிணறு மற்றும் நீரேற்று இயந்திரம் பழுது பார்த்தல் மற்றும் மாற்றியமைத்தல் | 5054 |
| 3 | திறந்த வெளிக்கிணறுகள் அமைத்தல்/ திறந்தவெளிக் கிணறுகளை ஆழப்படுத்துதல்/ வட்டக்கிணறுகள் அமைத்தல்/புதிய திறந்த வெளிக்கிணறுகளை அமைத்தல் | 624 |
| | மொத்தம் | 10756 |

**15. வெள்ள நிவாரணம்**

தமிழகத்தில் அக்டோபர்-டிசம்பர் திங்களில் வடகிழக்குப் பருவமழை தீவிரமாக இருந்தது. குறைந்த காற்றழுத்த மண்டலம் ஒன்று தென்மேற்கு வங்கக் கடலில் வட தமிழ்நாடு மற்றும் இலங்கையை ஒட்டிய பகுதியில் 14-10-1997-இல் உருவாகியது. அது 8-11-1997 வரை அதே இடத்தில் நிலைகொண்டு பின்னர் தமிழகத்தை கடந்து அரபிக் கடலில் இலட்சத்தீவில் மையம் கொண்டது. இந்த குறைந்த காற்றழுத்த மண்டலத்தால் தமிழகத்தில் பல மாவட்டங்களில் நல்ல மழை பெய்தது. தென் வங்கக் கடலில் டிசம்பர் திங்கள் 2-ஆம் நாள் மற்றொரு குறைந்த காற்றழுத்த 'தாழி' (TROUGH) உருவாகி அதன் காரணமாக தமிழகத்தின் வடக்கு கடலோரப் பகுதிகளிலும் சென்னை மாநகரிலும் 9-12-1997 வரை மிகக் கடுமையான மழை பெய்தது. தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் சென்னை மாவட்டங்கள் வெள்ளத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

2. இடைவிடாது தொடர்ந்து பெய்த மழையினால், பயிர்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டன. மேலும் மனித உயிர்களுக்கும் வேளாண்பயிர்களுக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டது. மேற்படி சேதம் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது :



1998 ஏப்ரல் 21]

| | | |
|---|---|---|
| (அ) மனித உயிரிழப்பு | ... | 234 |
| (ஆ) கால்நடை உயிரிழப்பு | ... | 631 |
| (இ) முழுவதும் மற்றும் பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகள் | ... | 1,04,420 |
| (ஈ) வெள்ளத்தினால் சூழப்பட்ட குடிசைகள் | ... | 4,49,655 |
| (உ) பயிர்கள் சேதம் | ... | 1,33,000 ஹெக்டேர் |

இவையல்லாது இப்பெருமழையினால் நெடுஞ்சாலைகள், பாசன நீர்நிலைகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவைகளும் சேதமடைந்தன.

3. தற்காலிகப் புனரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ள, மாநில அரசு ரூ.58.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. மேலும் அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளின் தீவிர கண்காணிப்பில், போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

4. 1997-ஆம் ஆண்டு வெள்ளத்தின்போது வழங்கப்பட்ட நிவாரணத் தொகையின் அளவு பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| (1) மனித உயிரிழப்பு | ரூ.15,000 |
| (2) கால்நடை உயிரிழப்பு: | |
| முதிர்ந்த பசு, எருது மற்றும் எருமைக்கு | ரூ.5,000 |
| பசு, மற்றும் எருமை இவற்றின் கன்றுகளுக்கு | ரூ 3,000 |
| வெள்ளாடு மற்றும் செம்மறியாட்டிற்கு | ரூ.1,000 |
| (3) முழுவதும் அல்லது பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு (மாநிலம் முழுவதும்) | ரூ.1,000 |
| (4) சென்னை மாவட்டத்தில் தண்ணீரால் சூழப்பட்ட குடிசைகளுக்கு | ரூ. 500 |
| (5) இதர மாவட்டங்களில் தண்ணீரால் சூழப்பட்ட குடிசைகளுக்கு | ரூ.300 |

[1998 ஏப்ரல் 21

(6) முழுவதும் பாதிக்கப்பட்ட வேளாண்மைப் பயிர்கள்:

(ஹெக்டேர் ஒன்றுக்கு)

| | |
|---|---|
| நெற்பயிர் | ரூ. 1,000 |
| நிலக்கடலை | ரூ. 2,500 |
| கரும்பு | ரூ. 4,000 |
| பயறுவகைகள் | ரூ. 600 |
| பருத்தி | ரூ. 1,500 |
| சிறுதானியங்கள் (சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம்) | ரூ. 400 |

(7) முழுவதும் பாதிக்கப்பட்ட தோட்டப்பயிர்கள்:

(ஹெக்டேர் ஒன்றுக்கு)

| | |
|---|---|
| (அ) உருளைக்கிழங்கு, கோஸ், காரட், மிளகாய், வெங்காயம், காலிபிளவர், பூண்டு, மஞ்சள், வெற்றிலை, வாழை, திராட்சை, கொய்யா, சப்போட்டா, இலவங்கம், இலவம்பஞ்சு, முந்திரி, காபி, ஏலக்காய், சாமந்தி, வாடாமல்லி, மல்லிகை, டியூபர்-ரோஸ், அரளி, ஸ்ட்ராபெரி | ரூ.4,000 |
| (ஆ) தக்காளி, சௌவ்-சௌவ், பட்டாணி, பாகற்காய், அவரை, முள்ளங்கி, பீட்ரூட், பீன்ஸ் | ரூ.2,000 |
| (இ) கத்திரி, வெண்டை, கொத்தமல்லி, மரவள்ளிக்கிழங்கு | ரூ.1,000 |

5. மேலும் கடலோர மாவட்டங்களில் அமைந்துள்ள 91 புயல் பாதுகாப்பு இல்லங்களைச் செப்பனிட ரூ. 87.50 இலட்சம் அரசு அனுமதித்து, அப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**16. நலத்திட்டங்கள்**

**விபத்து நிவாரணத் திட்டம்:**

தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தினால் இறக்க நேரிடும் அல்லது காயங்களினால் அங்கங்களை இழக்க நேரிடும் ஏழைத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக ஒருங்கிணைந்த விபத்து நிவாரணத் திட்டம் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்குவதற்கு ஆண்டு வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. தொழிலில் ஈடுபட்டிருக்கையில் இறக்க நேரிடும் ஏழைத் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு ரூ. 15,000 வழங்கப்படுகிறது. விபத்தில் உடல் ஊனமடைந்தவர்களுக்கு ரூ. 5,000 முதல் ரூ. 10,000வரை அவர்களின் ஊனத்திற்கேற்றவாறு நிவாரணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை முதலில் அமுல்படுத்தியபோது 22 வகையான ஏழைத் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற சேர்க்கப்பட்டிருந்தனர். தற்போது 44 வகை ஏழைத் தொழிலாளர்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.





2. இத்திட்டத்தின் கீழ், 1990-91 முதல் 1997-98 வரை கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது:-

| வ.எண். | ஆண்டு. | குடும்பங்கள் பயனடைந்தோர் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட நிதியுதவி (ரூ.) |
|---|---|---|---|
| 1. | 1990-91 | 998 | 88,65,000 |
| 2. | 1991-92 | 1,081 | 91,36,000 |
| 3. | 1992-93 | 961 | 70,00,000 |
| 4. | 1993-94 | 991 | 66,06,000 |
| 5. | 1994-95 | 1,024 | 89,74,000 |
| 6. | 1995-96 | 1,836 | 2,00,89,000 |
| 7. | 1996-97 | 1,548 | 1,33,41,000 |
| 8. | 1997-98 (12/97 வரை) | 815 | 86,43,000 |

**தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டம்**

தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் வறிய நிலையில் உள்ள ஏழைக் குடும்பத்தில், பொருளீட்டும் குடும்பத் தலைவர் எதிர்பாராத தருணத்தில் இறக்கும் பட்சத்தில், அன்னாரின்

[1998 ஏப்ரல் 21

குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்நிதியுதவி பெறுவதற்கு ஆண்டு வருமானம் அனைத்து வகையிலும் ரூ. 7,200-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு ரூ. 7,500 நிதியுதவி வழங்கப்படுகிறது.

2. இத்திட்டத்தின் கீழ், 1990-91 முதல் 1997-98 வரை கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது:-

| வ.எண். | ஆண்டு. | குடும்பங்கள் பயனடைந்தோர் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட நிதியுதவி (ரூ.) |
|---|---|---|---|
| 1. | 1990-91 | 22,154 | 6,36,65,000 |
| 2. | 1991-92 | 22,161 | 6,69,56,000 |
| 3. | 1992-93 | 39,087 | 12,66,39,335 |
| 4. | 1993-94 | 36,835 | 15,62,00,000 |
| 5. | 1994-95 | 19,296 | 11,48,90,295 |
| 6. | 1995-96 | 54,762 | 24,56,39,000 |
| 7. | 1996-97 | 61,755 | 30,88,62,970 |
| 8. | 1997-98 (12/97 வரை) | 28,150 | 21,08,25,000 |

### 17. தீ விபத்துகள்

தீ விபத்து ஏற்படும்போது துரித நிவாரணமாக முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 1,000மும், பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.500-ம் வழங்கப்படுகிறது. இவை போக 5 கிலோ அரிசியும், 1 லிட்டர் மண்ணெண்ணெய் (72 மணி மற்றும் அதற்கு மேல் மின்தடங்கல் ஏற்பட்டிருக்குமாயின்), 1 வேட்டி அல்லது 1 லுங்கி மற்றும் 1 சேலை முதலியன பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படுகின்றன.



1998 ஏப்ரல் 21]

2. தீ விபத்துகளில் மனித உயிர் இழப்பு ஏற்பட்டால், இறந்தவர் பொருளீட்டும் நபராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் எந்தவித பாகுபாடுமின்றி இறந்தவர் குடும்பத்துக்கு கருணைக் கொடையாக ரூ. 15,000 வழங்கப்படுகிறது. தீ விபத்தில் இறக்கும் குழந்தைகளுக்கும் இது பொருந்தும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கருவூல விதி 27-ன்படி தேவையான பணத்தைப் பெற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

3. தீ விபத்தில் இறக்கும் கால்நடைகளைப் பொறுத்தவரை கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:-

| | | |
|---|---|---|
| (1) | பசு, காளை மற்றும் எருமை ஒன்றுக்கு | ரூ. 5,000/- |
| (2) | பசு, மற்றும் எருமை ஆகியவற்றின் கன்று ஒன்றுக்கு | ரூ.3,000/- |
| (3) | செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு ஒன்றுக்கு | ரூ.1,000/- |

*****

D V211,31'N98 N98·461
218457